பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

268

ஐப்பசி
01.10.2025

100/-

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

ஐங்கரன் விக்கினேஸ்வரா

கே.மோகனாம்பாள்

ந.இரவீந்திரன்

கோகிலா மகேந்திரன்

தமிழ்க்கவி

ஸ்ரீரஞ்சனி

மண்டைதீவு கலைசசெல்வி

கே.எஸ்.சுதாகர்

பா.சிவானந்தி

ஜலீலா முஹம்மில்

நஸீரா எஸ் ஆப்தீன்

சிவகௌரி

எ.மிலானி

மனொகரி ஜெகதீஸ்வரன்

இதயராசா

குரு அரவிந்தன்

அருண்மொழி வர்மன்

கனிவு மதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

கலை இலக்கிய மாத சஞ்சிகை

2025 - ஐப்பசி (01.10.2025)

# பொருளடக்கம்

## சிறுகதைகள்

ஸ்ரீரஞ்சனி - 05
மண்டைத்தீவு கலைச்செல்வி - 12
கே.எஸ்.சுதாகர் -23
பா.சிவானந்தி - 34

## கவிதைகள்

ஜலீலா முஹம்மில் - 08
நஸீரா எஸ்.ஆப்தீன் - 16
சிவகௌரி - 17
எ.மிலானி - 17
மனோகரி ஜெகதீஸ்வரன் - 33
இதயராசா - 40



## நேர்காணல்

குருஅரவிந்தன் - 18

## நூல் விமர்சனம்

அருண்மொழிவர்மன் - 20



## தொடர் நாவல்

தமிழ்க்கவி - 39

## உள் ஓவியங்கள்

கனிவுமதி

## கட்டுரைகள்

**லாஸ்லோ கிராஸ்னஹோர்காவிற்கு இலக்கிய நோபல் பரிசு: இருண்ட உண்மைகளை வெளிப்படுத்திய படைப்புகள்!**
ஐங்கரன் விக்கினேஸ்வரா - 03



**கவிமணி தேசிய விநாயகம்பிள்ளையின் கவிதைகள் ஒரு சிறப்பாய்வு**
கே.மோகனாம்பாள் - 11

**நேற்றில் கரைந்தோடும் இன்றிலிருந்து - 08**
ந.இரவீந்திரன் - 13

**ஆளுமையின் ஆட்சி, அகற்சியும் ஆழமும் - 04**
கோகிலா மகேந்திரன் - 36




2025 ஆம் ஆண்டுக்கான சாகித்திய ரத்தினா விருதை பிரபல எழுத்தாளர் அல் அஸூமத் பெற்றுள்ளார். அவருக்கு ஜீவநதியின் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

**2025 ஐப்பசி இதழ் - 268**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**ஆசீர்வதிப்பவர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா
தில்லைநாதன் கோபிநாத்

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 3000/=
வெளிநாடு - $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY


# ஜீவநதி

## (கலை இலக்கிய மாத சஞ்சிகை)

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
– பாரதிதாசன்–

## நூலக மாதம்

ஈழத்தில் ஐப்பசி மாதம் நூலக மாதமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இம்மாதத்தில் பாடசாலைகள், நூலகங்கள் தோறும் நூலக மாதப் போட்டிகள் வாசகர்களிடையே மேற் கொள்ளப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றன. பாடசாலைகள் ஒரு நாள் நூலக தினத்தைக் கொண்டாடி மகிழ்கின்றது. வித்துவம் வாய்ந்த ஒருவர் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டு உரையாற்ற வைக்கப்படுகின்றார். இதுவே சில நூலகங்களின் செயற்பாடுகளாகவும் அமைகின்றன. பல நூலகங்கள் தங்கள் நூலகங்களில் உள்ள நூல்களை ஒரு நாள் வாசகர்களுக்கு காட்சிப்படுத்தி மகிழ்கின்றது. சுன்னாகம் நூலகம் ஒவ்வொரு ஆண்டும் இவ்வாறான செயற்பாடுகளை மிகச் சிறப்பாக அண்மைக்காலமாக மேற் கொண்டு வருகின்றது. குறிப்பாக இக்காலத்தில் எங்கட புத்தகங்கள் கண்காட்சியையும் சுன்னாகம் நூலகம் ஏற்பாடு செய்து வாகர்களை மகிழ்விக்கின்றது. எங்கட புத்தகம், புத்தகப் பண்பாட்டுப் பேரவை போன்ற இலக்கிய அமைப்புகள் பல இடங்களில் கண்காட்சிகளை ஒழுங்கு செய்து வாசகர்களுக்கு நல்ல நூல்களை அறிமுகம் செய்யும் பண்பாட்டையும் மேற் கொண்டு வருகின்றன; பாராட்டிற்குரியது. இவ்வேளை சில நூலகங்கள் சின்னப்பிள்ளைத் தனமாக நடப்பதையும் காண முடிகின்றது. உதாரணமாக கண்காட்சி என்ற பெயரில் பாடப்புத்தகங்களை காட்சிப்படுத்துவதும், சிறுவர்கள் நிகழ்ச்சி செய்கின்றோம் என்ற பெயரில் காத்திரமாக அமையாத செயற்பாடுகளையும் மேற் கொண்டு வருகின்றன. தற்போதுள்ள முகப்புத்தக வசதிகள் ஊடாக ஒன்றுமில்லாத ஒன்றை பெரிதாக காட்சிப்படுத்தும் செயற்பாட்டை சில நூலகங்கள் மேற் கொண்டு வருகின்றன. குறித்த நூலகங்கள் எந்த விதமான புது நூல்களையும் கொள்வனவு செய்வது கிடையாது. பழைய நூல்களுடன் கண்துடைப்பு நாடகங்களுடன் பயணிக் கின்றது. ஈழத்தில் தினமும் எங்கோ ஓர் இடத்தில் இருந்து ஒரு நூலாவது வெளிவந்து கொண்டிருக்கின்றது. இவற்றில் சிலவற்றையாவது அல்லது தமது பிரதேசத்தவர்களது நூல்களையாவது இந்த நூலகங்கள் கொள்வனவு செய்து ஆவணப்படுத்த முயல வேண்டும். புத்தகப்பண்பாட்டை மக்களிடையே பரப்ப வேண்டும். வருடத்திற்கு ஒரு முறை வரும் தீபாவளி, பொங்கல் கொண்டாட்டம் போல் நூலக மாதத்தில் ஒரு தினத்தை கொண்டாடாமல் நல்லறிவு மிக்க சமுதாயத்தை கட்டி எழுப்பும் நோக்குடன் நூலகங்கள் செயற்பட வேண்டும். பாடசாலை நூலகங்கள் மாணவர்களது வாசிப்புச் செயற்பாட்டை ஊக்குவிக்க வேண்டும். வெறும் பாடப்புத்தகங்களை கற்பித்து பரீட்சை நோக்கிலான கல்வியை கொடுப்பதன் மூலம் எந்த பயனும் உருவாகப் போவதில்லை. பரந்த அறிவு வளர்ச்சிக்கு நூல்களின் வாசிப்பும் தேடலும் அவசியமானது என்பதை அனைவரும் அறிந்து செயற்பட வேண்டும்.

– க.பரணீதரன்

ஜீவநதி கிடைக்கும் இடங்கள் / விற்பனையில்உதவும் நல்லுள்ளங்கள்
பரணீ புத்தகக்கூடம் - நெல்லியடி
புத்தகக் கூடம் - திருநெல்வேலி
பூபாலசிங்கம் - யாழ்ப்பாணம்
பூபாலசிங்கம் - செட்டித்தெரு, கொழும்பு
அ.யேசுராசா, நா.நவராஜ், சி.ரமேஷ், கந்தர்மடம் அ.அஜந்தன்,
புத்தகப்பண்பாட்டுப் பேரவை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# லாஸ்லோ கிராஸ்னஹோர்காவிற்கு இலக்கிய நோபல் பரிசு: இருண்ட உண்மைகளை வெளிப்படுத்திய படைப்புகள்!



ஹங்கேரிய கம்யூனிச ஆட்சியின் இறுதிக் காலங்களில் எழுதத் தொடங்கிய லாஸ்லோ அந்தக் காலகட்டத்தின் சமூகச் சிதைவு, நம்பிக்கையின்மை, அதிகாரத்தின் ஆதிக்கம் ஆகியவை இவரது ஆரம்ப காலப் படைப்புகளில் ஆழமாகப் பதிந்தன.

லாஸ்லோ கிராஸ்னஹோர்காயின் எழுத்துலகம், வாசகர்களை ஆழமான சிந்தனைக்கும், நவீன உலகின் இருண்ட உண்மைகளுக்கும் இட்டுச் செல்லும் ஆற்றல் கொண்டது. அவரது இலக்கிய நடையின் தனித்துவமும், எழுத்து நடை மிகவும் தனித்துவமானது, சவாலானது, ஆனால் அதீத அழகு கொண்டது என்று விமர்சகர்கள் கூறுகின்றனர்.

**இலக்கிய நோபல் பரிசு :**

2025 ஆம் ஆண்டுக்கான இலக்கியத்திற்கான நோபல் பரிசு ஹங்கேரிய எழுத்தாளரான லாஸ்லோ கிராஸ்னஹோர்காய் (László Krasznahorkai) அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நோபல் விருதுக்கான முக்கிய காரணம் அவரது படைப்புகளின் மீதான நம்பிக்கையை பெரிதும் உலகளாவிய நிலையில் அறிய வைத்துள்ளது. லாஸ்லோ கிராஸ்னஹோர்காய், ஐரோப்பிய இலக்கியத்தில் தாமஸ் பெர்ன்ஹார்ட் மற்றும் ஃபிரான்ஸ் காஃப்கா போன்ற எழுத்தாளர்களின் வரிசையில் வைக்கப்படுகிறார்.

அத்துடன் இவரது படைப்புகளின் மிக முக்கியமான அம்சம், நீளமான, வளைந்து நெளிந்து செல்லும் வாக்கியங்கள் மற்றும் குறைந்த பத்திப் பிரிவுகளாகும். சில நேரங்களில் இவரது நாவல்களில் ஒரு சில வாக்கியங்கள் மட்டுமே ஒரு முழு அத்தியாயத்தைக் கொண்டிருக்கலாம்.

அதேபோல லாஸ்லோவின் நாவல்கள் பொதுவாக இருண்ட மற்றும் தீவிரமான உலகப் பார்வையை, குறிப்பாக சமூகத்தின் சரிவு, மனிதனின் பலவீனம் மற்றும் நவீன உலகின் குழப்பம் ஆகியவற்றை ஆராய்கின்றன.

நோபல் பரிசை வழங்கும் சுவீடிஷ் அகாடமி, கிராஸ்னஹோர்காய்க்கு இந்தப் பரிசை, கலையின் சக்தியை மீண்டும் உறுதிப்படுத்தும், அவரது கட்டாயப்படுத்தும் மற்றும் தொலைநோக்குடைய ஒட்டுமொத்தப் படைப்புக்காக வழங்கியதாக அறிவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**திரைப்பட உலகில் லாஸ்லோ:**

லாஸ்லோ *1954* ஆம் ஆண்டு ஹங்கேரியின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள கியூலா (Gyula) என்ற சிறிய நகரில் பிறந்தார். சட்டம் மற்றும் மொழியியல் துறைகளில் கல்வி பயின்றவரின் படைப்புகளில் காணப்படும் அமைப்பியல் சார்ந்த ஒழுங்குக்கும், வார்த்தைகளின் துல்லியமான பயன்பாட்டிற்கும் சிறந்த முன்னோடியாக விளங்குகிறார்.

புகழ்பெற்ற ஹங்கேரிய திரைப்பட இயக்குநரான பெலா தார் (Béla Tarr) என்பவருடன் கிராஸ்னஹோர்காய் நீண்டகாலக் கூட்டுப்பணி வைத்திருந்தார்.

லாஸ்லோவின் பல நாவல்கள் குறிப்பாக Sátántangó *மற்றும்* The Melancholy of Resistance பெலா தாரால் உலகப் புகழ் பெற்ற திரைப்படங்களாக எடுக்கப் பட்டன. இந்தத் திரைப்படங்களும் இவரது எழுத்துக் களைப் போலவே நீளமான ஓட்டம் கொண்டதாகவும், இருண்டதாகவும் அமைந்தன.



ஹங்கேரியின் குழப்பமான அரசியல் சூழலில் இருந்து விலகி, கிராஸ்னஹோர்காய் சீனாவிற்கும் ஜப்பானுக்கும் விரிவாகப் பயணம் செய்தார். இந்தப் பயணங்களின் உந்துதலில், இவர் அமைதியான, தியானம் நிறைந்த தொனியில் நாவல்களை எழுதத் தொடங்கினார்.

*2008*இல் 'Seiobo There Below" என்ற இவரது படைப்பு, கலைப்படைப்பு, அழகு மற்றும் வாழ்வின் நிலையற்ற தன்மை பற்றி ஆராயும் 17 கதைகளின் தொகுப்பாகும். நோபல் பரிசுக்கு முன்னதாகவே, இவர் சர்வதேச அளவில் பல முக்கிய விருதுகளை வென்றுள்ளார் என்பது கவனிக்கத்தக்கது.

மேலும் *2015* மான் புக்கர் சர்வதேசப் பரிசு இவரது ஒட்டுமொத்தப் படைப்பிற்காக இந்த உயரிய விருதைப் பெற்றார் என்றும் கூறப்படுகிறது. *2019* ஆண்டில் தேசியப் புத்தக விருது "Baron Wenckheim's Homecoming" நாவலுக்காக இந்த விருதைப் பெற்றார்.

அத்துடன் லாஸ்லோ ஹங்கேரியில் இருந்து இலக்கியத்திற்கான நோபல் பரிசை வென்ற இரண்டாவது எழுத்தாளர் ஆவார். இதற்கு முன்னதாக *2002* இல் இம்ரே கெர்டெஸ் (Imre Kertész) வென்றமை குறிப்பிடத் தக்கது.

**வரலாற்றை படைத்த லாஸ்லோவின் படைப்புகள்:**

லாஸ்லோவின் முதலாவது நாவலான "சாத்தான்தாங்கோ" Sátántangó சிதைந்து கொண்டிருக்கும் ஒரு கூட்டுப் பண்ணையில் வசிக்கும் சில நபர்களின் நம்பிக்கையற்ற வாழ்வைப் பற்றிய ஓர் அதிர்ச்சியூட்டும் சித்திரத்தை அளிக்கிறது. இந்தப் படைப்பு 1985இன் பின்னர் பிரபலமான திரைப்பட மாகவும் எடுக்கப்பட்டது.

*1989*இல் "எதிர்ப்பின் மனச்சோர்வு" (The Melancholy of Resistance)ஒரு சிறிய நகரத்தில் ஏற்படும் வன்முறை மற்றும் அராஜகத்தைப் பற்றிய இந்த உருவகக் கதையாகும். ஒரு பிரமாண்டமான திமிங்கலம் மற்றும் ஒரு விசித்திரமான சர்க்கஸைச் சுற்றியே இந்த கதை பின்னப்பட்டுள்ளது.

இதன் பின்னர் *1999*இல் "போரும் போரும்"(War & War) *1999)* காவியமானது ஹங்கேரிக்கு வெளியே உலகளாவிய அழிவையும், குழப்பத்தையும் ஆராயும் ஒரு முக்கியமான படைப்பாகும்.

சூதாட்டத்திற்கு அடிமையான ஒரு பிரபுவின் விரிவான கதையான "பரோன் வென்கைமின் வீடு திரும்புதல்" (Baron Wenckheim's Homecoming) *2016*இல் வெளிவந்தது.

இந்தப் படைப்புக்காக இவர் *2019* ஆம் ஆண்டு தேசியப் புத்தக விருதையும் பெற்றுள்ளமை பாராட்டத் தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீரஞ்சனி

# யாதுமானவள்



இதுதான் நான் தனித்துச் செல்லும் முதல் பயணம். விமானத்தின் பின்பகுதியில்தான் என் இருக்கை இருந்தது. சூட்கேசை என்னுடன் இழுத்துக் கொண்டு சென்ற நான் என் இருக்கையில் கைப்பையை வைத்துவிட்டு, மேல் இறாக்கையில் அதை வைப்ப தற்குப் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தேன். எட்டக் கூடிய உயரத்தில் அது இல்லையே என எனக்குக் கவலை யாக இருந்தது. என் இருக்கையின் பக்கத்தில் இருந்த இளம் பெண் எழுந்து, உதவிவேண்டுமா என ஆங்கிலத் தில் கேட்டபடி உதவிசெய்ய முன்வந்தா. கேட்கா மலேயே உதவிசெய்ய முன்வந்த அவவுக்கு வாயாராவும் மனதாரவும் நன்றிகூறியபடி ஆசுவாசத்துடன் அமர்ந்து கொண்டேன்.

சற்றுநேரத்தில், "நீங்க சுவிற்சிலாந்திலா இருக்கிறீங்க?" என அவவிடம் கேட்டேன்.

"ஓம், ஒரு medical conferenceக்காக ரொறன்ரோ வுக்கு வந்தனான். இங்கைதான் நீங்க இருக்கிறீங்களா?" அவவும் பேச்சைத் தொடர்ந்தா.

"ஓ, ரொறன்ரோ உங்களுக்குப் பிடிச்சிருந்ததா? 20 வருஷமா நான் இங்கைதான் இருக்கிறன். ஆனா, என்ர சொந்த நாடு, இலங்கை. அங்கை எனக்குப் படிப்பிச்ச ஒரு ரீச்சரின்ர 75வது பிறந்தநாள் கொண்டாட்டத்துக் காக உங்கட நாட்டுக்கு வாறன்."

"வாவ்! ஆசிரியர்களுடனான உறவை அவ்வளவு தூரத்துக்கு நீங்க பேணுவீங்களா?" முகத்திலிருந்த சுருட்டை மயிரைக் காதோரம் ஒதுக்கியவாறு புருவங் களை உயர்த்தினா அவ.

"மிசிஸ் பரம் வித்தியாசமான ஒரு ரீச்சர். என்ர அபிமானத்துக்குரிய ரீச்சர் மட்டுமில்ல, அவ எனக்கொரு role model."

"ஓ!"

"சின்ன வயசில இலங்கையின்ர தலைநகரான கொழும்பிலதான் நாங்க இருந்தனாங்க. அங்கை அப்பா ஒரு புடவைக் கடை வைச்சிருந்தவர். 77ம் ஆண்டுக் கலவரத்தில அப்பா கொலைசெய்யப்பட்டிட்டார். பிறகு நாங்க யாழ்ப்பாணத்துக்குப் போக வேண்டி யிருந்தது. அப்ப நான் ஏழாம் வகுப்பு."

"ஓ, very sad, I am sorry."

"அது ஒரு காலம்... சோகத்தைத்தவிர எதையும் பாத்ததில்லை. புதுப் பள்ளிக்கூடத்தில நான் தனிச்சுப் போயிருந்தன். என்ர பல் அசிங்கமாக இருக்கு, நான் வடி வில்லை எண்டெல்லாம் கேலிபண்ணிச்சினம். பள்ளிக் கூடம் போறதே பெரிய தண்டனை போலிருந்துது."

"எவ்வளவு தூரம் நீங்க பாதிக்கப்பட்டிருந் திருப்பீர்கள் எண்டு விளங்குது." மெல்லிய குரலில் சொன்னா அவ.

"அம்மா மொத்தத்திலை ஜடமாகவேயிருந்தா. போதாதது்கு பணக் கஸ்டம் வேறை. அந்த நேரம் மிசிஸ் பரம் இருந்திருக்காட்டி என்ன செய்திருந்திருப்பன் எண்டு நினைச்சால், இப்பகூட எனக்கு நெஞ்சு கனக்கும். நான் பள்ளிக்கூடத்திலை சேந்த சில நாள்களிலைதான் அவவுக்கு அங்கை வேலை கிடைச்சிருந்தது. இளமையா யும் நல்லா வடிவாயும் இருந்த அவவை எல்லாரும் பிரமிப்போடைதான் பாப்பினம். வீட்டை வா, படிக்கலாமெண்டு வீட்டுக்குக் கூப்பிட்டு எனக்குப் பாடம் சொல்லித் தர தொடங்கின கதை வேகமாய்ப் பரவத் தொடங்கினது. அவவே என்னிலை கரிசனை காட்டுறா எண்டதும் மெல்ல மெல்ல மற்றவையும் என் னோடை சேரத் தொடங்கிச்சினம். யூனிவேசிற்றியிலை இருக்கேக்கைகூட அவவின்ர கடிதங்கள் எனக்கு ரொனிக் மாதிரி இருந்ததெண்டு சொல்லலாம்."

"ஓ, விளங்குது. அப்படியொரு ரீச்சர் கிடைக்க நீங்க கொடுத்துவைச்சிருக்கிறீங்க."

"என்ர பிள்ளையளுக்கும் அவவைப் பத்தி நிறையச் சொல்லியிருக்கிறன். ஒரு கட்டத்தில அவதான் எனக்கு எல்லாமாய் இருந்திருக்கிறா. அதைப் பத்தித்தான் அங்கை நடக்கவிருக்கிற கூட்டத்தில நான் பேசப்போகிறன்," என் குரலில் நன்றியும் பெருமிதமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்திருந்தது.

"அப்ப உங்கடை பேச்சு அந்தமாரி இருக்கும்." அழகான வெண்ணிறப் பற்கள் தெரிய அவ புன்முறுவல் செய்தா. மூன்று மாதமா யோசித்து, யோசித்து எழுதி, எழுதிப் பின் திருத்தித் திருத்தி நான் எழுதினேனா என நானே வியந்துபோன அந்தப் பேச்சை எண்ணிப் பார்த்துக் கொண்டேன்.

விமானம் பறக்கத் தொடங்கியது. சூரிய உதயம் யன்னலுக்கூடாகத் தெரிந்தது. செந்நிறச் சூரியக் கதிர்கள் வர்ணஜாலம் காட்டிக்கொண்டிருந்தன. மூன்று தசாப்தங்களின் பின்னர் மிசிஸ் பரமைப் பார்க்கப் போகின்றேன் என மூன்று மாதங்களாக மனசுக்குள் பீறிட்டுக்கொண்டிருந்த களிப்பு இப்போது உச்சத்தை அடைந்திருந்தது. இதயம் ஆனந்தத் தாண்டவமாடியது.

அந்தக் காலத்திலை, பல்கலைக்கழகத்துக்காகக் காத்திருந்த காலங்களில் அவ எங்கடை ஒழுங்கையால் போவதைப் பார்ப்பதற்காக ஒழுங்கையிலை தற்செயலா நிற்பதுபோல ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு விடயம் செய்வது நினைவுக்கு வர எனக்குள் சிரிப்பு வந்தது. மீளவும் மிசிஸ் பரமோடை உறவைத் தொடர வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்பதில் ஆசுவாசமாக இருந்தது. பிள்ளைகள் வளர்ந்துவிட்டதால் பொறுப்பில்லை. நிதி நெருக்கடியில்லை. வேலையில் லீவு கிடைக்குமா என யோசிக்க வேண்டியதில்லை. நினைத்ததைச் செய்ய முடிகிறது, முதுமை சில வகைகளில் உதவியாக இருக்கின்றதுதான் என எனக்குள் நினைத்துக்கொண்டேன்.

***

விமானம் தரையிறங்கும்போதும் இரவாகியிருந்தது. செயற்கை ஒளியில் சுவிற்சிலாந்து பிரகாசித்தது.

"மிசிஸ் பரமின்ரை புண்ணியத்திலை உன்னைப் பாக்க முடிஞ்சிருக்கு. பாத்து எத்தனை வருஷமாய்ச்சு," கட்டிக்கொண்டாள் என்னைக் கூட்டிச்செல்ல விமான நிலையத்துக்கு வந்திருந்த என் மைத்துனி அருள்.

"என்ன செய்ய அருள், இப்பத்தான் நேரம் வந்திருக்கு, இனி அடிக்கடி வருவன்!"

"ஓ, மிசிஸ் பரமைப் பாக்கலாம் எண்டபடியால், இனி அடிக்கடி வருவாய்."

"இல்லையடியப்பா, பிள்ளையள் வளர்ந்திட்டுதுகள் இனிப் பொறுப்பில்லை எண்டதைச் சொல்கிறன்."

"நீ சொன்னாப்பிறகு, அவவின்ர பேச்சுகளைக் கேட்கிறனான். மனிசி அந்தமாரிப் பேசுது."

"அவ உண்மையிலேயே ஒரு காந்தமடி."

"வீட்டுக்குப் போய் குளிச்சு உடைமாற்றிக் கொண்டு படுக்கைக்குச்சென்றபோது, "விடியக் கோயிலுக்குப் போவம், என்ன? முதலிலை முருகனைப் போய்த் தரிசிப்பம்." என்றாள் அருள்.

"ஓகே, போவம்."

"ரொறன்ரோவிலை கோயிலுக்குப் போறனியோ?"

"அங்கை போறனானோ, இல்லையோ, நீ போகேக்கே நான் வரத்தானே வேணும்."

"நாளைக்குத் தேர் எண்டபடியால், உனக்குத் தெரிஞ்ச ஆக்களும் அங்கை வரக்கூடும்"

"ஆக்களைப் பாக்கத்தானே அந்தக் காலத்திலும் மாவிட்டபுரத்துக்கு, கீரிமலைக்கு எண்டெல்லாம் போறனாங்கள்," கண்ணடித்தேன் நான்.

"உனக்கெல்லாம் பகிடிதான். சாமி கும்பிடப் போறம். போற இடத்திலை ஆக்களைப் பாக்கிறம்."

"சரி, முதலிலை சாமியைக் கும்பிடுவம். பிறகு ஆர் வந்திருக்கினமெண்டு பாப்பம்." சிரித்தேன் நான்.

***

தேர் வெளிவீதியில் சுற்றிவந்துகொண்டிருந்தது. வீதி மக்கள் வெள்ளத்தால் நிறைந்து வழிந்தது. "பக்த கோடிகளுக்குக் குறைவில்லை," அருளுக்குக் கூறிச் சிரித்தேன். திடீரென என் முகத்தை இரண்டு கைகள் மூடிக்கொள்ள, "யாரெண்டு சொல்லும் பாப்போம்," எனக் குரலொன்று ஒலித்தது. குரலை எனக்கு மட்டுக் கட்டவே முடியவில்லை. தடுமாறிய என் முன்னால் கைகளை எடுத்துவிட்டுச் சிரித்தபடி நின்றிருந்தாள் சொர்ணா.

"ஏய் சொர்ணா, நீர் எங்கையிருக்கிறீர் எண்டு நான் இப்ப எத்தனை வருஷமா தேடிக்கொண்டிருக்கிறன். சோசல் மீடியாக்கள் ஒண்டிலும் நீர் இல்லையா?" சொர்ணாவைக் கண்ட மகிழ்ச்சியில் என் மனம் துள்ளியது. எங்களின் பாடசாலையில் எட்டாம் வகுப்பில் வந்துசேர்ந்திருந்த சொர்ணாவும் நானும் பன்னிரண்டாம் வகுப்புவரை உற்ற சினேகிதிகளாக இருந்தோம். 83 கலவரத்தின் பின்னர் சொர்ணா திருமணமாகி வெளிநாடு சென்றுவிட்டதாக அறிந்தேன். அத்துடன் தொடர்பு விட்டுப்போயிருந்தது.

"மலேசியாவிலை இருந்தனாங்க, இப்ப இங்கை வந்து மூண்டு வருஷமாகுது. உம்மை இங்கை சந்திப்பனெண்டு நான் நினைக்கவேயில்லை. நீரும் இங்கையா இருக்கிறீர்?"

"இல்லை, நான் கனடாவிலை இருக்கிறன். மிசிஸ் பரமுக்கு பவள விழா நடக்குதெல்லோ. கேள்விப்பட்டனீரோ? அதுதான் வந்தனான்."

"ஓ." சுரத்தில்லாமல் சொன்னாள் சொர்ணா. பின்னர் பரஸ்பரம் எங்களின் வாழ்க்கையைப் பற்றிக் கதைத்தபடி, தொலைபேசி இலக்கங்களைப் பரிமாறிக் கொண்டோம்.

அருள் என்னைவிட 10 வயது இளையவள் என்பதால் சொர்ணா என் சினேகிதி என்பது அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை. நான் என் சினேகிதியைச் சந்தித்துக்கொண்டதில் அவளுக்கும் சந்தோஷமாக இருந்தது. பின்னர் அருளுக்குத் தெரிந்தவர்கள், அவர்கள் இவர்கள் எனக் கதைத்துமுடித்து வீட்டுக்குப் போனோம். பயண அலுப்பும், கோவில் அலுப்பும் என்னை நித்திரை மயக்கத்துக்குள் அமிழ்த்திவிட்டது.

***

வியாழனும் வெள்ளியும் ஊர் பார்ப்பதில் மறைந்துபோனது. மலைகளும் நீர்நிலைகளும் சூழ்ந்த சுவிற்சிலாந்தின் அழகு கண்களுக்குப் பெருவிருந்தாயிருந்தது. ஞாயிற்றுக்கிழமைதான் மிசிஸ் பரமின் பவள விழா. சனிக்கிழமைதான் சொர்ணாவைச் சந்திப்பதாக இருந்தது, அவளைச் சந்திக்கும்போது பவளவிழாவுக்கு அவளும் வருவதை உறுதிப்படுத்த வேண்டுமென நினைத்துக்கொண்டேன். அன்று நான் பேசப்போகும் பேச்சு எப்படியிருந்ததெனச் சொல்வதற்குப் பூசி மெழுகாமல் கதைக்கும் சொர்ணா வருவது நல்லதென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்தேன். அத்துடன் மிசிஸ் பரம் சொர்ணாவினதும் ஆசிரியராக இருந்ததால், சொர்ணா வருவா என்று நம்பிக்கையும் இருந்தது.

இரவுச் சாப்பாட்டுக்கு வரும்படி சொர்ணாவை அருள் அழைத்திருந்தாள். முதல் நாளிரவு தொலைபேசியில் பேசிய சொர்ணா, பகவதியையும் அழைத்து வரட்டுமா, பகவதியும் உம்மைப் பார்க்க ஆசைப்படுகிறா என்றாள். ஓ, நிச்சயமாக, பகவதியும் இங்கேயா இருக்கிறா. எனக்கும் அவவைப் பார்க்க ஆசையாயிருக்கு. கூட்டிவாரும் என்றேன், நான்.

மாலை ஐந்து மணியளவில் பகவதியும் சொர்ணாவும் வந்திறங்கினர். பகவதி அன்று பார்த்த மாதிரியே இருந்தாள். "தனிச்சுச் சுதந்திரமாய் சுத்துற காலம் வசந்திக்கு வந்திருக்கு" எனப் பகிடிவிட்டாள் பகவதி.

"நீர் மட்டும் என்னவாம்? எங்கை மனிசன், எங்கை பிள்ளையள்?" என நான் பகவதியை வம்புக் கிழுத்தேன்.

"அவையும் வந்தால் நாங்க என்னெண்டு பழம் கதையள் கதைக்கிறது. அவைக்குப் போரடிக்குமெண்டு விட்டிட்டு வந்திட்டம்," என்றாள் சொர்ணா.

நேரம் போனதே தெரியாமல் வம்பளந்து கொண்டிருந்தோம். எங்களின் சிரிப்பொலியில் அருளின் வீடு அதிர்ந்தது. "ஏழு மணியாகுது, வாங்கோ சாப்பிடுவம்," என அருள் கூப்பிட்டாள். தோசை முறுகலாகவும் ருசியாகவும் இருந்தது. தோசை சுடப் பஞ்சிப்பட்டு, கடையில் வாங்குமெனக்கு அருள் ஒவ்வொன்றாகத் தோசையைச் சுட்டுக்கொண்டிருப்பது, அம்மா சுடச்சுட காத்திருந்து சாப்பிடுவதை ஞாபகப்படுத்தியது.

"தோசை சுடுறதுக்காகக் காய்ஞ்ச தென்னோலைகளை ஒண்டொண்டாப் பிரிச்செடுத்து அம்மா கட்டாக்குறது, பிறகு ஓலைகள் எரியேக்கை சுவாலை உயரமாய்ப் போய் பிறகு தேயுறது ... அதெல்லாத்தையும் பாக்கிறது எனக்குச் சரியாய்ப் பிடிக்கும். இந்தத் தோசைகள் எனக்கு அம்மாவை ஞாபகப்படுத்துது," என்றேன் நான்.

"கொழும்பில இருக்கேக்கையும் அப்பிடியோ அம்மா தோசை சுட்டவ?" வெகுளித்தனமாகக் கேட்பதுபோல என்னைக் கேலிசெய்தாள் பகவதி.

"கொழும்பு வாழ்க்கை ஆருக்கு ஞாபகமிருக்கு. அப்பாவை அழிச்ச அந்தக் கொழும்பு வாழ்க்கையை மறக்கோணுமெண்டு மறந்தனோ, என்னவோ. எனக்கு அது ஒண்டுமே நினைவில்லை. ஆனா யாழ்ப்பாணத்துக்கு வந்ததும் மிசிஸ் பரம் செய்ததுகளை வாழ்க்கைக்கு மறக்கேலாது."

சில கணங்கள் பெரும் அமைதி நிலவியது. நான் அதை உடைத்தேன்.

"It's okay. அப்பா போய், இப்ப எத்தனை வருஷமாச்சு. மனசிலை வடுவாயிருக்குதான், ஆனா, அந்த நேரத்திலை பட்ட வேதனை இப்ப இல்லை. கொழும்பை ஏன் ஞாபகப்படுத்தினதெண்டு நீர் கவலைப்படத் தேவையில்லை, பகவதி."

"அதில்லை, வசந்தி. நீர் மிசிஸ் பரமை உச்சந் தலையிலை வைச்சிருக்கிறீர். அதுதான் சொல்லலாமோ வேண்டாமோ எண்டு யோசிக்கிறம்," சொர்ணாவைப் பார்த்தபடி சொன்னாள் பகவதி.

"என்னத்தைச் சொல்லலாமோ, வேண்டாமோ எண்டு யோசிக்கிறியள்?"

"அவவைப் பத்தித்தான். அந்த நேரத்திலை ஒத்தடமாயிருந்த மிசிஸ் பரமைத்தான் உமக்குத் தெரியும். அவ ஒத்தடமாயிருந்தா. ஏனெண்டால் உங்களுக்கிடையில முரண்கள் இருக்கேல்லை." தோளைக் குலுக்கியபடி சொன்னாள் அவள்.

"எனக்கு விளங்கேல்லை."

"நான் என்ன சொல்றன் எண்டால், அவவை முன்னுக்கு வைச்சால், அவவோடை முரண்படாட்டா ஒரு பிரச்சினையும் வராது... அருள், உண்மையிலேயே தோசை சுப்பர். சம்பலும்தான். இஞ்சிபோட்டு அரைச்சிருக்கிறீர், என்ன?" தலையைக் கீழும் மேலுமாக ஆட்டின அருள் "தாங்க்ஸ்," என்றாள். எனக்கோ கதை திசைமாறுவது விருப்பமில்லாமல் இருந்தது.

"என்ன நடந்தது எண்டு சொல்லுமன்?" அவசரப்பட்டேன் நான்.

"சொர்ணா இப்ப நடத்துற முதியோர் சங்கத்தை முதலில அவதான் நடத்தினவ. பிறகு கொமிற்றியிலை கருத்து வேறுபாடு வந்தவுடனை எல்லாத்தையும் உதறியிட்டு அவ போட்டா. கணக்கு வழக்குகளைக்கூடக் குடுக்கேல்லை. அந்தப் பொறுப்புக்குச் சொர்ணா வந்தாப்போல, அவவின்ர வீட்டுக்கு ஒன்றிரண்டு தடவை போய்க் கெஞ்சிக் கேட்டும் பழைய பைல்கள் ஒண்டையும் குடுக்கமாட்டன் எண்டிட்டா. அதாலை ஒடிற்றிங்கிலை சங்கம் பட்டபாடு சொல்லிமுடியாது."

"ஏன் அப்படிச் செய்தவ, எனக்கு நம்பேலாமல் இருக்கு!" குழப்பத்துடன் நான் சொர்ணாவைப் பார்த்தேன்.

"அதுதான் சொன்னனே, முரண்வரேக்கைதான் ஒராளின்ரை சுயம் தெரியும். நீர் இதையும் நம்புவீரோ தெரியாது. அவ இங்கை வந்திருக்கேக்கை பிள்ளையளோடை சரியாய்க் கஷ்டப்பட்டவ. நான் என்னாலான உதவி செய்திருக்கிறன். சொல்லிக் காட்டக்கூடாது எண்டாலும், உமக்கு விளங்கட்டுமெண்டதாகச் சொல்றன். ஐக்கற், அது இதெண்டு கணக்குப்பாக்காமல் வாங்கிக்கொடுத்திருக்கிறன். அப்படியிருந்தும், அவ பேசின ஒரு பேச்சிலை இருந்த ஒரு பிழையைச் சுட்டிக் காட்டிட்டேன் எண்டு என்னைத் தூர வைச்சிட்டா. சொர்ணாவின்ர பிரச்சினையைத் தீக்கிறதுக்காக நானும் ஏதாவது செய்வமெண்டு பாத்தன். ஆனா அந்த மனுசி கதைச்சால்தானே. என்னவோ, அவவின்ர வண்ட வாளங்கள் தெரிஞ்சிருந்தால், நீர் பேசுறதுக்கு வந்திப்பீரோ என்னவோ!" என்றபடி என் முகத்தைப் பார்த்தாள், பகவதி.

"எனக்குத் தலைசுத்துது. இப்படியும் ஒரு பக்கமிருக்குமெண்டு நான் கனவிலும் நினைக்கேல்லை."

"பகவதி சொனனதெல்லாம் உண்மை, வசந்தி. ஆனா, அதுக்காண்டி நீர் அவவை வெறுக்கோணும் எண்டில்லை. உமக்கு அந்த நேரம் அவ எல்லாமா இருந்திருக்கிறா. அதுக்கு நீர் நன்றியாய் இருக்கத்தானே வேணும்." மென்மையாகவும் உறுதியாகவும் சொன்னாள் சொர்ணா.

"எண்டாலும், உங்களுக்கு இப்பிடி நடந்திருக்கேக்கை, எப்படி நான் அவவை உயர்த்திப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுறது?"

"இவ்வளவு தூரம் வந்திருக்கிறாய். அழைப்பித ழிலை பெயரெல்லாம் போட்டாச்சு, பேசத்தானே வேணும்." என்கிறாள் அருள் தோசையை என் தட்டில் வைத்தபடி. எனக்குத் திடீரெனப் பசி இல்லாமல் போய்விட்டது.

***

அந்த ஞாயிற்றுக்கிழமை இரவு, மண்டபம் மலர் அலங்காரங்களாலும், வண்ண விளக்குகளாலும் ஒளிர்ந்து கொண்டிருந்தது. ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நண்பர்கள் எல்லோரும் ஆரவாரமாகக் கூடியிருந்தனர்.

பொன்மஞ்சள் நிறச் சீலையில் மேடையின் நடுவில் மலர்மாலையுடன் மிசிஸ் பரம் அமர்ந்திருந்தா. மாணவர்களின் வாழ்த்துகள் தொடர்ந்து கொண்டி ருந்தன. அவர்களின் வாழ்க்கையில் அவ எவ்வளவு தூரம் பங்களித்திருந்தா என ஒவ்வொருவரும் சொல்லிக் கொண்டே இருந்தனர்.

நானும் அருளும் போய் எங்களுக்காக ஒதுக்கப் பட்டிருந்த ஆசனங்களில் அமர்ந்து கொண்டோம். என் மனம் நிலைகொள்ளாமல் தவித்தது. என் நன்றியைப் பகிர்வது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் என் சினேகிதிகள் அனுபவித்த துன்பத்தைப் புறக்கணிக்காமல் இருப்பதற்கும் உள்ளதென என் மனம் எனக்கு ஓயாமல் சொல்லிக்கொண்டிருந்தது.

என் பெயர் அழைக்கப்பட்டது. என் இதயம் துடிக்க மறுத்ததுபோல, நெஞ்சுக்குள் அடைத்தது. மூன்று மாதங்களாகத் தயாரித்த பேச்சு கையில் இருந்தது. ஆனால், மனதில் சொர்ணாவும் பகவதியும் கூறிய கதைகள்தான் சுழன்று கொண்டிருந்தன.

"வசந்தி மோகன்," என் பெயரை அழைத்துக் கொண்டிருப்பவரின் குரல் மீளவும் ஒலித்தது. மெதுவாக எழும்பினேன். மேடைக்குப் போகும் படிகளில் இரண்டு படிகளைத் தாண்டிவிட்டேன். ஆனால் அடுத்த படியில் காலடி எடுத்துவைக்க முடிய வில்லை. என் தலை என்னையும் அறியாமல் இடமும் வலமும் ஆடியது. ஒருவாறு சமாளித்துக்கொண்டு, ஆழமாக மூச்செடுத்தேன். "பேசினால் உண்மை வெளிப்படும். பேசாதே," என்று என் மூளை எச்சரித்தது. ஒருவாறாக ஒலிவாங்கிக்கு முன்னால் போய் நின்றுகொண்டேன்.

"அன்பான மிசிஸ் பரம் அவர்களே, என் அன்புத் தோழர்களே,

மிசிஸ் பரம், எனக்கு ஆசிரியர் மட்டுமல்ல. தனிமையிலும் துயரத்திலும் நான் சிக்கித்தவித்தபோது, எனக்கு ஆதாரசுருதியாக இருந்தவர் அவர். "நீ முக்கியமானவள்" எனச் சொல்லும் தோரணையில் அவர் என்னுடன் நடந்த விதமும் அவரின் அன்பும் என் வாழ்க்கையை மாற்றியது. என் வாழ்க்கையின் இருண்ட அந்த நாள்கள் என் நினைவுக்கு வரும்போது, மிசிஸ் பரம் காட்டிய வெளிச்சம் ஒருபோதும் என் நினைவுக்கு வராமல் போனதில்லை. அவர் காட்டிய கருணைக்கு நான் என்றென்றும் நன்றியுள்ளவளாக இருப்பேன்.

"ஆனால், நண்பர்களே," - ஒரு கணம் நிறுத்தினேன்.

"மனிதர்களைப் பற்றிய ஒரு உண்மையை நாங்களெல்லாம் ஏற்கவேண்டும். மனிதர்களில் எவரும் ஒரு முகம் கொண்டவர்கள் அல்லர். ஒவ்வொருவருக்கும் பல முகங்கள் இருக்கின்றன. அதிலும் சிலருக்கு முற்றிலும் எதிரெதிரான முகங்கள் உள்ளன. அதனால், ஒருவருக்கு தெய்வமாகத் தோன்றுபவர், இன்னொருவருக்கு அரக்கராகத் தெரியலாம். குறித்தவரின் நினைவுகள் ஒருவரை மகிழ்விக்கின்ற அதேவேளையில் இன்னொரு வருக்கு வலியைக் கொடுக்கலாம்."

மீளவும் ஒரு கணம் என் பேச்சை நிறுத்திவிட்டு மிசிஸ் பரமைத் திரும்பிப் பார்த்தேன். அவரின் முகத்தில் ஆழ்ந்த சிந்தனையின் ரேகைகள் தெரிந்தன. மண்டபம் முழுவதும் ஓரிரு கணங்கள் பெரும் அமைதி நிலவியது. பின் நீண்டதொரு கைதட்டல் ஒலித்தது.

நான் தொடர்ந்தேன். "ஒரு முழுமையான மனிதரைப் பற்றிப் பேசுவதற்கு நான் இங்கே வரவில்லை. வாழ்க்கையில் நான் இழந்துபோன பிடிப்பை மீளப் பெற்றுக்கொள்வதற்குக் காரணமாக இருந்த ஒருவரைப் பற்றியே பேசவந்திருக்கிறேன்..."

பேச்சை முடித்துக்கொண்டு வந்தமர்ந்த என் கைகளை அருள் இறுகப்பற்றிக் கொண்டாள்.

---

## துளிப்பாக்கள்

வெண்ணிற மேகங்கள்
படம் எடுத்துக் கொண்டிருக்கும்
நதிக் கண்ணாடி

கரையை அண்மித்ததும்
வெடித்துப் போகின்றன
நுரை முட்டைகள்

மலைப் பாறை
நீண்டு வளருகிறது
இடுக்கில் செடி

பொழியும் மழை
ஒவ்வொரு துளியும்
எந்தக் கடலோ?

பழைய சாலை விளக்கு
ஒளியேற்றி வைக்கிறது
வனமிழந்த பறவை வாழ்வில்

ஓடும் கடிகார முள்
துண்டு துண்டாகிறது
இரவின் நிசப்தம்

தனியறையில் துயிலும் குழந்தை
கதை சொல்லுகிறாள்
கனவில் வந்த பாட்டி

- ஜலீலா முஸம்மில் -ஏறாவூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிமணி தேசிய விநாயகம்பிள்ளையின் கவிதைகள் ஒரு சிறப்பாய்வு

கே.மோகனாம்பாள்

"நவீன சமுதாயமொன்றை பிரதிபலிக்கின்ற விடயங்கள்" என்பதை நவீன கவிதைகள் என பொதுவாக கூற முடியும். அந்தவகையில் 19 ஆம் நூற்றாண்டிலிருந்தே இலக்கியங்கள் தோற்றம் பெற தொடங்கின. 20 ஆம் நூற்றாண்டிலேயே கவிதையில் நவீனத்தின் பாதிப்பு வரத்தொடங்கியது. பழைய யாப்பு புதிய யாப்பாக மாற்றமடைந்ததோடு, சமயத்தை தாண்டி சமூகத்தை பிரதிபலிப்பனவாக கவிதைகள் தோன்றின. பாரம்பரிய சமூக, வாழ்வியலை உள்ளடக்கமாக கொண்ட கவிதை புதிய பரிமாணத்துடன் மக்களின் வாழ்வியலை பேசுவதாக மாறியது.

" சுவை புதிது
பொருள் புதிது
வளம் புதிது
சொல் புதிது
சோதிமிக்க நவ கவிதை"

என்ற மகாகவி சுப்ரமணிய பாரதியின் கருத்திற்கிணங்க, நவீன கவிதைகள் தோன்றின எனலாம். பாரதியை பின்பற்றி அவருக்கு பிறகு வந்த நவீன கவிதை போக்கு முக்கியமாக நோக்கத்தக்கதாகும். இவை பல பரிமாணங்களில் தோன்றியது. பாரதிக்கு பிறகு, அவரை அடிப்படையாகக் கொண்டு நான்கு கிளைகள் உருவாகின.

1. பாரதிதாசன்
2. கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை
3. சித்தானந்த பாரதியார், யோகியார், மு. இராமலிங்கம், கலைவாணன்
4. நா. பிச்சமூர்த்தி, கு. ப. ரா, புதுமைப்பித்தன்

என்றவாறாக அவர்களை கூறலாம். அந்த வரிசையில், கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை 1867ம் ஆண்டு தொடக்கம் 1954 வரை வாழ்ந்தவராவார். இவர் தமிழறிஞர், எழுத்தாளர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர், கல்வெட்டாய்வாளர் போன்ற பல பரிமாணங்களில் செயற்பட்டிருக்கிறார். இவரின் இலக்கிய வாழ்க்கை எனும்போது, 20 வயதிலேயே கவிதைகள் எழுத ஆரம்பித்துவிட்டார். ஆரம்பத்தில் இவர் எழுதிய சில கவிதைகள் மற்றும் கட்டுரைகள் என்பன சரியாக பாதுகாக்கப்படாமையும் வருத்தத்திற்குரிய விடயமாகும். தமிழின் முதல் குழந்தைக் கவிஞர் என இவரைக் குறிப்பிடுவதுண்டு. இவரது "மலரும் மாலையும்" என்ற தொகுதியிலுள்ள "முத்தந்தா, காக்காய், கோழி" என எட்டுக்கும் மேற்பட்ட தலைப்புகளில் உள்ள பாடல்கள் நாட்டார்க் குழந்தைப்பாடல் வடிவங்கள் கொண்டவையாகக் காணப்படுகின்றன. இவரது முக்கியமான படைப்பாக இன்று கருதப்படுவது நாஞ்சில்நாட்டு மருமக்கள்வழி மான்மியம்" என்பதாகும். இது தமிழின் முதல் எள்ளல் நூல் என்றும் குமரிமாவட்ட வட்டார வழக்கு இலக்கியத்தின் முன்னோடி நூல் என்றும் கருதப்படுகிறது.

எட்வின் ஆர்னால்டின் "Light Of Asia" என்ற நூலைத் தழுவி தமிழில் "ஆசிய ஜோதி" யை கவிமணி எழுதினார். இந்தியா முழுவதும் எட்வின் ஆர்னால்டின் கவிதையின் வெவ்வேறு வடிவங்கள் வெளிவந்துள்ளன. அவற்றில் ஆசிய ஜோதி முக்கியமான படைப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1938ல் மு. அருணாசலம் வேறு சில பாடல்களையும் தொகுத்து "மலரும் மாலையும்" என்னும் தலைப்பில் ஒரு நூலை வெளியிட்டுள்ளார். கவிமணியின் "உரைமணிகள் (1952)", "தேவியின் கீர்த்தனைகள் (1953)" போன்ற நூல்கள் பின்னால் வந்தவையாக கொள்ளப்படுகின்றன. பாரசீகக் கவிஞர் உமர்கய்யாம் பாடல்களைத் தழுவி "ரூபாயாத்" எனும் தலைப்பில் தமிழில் எழுதியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். அந்தவகையில், இவரின் கவிதைப் படைப்புக்களுக் கென்று சமூகத்தில் சிறந்தவொரு செல்வாக்கு காணப் படுகின்றமையை நாம் ஏற்க வேண்டும். அக்கவிதை களை ஒருசில சிறப்பம்சங்களை அடிப்படையாகக் கொண்டு அவர் வடிவமைத்துள்ளமை சிறப்பாகும்.

கவிஞர்கள் தாம் முன்னோடிகளாக எடுத்துக் கொண்டவர்களின் சிறப்புக்களை தமது கவிதைகளில் கூறிச் செல்வதானது அவர்களின் பெருந்தன்மையை எடுத்துக்காட்டுகின்றது. அந்த அடிப்படையில், இவரது கவிதைகள் பெரும்பாலும் உணர்ச்சி மிக்கவையாகவே காணப்பட்டன. "என் எழுத்தும் தெய்வம்: என் எழுதுகோலும் தெய்வம்" என கூறிய பாரதியின் கவிதைகளில் மனதைப் பறிகொடுத்த இவர் அவரின் சிறப்புக்களை கூறும் வகையிலான அம்சங்களையும் தம் கவிதைகளில் படைத்துள்ளார்.

"பாட்டுக்கொரு புலவன் பாரதியடா அவன்
பாட்டைப் பண்ணோடு ஒருவன் பாடினானடா
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனடா அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாயடா

என்பது போன்ற வரிகள் அவருக்கு பாரதியார் மீதிருந்த பெருமதிப்பை உணர்த்தி நிற்கின்றது. தமது கவிதை முயற்சிக்கு முன்னோடியாக இருந்தவர்களின் சிறப்புக் களை தம் கவிதைகளில் கூறிவருவதும் இவர் கையாண்ட சிறப்புக்களில் ஒன்றாக விளங்குகிறது. அவ்வாறாகவே, கவிதையின் கரு சாதாரண பொருட் களாக இருத்தலும் இவரது கவிதைகளின் ஓர் அம்ச மாகும். பெரும்பாலும் கனிவும், இனிமையும் கொண்ட கவிதைகளையே இவர் படைத்துள்ளார். இவரது கவிதைகளில் கடுமையான சொற்பிரயோகங்கள் இருக் காது. எளிய வார்த்தைகளால் எழுதப்பட்டுள்ளமை யினால் சந்தம் இலகுவாக மனதில் பதிந்து விடும். இதனை "மலரும் மாலையும்" என்ற கவிதைத் தொகுதியில் வரும் கவிதைகளினூடாக அறிந்துக் கொள்ளலாம்.

"வண்டி அற்புதப் பொருளாம் – வண்டி
மாடும் அற்புதப் பொருளாம்:
வண்டி பூட்டும் கயிறும் – என்றன்
மனத்துக் கற்புதப் பொருளாம்"

(மலரும் மாலையும், 45)

இங்கு வண்டியையும், மாட்டையுமே கருவாகக் கொண்டுள்ளார். எளிமையாக, இனிமையான மொழிப் பிரயோகங்களினூடாக, சாதாரண பொருட்களை மூல மாகக் கொண்டு கருத்து வெளியிட்டுள்ளார்.

மேலும், கதை கூறுதல் என்பது பழங்காலம் தொட்டு வாய்மொழியாக பழக்கத்தில் இருந்த பண் பாகும். குழந்தை பிறந்த காலம் தொட்டு கதைகேட்டே வளர்கிறது. குழந்தையின் மனதை சந்தோஷப் படுத்துவதற்கும், குதூகலப்படுத்துவதற்குமே பெற்றோர் கள் கதைகளை கூறுகின்றனர். மேலும் பண்டைய காலத்தில் கஷ்டப்பட்டு வேலை செய்து ஓய்வெடுக்கின்ற வேளைகளில் இவ்வாறு கதைகள் கூறி நேரத்தை கழித்தனர். இந்த வழக்கம் விலங்குகளிடமும் இருந்து வந்தது என்பதை கவிமணி அவர்கள் தமது கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளார். அவ்வாறாக, தமது கவிதை களிலும் கதைகளை கூறிச் சென்றுள்ளார்.

"தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக் குட்டி
அம்மா என்குது வெள்ளைப் பசு உடனே
அண்டையில் ஓடுது கன்றுக் குட்டி

எனத் தொடங்கும் கவிதையானது தாய்ப்பசு மற்றும் கன்றுக்குட்டிகளுக்கு இடையில் நிகழும் பாசப் பிணைப்பை பறைசாற்றுகின்றது. ஆசிரியர். முத்தம் மனிதர்கள் தம் அன்பின் உச்சக்கட்டமாக வெளிப் படுத்தும் உணர்வாகும். இந்த அன்பின் வெளிப்பாட்டை விலங்குகளிடமும் காணலாம் என்பதை இதன்வழி அறியலாம்.

தொடர்ந்து நோக்கும் பொழுது, குழந்தை இலக்கியங்கள் எழுதுவதற்கான நுட்பங்கள் அனை வரிடமும் இருப்பதில்லை. அதற்கான சிறப்பம்சங்களை அறிந்துக் கொண்டு, அதன்வழியாகவே அவ்வாறான இலக்கியங்களை படைத்தல் என்பதும் சிறப்பம்சமாகும். அந்த அடிப்படையில், கவிமணி தேர்ச்சி பெற்றவராக விளங்குகின்றார். முக்கியமாக, குழந்தைகளுக்காக பாடப்படும் பாடல்களில் எளிமையான சொற் பிரயோகங் களே கையாளப்பட வேண்டும். உணர்ச்சிகளும், ஆழ மான அறிவுப் பிரயோகங்களும் அதிகமாக அவசியப் படாது. உள்ளதை உள்ளவாறாக, இயல்பாகவும், எதுகை, மோனை பிரயோகங்களோடும் பாடும்போது அது இலகுவாக குழந்தைகள் மனதை ஈர்த்து விடும். குழந்தைகள் மனதில் பதிந்து விடும். அவ்வாறாக, "முத்தந்தா" என்ற கவிதையில் குழந்தையைக் கொஞ்சும் பெற்றோரின் மனநிலையை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

"கண்ணே! மணியே! முத்தந்தா
கட்டிக் கரும்பே! முத்தந்தா
வண்ணக்கிளியே! முத்தந்தா
வாசக் கொழுந்தே! முத்தந்தா"

(மலரும் மாலையும், 203)

இப்பாடலைப் பற்றி தே. வேலப்பன் என்பவர், "கவிமணி யின் பன்முக ஆளுமை" எனும் நூலில், "வரிக்கு வரி அன்பு துடிக்கும் இந்த வரிகளை அன்பினுக்காகவே வாழ்பவராகிய பெண்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரிய ரால்தான் பாட முடியும்" என்கின்றார். இவ்வாறாக, குழந்தைகள் தொடர்பான கவிதைகளை நோக்க முடியும்.

இவர் கடவுள் மீது அதீத பக்தியும், நம்பிக்கையும் கொண்டவராக திகழ்ந்துள்ளார். அதனை பறைசாற்றும் விதமாக, தமது கவிதைகளிலும் கடவுளர்கள் தொடர்பாக பேசியுள்ளார். முக்கியமாக, சரஸ்வதி துதி, லட்சுமி துதி, முருகன், பகவதி போன்ற கடவுளர்களின் புகழை பாடி கவி இயற்றியுள்ளார்.

"கண்ணுக்கினிய கண்டு மனத்தைக்
காட்டில் அலையவிட்டு,
பண்ணிடும் பூசையாலே தோழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனொன்றும் இல்லையடி!

(மலரும் மாலையும், 43-44)

என்றவாறாக குறிப்பிடுகின்றார். அதாவது, இறைவனை வெளியில் எங்கும் தேடாது உள்ளத்திலேயே தேடி கண்டுக்கொள்ள வேண்டும் என்கிறார். மனதிலேயே இறைவன் நிறைந்திருக்கிறார், மனதை விட்டு வேறு எங்கு தேடியும் அவரை அணுக முடியாது என்கிறார். தொடர்ந்து, தேசிய உணர்வை வெளிப்படுத்துவதான கவிதைகளையும் இவர் புனைந்துள்ளமை சிறப்பம்ச மாகும். தேசிய போராட்டங்களில் இவர் கலந்து கொள்ளவில்லையெனினும் காந்தியக் கொள்கைகள் மீது அதீத பற்றுடையவராக விளங்கியுள்ளார். காந்திய சிந்தனைகளை உள்ளத்தாலும், உணர்வாலும் ஏற்றுக்கொண்டு அவரின் சிறப்புக்களை தமது கவிதை களில் பாடியுள்ளார். எடுத்துக்காட்டாக,

"சத்தியத்தால் மன் அரிச் சந்திரனைத் தண்ணருளால்
புத்தபெருமானை யொத்த புண்ணியனை உத்தமனாம்
அந்தணனைக் காந்தி அடிகளை அன்போடு
சிந்தனைசெய் நெஞ்சே தினம்!"

(மலரும் மாலையும், 1050)

போன்ற கவிதை வரிகளை குறிப்பிடலாம். இவரது கவிதைகள் அதிகமாக சமுதாய சிந்தனைகளை பறைசாற்றுவதாகவும் அமைந்துள்ளன. அதாவது சாதியம், சமயச் சிந்தனைகள், தீண்டாமை, மது வுண்ணல், வஞ்சகம் செய்தல், ஏமாற்றல், பொறாமை ஆகியவற்றிற்கு எதிராக இவர் பேசுகின்றார். இவற்றை விடுத்து நாட்டுமக்கள் அனைவரும் அன்பாக வாழ வேண்டுமென கூறுகின்றார். இதனை வெளிக்காட்டும் விதமாக, "தீண்டாதோர் விண்ணப்பம்" என்ற தலைப் பில் இவர் பேசிய வரிகள் முக்கியமாக நோக்கத்தக்கன வாகும்.

"விண்ணப்பம் செய்தோம் – விடையை
வேண்டிக் கொள்கிறோம்.
கண்ணப்பன் பூசை கொள்ளும்
கடவுள் திருக்கோயிலிலே
நண்ணக் கூடாதோ? நாங்கள்
நடையில் வரல் ஆகாதோ
நந்தனுக்குப் பதமளித்த
நடராசன் கோயிலிலே
வந்தனைகள் செய்து நாங்கள்
வழிபடுதல் துறை அலவோ"

(மலரும் மாலையும், 763, 741)

என கூறி தன் விண்ணப்பத்தினை ஒப்படைக்கின்றார். அதாவது தாழ்ந்த சாதியினர் கோயில்களுக்குள் பிரவேசிக்க கூடாது என பண்டைய காலத்தில் இருந்த முறைமையை எதிர்த்து, அதற்கு எதிராக மேற்கூறிய விண்ணப்பத்தை ஒப்படைத்து கருத்துக்களை வெளிப் படுத்துகின்றார்.

"பண்புடையார் பட்டுண்டு உலகம்" என்பது வள்ளுவரின் வாய்மொழியாகும். பண்புடைய மனிதர்கள் பகைவரிடத்திலும் பணிவுடன் நடந்துக்கொள்வர். தீங்கு செய்து வாழ்பவர்களுக்கு மத்தியிலும் இவர்கள் பண்பு தவறாமல் நடந்துக்கொள்வார்கள் எனப்படுகிறது. இதனை கவிமணியும் தனது கவிதைகளில் வெளிப் படுத்தியுள்ளார். இயல்பாக இவரிடம் அமைந்த பண்பு, வாழ்ந்த சூழ்நிலை, பெற்ற கல்வி முறை முதலியன இவருடைய பண்பாட்டினை வளர்த்துள்ளன. கவிமணி இயல்பாகவே இறையன்புடையவராவார். இறையன்பும் பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்றாகும். திருநெல்வேலியில் இவர் வாழ்ந்த காலக்கட்டத்தில் உமையொரு பாசு தேசிகர் என்பவரிடம் சிவதீட்சையும் பெற்றிருந்தார். இவ்வாறு தீட்சை பெற்ற காலத்தில் இவர், அவர் மீது பாடிய பாடலை இதற்கு எடுத்துக்காட்டாக பார்க்க முடியும். இயற்கையைப் பற்றி கவிமணி அவர்கள் பாடிய பாடல்கள் பண்பாட்டுணர்ச்சியை வெளிப்படுத்துவதாய் அமைந்திருந்தன. கவிமணியின் கவிதைகளில் "பசும் புல்லும் பேசும்" எனக் கூறப்படுகின்றது. பசும்புல்லும் தன் சுயசரிதையைக் கூறுவதான கவிதைகளும் இவரது அறிவுச்செழுமையை வெளிப்படுத்துவதாக காணப்படு கின்றன.

பெண்ணியம் சார்ந்த கருத்துக்களை கவிதை களினூடாக வெளிப்படுத்துவது பாரதியின் மதிநுட்பங் களில் ஒன்றாகும். இதனையே இவரும் தமது கவிதை களில் கையாண்டுள்ளார். அதாவது, பண்டைய காலக் கட்டத்தில் 60 வயதான நபருக்கு 20 வயதுடைய பெண்ணை திருமணம் செய்துவைக்கும் முறைமை காணப்பட்டது. ஒரு ஆண் எனும்போது அவன் எத்தனை பெண்களையும் திருமணம் செய்யலாம், அதுவே ஒரு பெண் எனும்போது அவள் கணவன் இறந்த பின்பு தானும் உடன்கட்டை ஏற வேண்டும் எனப்பட்டது. இது கட்டாயமாக்கப்பட்ட விடயமாகியது. இவற்றை எதிர்த்து, ராஜாராம் மோகன்ராய் அவர்கள் போராடினார். இதனை கவிமணியும் தமது கவிதைகளில் வெளிப்படுத்தி யுள்ளமை சிறப்பாகும். எடுத்துக்காட்டாக,

"கணவர் வீட்டுக் கதையினைக் கேளும்
மனைவியர் வேலை வகையினைக் கேளும்
தொழுத்துச் சாணம் வழிக்க ஒருத்தி,
தொட்டித் தண்ணீர் சுமக்க ஒருத்தி
அடுக்களைச் சமையல் ஆக்க ஒருத்தி
அண்டையில் அகலாதிருக்க ஒருத்தி
அத்தனை பேர்க்கும் அடிமையாளாய்
ஏழை பாவியானும் ஒருத்தி
எளியேன் சென்ற நாள் முதலாக
எல்லா வேலையும் என் தலை மேலாம்
பெண்டிர் நால்வரும் பெண் உன் பெற்றனர்"

என்ற வரிகளினூடாக, பெண்படும் துயரமும், அதனால் உண்டான இழிநிலையும், அழகாக படம்பிடித்து காட்டப் பட்டுள்ளன.

இவ்வாறாக, கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்களின் கவிதைகளையும், அவற்றின் கவிதைப் சிறப்புக்களையும் தெளிவாக நோக்க முடியும். கவிஞர்கள் தம் தமக்கென்று தனித்துவமான பாணி களை கையாள்வதினூடாகவே இலக்கிய உலகில் தமக்கான இடத்தை நிலைநாட்டிக் கொள்கின்றனர். அந்தவகையில், இவரும் தமக்கான இடத்தை நிலை நிறுத்திக் கொண்டு, தனித்துவமான சிறப்புக்களை தமது கவிதைகளில் கையாண்டுள்ளமையானது அவரது படைப்பின் செழுமையை வெளிப்படுத்துகின்றது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டைதீவு கலைச்செல்வி



# நல்லதோர் வீணை செய்து...

அருந்ததிக்கு இன்னமும் அறிவு வரவில்லை. அவளுடைய மருமகள் வதனிதான் அழுதபடியே நின்றாள்.

"நேற்று வரைக்கும் எப்படி இருந்தவா.. இண்டைக்கு மூச்சுப் பேச்சு இல்லாம கிடக்கிறாவே.. ஐயோ..மாமி..மாமி" கையிலே வைத்திருந்த ரிசுவால் கண்களைத் துடைத்துக் கொண்டாள். எங்காவது அவளது மாமியின் அங்கங்கள் அசைகிறதா என உற்றுப் பார்க்கிறாள். எந்தவிதமான அசைவும் வதனிக்குத் தெரியவில்லை. மீண்டும் மௌனமாகவே அழுது ஊற்றினாள். அருந்ததியின் கால்களை தலையை நெற்றியை நெஞ்சை வயிற்றை எல்லாம் தொட்டும் பார்த்தாள். வதனிக்கு உடல் நடுங்கியது. இதயமும் வேகமாக அடித்தது. ஒருவேளை மாமிக்கு ஏதாவது நடந்து விட்டால்..அழுகை இன்னமும் பொங்கிக் கொண்டு வந்தது.

"பெரிய ஐயா வாட் பாக்க வாறார். பேசண்டோட நிக்கிறவயெல்லாம் வெளியில போய் நிண்டிட்டு வாங்கோ"

அங்கே வந்த தாதிப்பெண் பெரிய குரலில் சொன்னாள். வதனி அந்தத் தாதிப் பெண்ணை மெதுவாகப் பார்த்தாள்.

"நீங்கள் நில்லுங்கோ"வதனியைப் பார்த்துச் சொன்னாள் அந்த தாதி.

"மூக்கால ரத்தம் வருகிது ரிசுவால துடைச்சு விடுங்கோ.."

"ஆ .."நெஞ்சு படபடக்க ரிசு ஒன்றினால் அருந்ததியின் மூக்கில் இருந்து மெதுவாக வழியும் குருதியை துடைத்தாள் வதனி.

"நீங்கள். மகளோ.."?

"இல்ல மருமகள்.."

"அப்ப பிள்ளைகள்.."?

"ஐஞ்சு பிள்ளைகள் என்ர மனுசனத் தவிர மற்ற நாலு பேரும் வெளிநாட்டில.."அவள் சொல்லி முடிக்கவும் பெரிய டொக்டர் வந்துவிட்டார்.

வதனி டொக்டரையும் தன் மாமியையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவர் ரிப்போர்ட்டு களின் ஒவ்வொரு பக்கத்தையும் கூர்மையாக உற்றுநோக்கி கொண்டிருந்தார். அவரின் முகத்தில் ஏமாற்றத்தின் இரேகைகளே தென்பட்டன. அவர் சொல்லப்போகும் முடிவை முன்பே உணர்ந்தவளாய் கண்ணீர் வடித்தாள் வதனி. பிடரியில் பலமாக அடி பட்டதினால் மூளையில் ஏற்பட்ட இரத்தகசிவை பற்றி ஏற்கனவே வதனிக்கு சொல்லப்பட்டுத்தான் இருந்தது. இருந்தும் அவள் நம்பிக்கையை விடாமல் பற்றி இருந்தாள்.

"வெளிநாட்டுல இருக்கிற பிள்ளையளுக்கு சொல்லி விடுங்கோ.." இரகசியமாய் கையை பிடித்து சொன்னாள் தாதி. விறைத்து போய் நின்ற வதனிக்கு சுற்றி நடந்தவை எதுவும் புரியவில்லை. அவளுடைய மாமி மீட்க முடியாத ஒரு உலகத்துக்குப் போய்க்கொண்டி ருப்பதை மாத்திரம் உணர முடிந்தது. இரவு முழுதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுது அவள் கண்கள் வீங்கிச் சிவந்து சிறுத்து இருந்தன. உடம்பும் விண்ணென்று வலித்தது. இரவு அவளுடைய கணவன் கணேசன் அடித்த அடியில் வதனியின் கன்னங்கள் உப்பிச் சிவந்திருந்தன. இடுப்பு எலும்பு ஒடிந்துவிடுமாற் போல் வலித்தது. இரண்டு மூன்று நாட்களாய் வதனிக்கு நித்திரை இல்லை. நேற்றில் இருந்து தண்ணீர் சாப்பாடும் இல்லை. வாய் கசந்து பிசுபிசுத்தது. மூக்கை உறிஞ்சிய படி கண்களைத் துடைத்துக் கொண்டு தன் ஹான் பாக்கை எடுத்து திறந்து போனை எடுத்து ஒன் பண்ணினாள். கணேசனிடம் இருந்து ஆறு மிஸ் கோல் வந்திருந்தது.

காலை ஆறு மணிக்கு தாயைப் பார்க்க வந்திருந்தான் கணேசன். வதனி அவனைத் திரும்பியும் பார்க்கவில்லை. மௌனமாக நின்று விட்டுப் போய் விட்டான். அவனால் தான் எல்லாமுமே என்று நினைக்கும்போது அவனை நினைக்கவே அருவருப்பாக இருந்தது. ஜேர்மனியில் இருக்கும் தன்னுடைய மகனுக்கும் மகளுக்கும் விடயத்தை எடுத்துச் சொன்னாள் வதனி. அப்போதுதான் தெரிந்தது அவர்கள் எல்லோருக்கும் கணேசன் அறிவித்து விட்டான் என்றும் எல்லோரும் வருவதற்கு ஆயத்தம் செய்வதாகவும் அறிந்து அதிர்ச்சியில் உறைந்து போனாள் வதனி. தன் குற்றத்தை மறைக்க இவ்வளவு வேகமாய் செயல்பட்டிருக்கும் அவனது குள்ளமான மூளையை என்னவென்பது.

கணேசனுக்கு தாய் மேல் பாசம் இல்லாமல் இல்லை. அதைவிடவும் சுயநலம் அதிகம். இத்தனை காலமும் தாயை வைத்துதான் பிழைப்பை நடத்தினான். இனி என்ன செய்யப் போகிறான். இந்த நிலை கணேசனுக்கு ஏற்பட்டிருந்தால் கூட வதனி இப்படிக் கவலைப்பட மாட்டாள். மாமியின் ஆதரவில் ஆறுத லில் தான் வதனி உயிரோடு வாழ்கிறாள். வதனியின் பெற்ற தாய் சகோதரங்கள் ஊருக்குள் இருந்தும் கூட ஏதோ ஒரு காரணம் வைத்து கணேசன் அவர்களை புறம் தள்ளி வைத்துவிட்டான். ஆரம்பத்தில் வதனியின் குடும்பத்தின் வறுமை கஷ்டம் கணேசனுக்கு ஒரு ஏளனமாகப்பட்டது. பின்பு நாளடைவில் வதனியின் தங்கைகளும், தம்பியும் படித்து பட்டம் பெற்று நல்ல வேலைகளில் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். அவர்கள் ஒற்றுமையாக பிள்ளை குட்டிகளோடு வாழ்கிறார்கள். மூத்தவளான வதனிக்குத்தான் கணவன் வாய்க்கவில்லை யென்று ஊருக்குள் பேசிக்கொள்வார்கள் அது உண்மை யும் கூட.

வதனி படிக்கின்ற வயதில் அவளுடைய பேரழகில் மயங்கியவர்கள் பலர். கணேசன் அவளைவிட ஏழு வயது மூத்தவன். வதனி பாடசாலை சென்று வரும்போதெல்லாம் அவளுக்குப்பின்னும் முன்னுமாய் திரிந்து ஒருதலைப் பட்சமாய் காதலித்தான். மூன்று வருடங்கள் இப்படியே ஓடிய பின்பு ஒரு நாள் அருந்ததி வதனியைப் பெண் கேட்டு வந்தாள். இரண்டு குடும்பத்தின் சம்மதத்தோடு தான் திருமணம் நடந்தது. ஆரம்பத்தில் கணேசனிடம் குடிப்பழக்கம் இருப்பது பற்றி ஊரில் அரசல் புரசலாக அடிப்பட்டது. வதனியின் பெற்றோருக்கு தெரிந்தாலும் அவர்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. வசதியான கௌரவமான குடும்பம். அத்தோடு அருந்ததிக்கும் அவள் கணவன் பேரம்பலத்துக்கும் ஊரில் இருக்கும் நல்ல பெயரையும் வைத்துக்கொண்டு வதனியைக் கட்டிக்கொடுக்கச் சம்மதித்தார்கள்.

கணேசனுக்கு நேர் மூத்தவன் ஜேர்மனியில் இருக்கின்றான், தம்பியும் ஒருவன் லண்டனில் இருக்கின் றான். அந்த நேரத்தில் இரண்டு தங்கைகள் திருமண வயதில் இருந்தார்கள். தாய் தந்தை சகோதரிகளுடன் சேர்ந்து வாழும்போதே கணேசனுக்கு குடிப்பழக்கம் இருந்தது. வதனி அதைத் தட்டிக்கேட்டாலோ அறிவுரை சொன்னாலோ அவனுக்கு கோபம் தலைக்கேறி விடும். தன்னிலை மறந்து காட்டுமிராண்டி தனமாய் கத்துவான், அடிப்பான். அந்த கோபத்தின் பயத்தில் அவன் அடக்கு முறைகளுக்கு அவள் அடங்கிப் போனாள். குழந்தைகள் இருவர் பிறந்து பாடசாலை செல்லும் காலத்தில் கணேசனின் தங்கைமார் இருவரும் திருமணமாகி புலம்பெயர்நாடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். அதன் பின் பெற்றோர்களை பார்க்கும் பொறுப்பும். கணேசனைச் சார்ந்திருந்தது. அதுவே அவனுக்கு பெரிய வாய்ப்பாக இருந்தது. கணேசனின் பெற்றோர் நல்ல ஆரோக்கியமானவர்களாகவே இருந்தார்கள். தாங்கள் வாழும் வீட்டை தங்களுக்குப் பின் கணேசனுக்கு த்தான் என உறுதி எழுதியும் வைத்தார்கள். கணேசனின் அப்பா ஒவ்வொருநாளும் சைக்கிளில் ஓடிப்போய் சந்தையில் மீன் மரக்கறி பல சரக்குச்சாமான்கள் என்று வேண்டிக் கொண்டுவந்து வதனியிடம் கொடுப்பார்.

கணேசனுக்கு உழைப்பதில் ஆர்வமில்லை. அப்பாவின் கமங்களை பராமரிக்க ஆட்களை வைத்துக் கொண்டு மேற்பார்வை செய்துகொள்வான். அவனுக்கு தன்னை ஒரு கோடீஸ்வரன் போல் வெளியில் காட்டிக் கொள்ள அதீத ஆசை. வேலையாட்கள், நண்பர்கள், பழகுபவர்கள் எல்லோருக்கும் தன்னை கோடீஸ்வரனாய் புகழ்ந்து தள்ளுவான். கழுத்தில் இரண்டு மூன்று சங்கிலிகளை போட்டுக்கொண்டு சட்டை பட்டனை திறந்துவிட்டுக்கொண்டு திரிவது அவன் வழமை.

“உங்களுக்கென்னப்பா நீங்கள். வெளி நாட்டுக்காரரர்” என்று சொல்லி அவன் நண்பர்கள் சிலர் அவனிடம் இருந்து காசு கறந்துவிடுவார்கள். பெருமைக்கும் ..பகட்டுக்கும் போலிப்புகழ்ச்சிக்குமாய் கணேசன் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு இருந்தான். அதனாலயே அவனைசுற்றி பல போலியான நண்பர்கள் எப்போதும் இருக்கிறார்கள்.

தீபாவளி பொங்கல் வருடப்பிறப்பு என்று வந்தால் கணேசனுக்கும் வதனிக்கும் பிள்ளைகளுக்கும் பேரம்பலமும் அருந்ததியும் தான் உடுப்பு எடுக்கக் காசு கொடுப்பார்கள். பிள்ளைகளின் படிப்புச்செலவுக் கென்றும் தாய் தந்தைக்கு என்றும் வெளிநாடுகளில் வாழும் கணேசனின் சகோதரிகள் இருவரும் அண்ணனும் தம்பியும் போடும் பணத்தில் கள்ளமாய்க் கணக்குக் காட்டி மது போத்தல்களை வேண்டி வீட்டின் எங்கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலையில் ஒளித்து வைத்துவிடுவான். நினைத்த நேரம் எல்லாம் குடிப்பான்.இரவு பகல் பாராமல் குடிப்பான். " பார் பூட்டினா என்ர வீட்ட வா.. என்ர பார் திறந்து தான் இருக்கும் எப்பவும் " என்று நண்பர்களிடம் சொல்லிக் கொள்வான்.

வதனி எத்தனையோ கனவுகளோடுதான் வாழவந்தாள். திருமணமான அன்றே அவனை ஒரு குடிகாரனாகத்தான் பார்த்தாள். அவனில் இருந்து வந்த நெடி அவளை அருவருக்க வைத்தது."உன்ன கலியாணம் கட்டிக் காட்டுறன் எண்டு என்ர கூட்டாளிகளிட்ட சவால் விட்டனான். அதுபோலவே செய்து காட்டீட்டன்.." என்றபடி சிகரெட்டை இழுத்து வெளியேற்றியபடி, நக்கலாய் சிரித்தான். அவனது அந்த மகிழ்வு ஒரு விளையாட்டுப் போட்டியில் வென்ற மகிழ்வா? அல்லது ஒரு போதைக்குரிய பொருளை வேண்டி உட்கொள்ளும்போது ஏற்படும் அற்ப சுகத்தின் மகிழ்வா? அவளின் பின்னால் சுற்றிய போதெல்லாம் காட்டியது கதைத்தது எல்லாம் காதல் இல்லையா.. அல்லது இந்தமிருகத்தனம் தாண்டி.. மதுவின் வெறித் தனமும் தாண்டி அவனிடம் ஒரு இதயம் இருக் கின்றதா..? அவளுக்கு ஒன்றும் புரியாமல் இருந்தது. எது எப்படியோ அவளை விட அவன் மதுவை நேசிக் கின்றான். அவளின் விருப்பம் என்ன?ஆசைகள் என்ன என்பதை அவன் எப்போதும் தெரிந்துகொள்ள விரும்ப வில்லை என்பதை அவள் வாழ் நாள்முழுவதிலும் தெரிந்து கொண்டாள். அவன் தனக்குத் தேவைப்படும் நேரம் அவள் அதுவாக மாறவேண்டும் என எதிர் பார்க்கிறான். அவளின் சுக துக்கங்களைச்சிந்திப்பது இல்லை. இந்த முட்டாள்தனங்கள்.. பலாத்காரங்கள்... இம்சைகள், ஒட்டுமொத்த சுயநலம்கள் தான் அவளை அவனிடத்தில் இருந்து மனதளவில் பிரித்து வைத்தது. எப்போதும் அவன் மாறப்போவதில்லை என்பதை அவன் கடந்த காலங்களில் நிரூபித்து விட்டான்.

கணேசனின் குடிப்பழக்கம் குடும்பம் பிள்ளைகுட்டியென வர தானாகத் திருந்தி விடும், அவனது பட்பட்டென்று வரும் கோபமும் மாறிவிடும் என பேரம்பலமும் அருந்ததியும் நினைத்தார்கள். பிள்ளைகள் வளர்ந்தும் கூட அவனில் மாற்றம் வரவில்லை. மகளின் பூப்புனித நீராட்டு விழாவில் கூட அவனால் குடிக்காமல் இருக்க முடியவில்லை.வீட்டில் எந்தச்சம்பவம் நடந்தாலும் நண்பர்களைக் கூட்டிக் குடிப்பது அவனது வழமை.இதனால் பிள்ளைகளின். வெறுப்புக்கும் ஆளாகி விட்டான். மகன் தயாளன் பொறுத்துக்கொண்டாலும் மகள் தமிழ்நதி பொறுக்க மாட்டாள். ஒருமுறை தமிழ்நதியின் தோழிகள் வீட்டுக்கு வந்திருக்கும் போது கூட நன்றாக குடித்துவிட்டு வெறியில் வந்து சத்தமாய் பிதற்றிக்கொண்டிருந்தான். "என்னம்மா இவர் ..அப்பா எண்டு சொல்லவே வெட்கமாய் இருக்கு.." என்று தலையில் அடித்து ஓவென்று அழுதாள். அதன்பிறகு மகள் கணேசனோடு கதைப்பதில்லை. அதற்கும் அவன் வதனியையே குற்றம் சாட்டி சண்டை உருவாக்கினான். அறைக்குள் கூட்டிச்சென்று என்ர பிள்ளைகள என்னட்ட இருந்து பிரிக்கப்பாக்கிறியாடி? நல்லா போட்டு போட்டு குடுக்கிற" என்று சொல்லிக்கொண்டே அவளின் கன்னத்தில் அடித்தான். அடியின் வேகத்தில் தலை சுவரில் மோதியது.

முன்பும் பல தடவை அவன் சகோதரிகள் வீட்டில் இருக்கும்போதும் இப்படித்தான் வதனியைத் தனியே கூப்பிட்டுத்தான் அடிப்பான். பல தடவை வதனி அதை வெளியில் காட்டிக்கொள்ளவில்லை. சில தடவைகள் அவள் வாய்விட்டு மூத்த மைத்துனியிடம் சொன்னதுண்டு. "நீயும் ஒரு மனுசனே..சீ..." என்று... அவளும் பேசினாள்.திருந்தி நடப்பது போல் பாவனை செய்தான். ஆனால் வதனி மேல் உள்ள காட்டம் குறைய வில்லை. வதனி பல வேளைகளில் தற்கொலை செய்து விடலாம் என்னும் அளவுக்கு கூட நினைத்திருக்கிறாள். ஆனால் பிள்ளைகளுக்காக தன் உயிரை வைத்திருக் கிறாள். அவள் அனுபவித்துக்கொண்டிருக்கும் ஒவ்வொரு கொடுமையும் தன்னை போன்று குடிக்கு அடிமையானவர்களை மணந்த மனைவிமார்கள் அனுபவிக்கும் கொடுமை தானே என நினைத்துக் கொள் வாள். எத்தனை தாயுமானவர்கள் இவற்றையெல்லாம் சகித்துக்கொண்டு பெற்ற பிள்ளைகளுக்காக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இது காலம் காலமாக பேசப் பட்டும் திருத்த இயலாமல் இயல்பாகி விட்ட ஒன்றாகி இருக்கிறது.

திடீரென ஒருநாள் பேரம்பலத்திற்கு நெஞ்சுவலி வந்து ஆஸ்பத்திரிக்கு கொண்டு போவதற்கு முன் இறந்து போனார். மாமாவின் இழப்பு வதனியை இன்னமும் பாதித்தது. அதன் பின் வந்த காலங்களில் கணேசனின் சகோதரிகளின் உதவியுடன்பிள்ளைகளும் வெளிநாடு போய்விட்டார்கள். கணேசனின் எல்லா சகோதரங்களும் தங்கள் தாயை அண்ணண் வைத்து தாங்குவதாகவே நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஏற்றவாறே கணேசன் பல நாடகங்களை நடிப்புக்களை அரங்கேற்று வான். அதையும் நம்பி அவர்கள் காசை அள்ளி இறைப் பார்கள். ஒவ்வொரு நாளும் போனில் நண்பர்களுக்கு அழைத்து ஒவ்வொரு சாட்டு சொல்லி குடி விழாவை அரங்கேற்றுவான். "என்னடா இண்டைக்கு விசேசம் ஒண்டும் இல்லையே.. பார்ட்டி ஒண்ட போடுவம்" என்பான். திருந்த முடியாத கட்டத்தைக் கடந்து விட்டான் என்று நினைத்தாளோ என்னமோ அருந்ததியும் கணேசனைக் கண்டு கொள்வதில்லை.

வதனியை தன் சகோதரங்களிடம் கதைக்க கணேசன் விடுவதில்லை. அப்படி கதைக்கவிட்டாலும் பக்கத்திலயே அமர்ந்திருந்து எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருப்பான். ஒருவார்த்தை மாறினாலும் வதனிக்கு என்ன நடக்கும் என்பது தெரியும். அவ்வப்போது கணேசனுக்கு வதனி மீது காதல் வெதும்பி வழியும். "என்ர மகாராணி, என்ர ராசாத்தி " என்றபடி திரிவான். சில கண நிமிடங்களிலயே ஏதோ ஒன்றுக்காய் கோபம் வரும், அதே வாயாலயே கெட்ட வார்த்தைகளால் திட்டி தீர்ப்பான். இதொன்றும் வதனிக்கு புதிதல்லவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதனிக்கு மகன் ஒரு போன் அனுப்பி இருந்தான். மகன், மகளோடு கதைக்க என்பதால் கணேசன் அதற்கு அனுமதி குடுத்திருந்தாலும் சந்தேக கண்ணோடு தான் பார்த்துக்கொண்டிருந்தான். ஒரு நாள் வதனி மனம் பொறுக்கமுடியாமல் கணேசனின் அண்ணாவிடம் கணேசனின் நடத்தைகள் பற்றியும் அவர்கள் கஷ்டப்பட்டு உழைக்கும் காசை கணேசன் ஊதாரித்தனம் செய்வது பற்றியும் சொன்னாள். அதை அவனது அண்ணா கணேசனிடம் உடனடியாக போன் எடுத்துக் கேட்டுவிட்டார். ஆனால் அவர் தனக்கு வதனி சொன்னதாக காட்டிக்கொள்ளவில்லை. கணேசன் ஊகித்துக் கொண்டான். அன்றுதான் ஒரு பூகம்பம் நடந்துமுடிந்தது. "வதனி " என்று கணேசன் அழைத்த தொனியில் அவளுக்கும் புரிந்து போனது.

"என்ர சகோதரங்களிட்ட என்னைப் போட்டுக் குடுக்கிறியா?" என்று ஏதேதோ தூசண வார்த்தைகள் கூறிக்கொண்டு வந்த வேகத்தில் பாய்ந்தான். அவளின் கையை எதிர்பக்கமாய் பிரட்டியதில் அவள் கையும் முறிந்து போனது. விடயம் அறிந்து கணேசனின் சகோதரங்கள் பிள்ளைகள் கணேசனைத்திட்டித் தீர்த்தார்கள்.

"என்னம்மா இந்த ஆள்.. இப்புடி.. சீ.. உன்னைப் போல் நானெண்டால் ஒருநாள்ல தூக்கி போட்டுட்டு போயிடுவன் அம்மா." என்று கத்தினாள் மகள். "நான் தூக்கிப்போட்டுருந்தா அவர் நடுரோட்ல கிடந்திருப் பார், நீங்கள் இந்தளவுக்கு ஆகி இருப்பியலோ தெரி யாது.. இந்த குடும்பத்துக்காக மாமா மாமிக்காக நான் சகிச்சு பழகிட்டன் ..இந்த சகிப்புகள் எங்கட காலத் தோட முடியட்டும்" என்றாள் வதனி. அதன் பிறகு கணேசனின் சகோதரங்களோடு கணேசனைப் பற்றி சொல்வதில்லை. தான் உண்டு தன் பாடுண்டு என இருந்துவிட்டாள்.

அருந்தியின் 75வது பிறந்தநாள் வந்தது. அதற்காக முன் ஆயத்தமாக ஒருமாதத்துக்கு முன்பே கணேசன் திட்டங்களைத் தீட்டி வைத்தான்."முதியோர் இல்லத்துக்கு சாப்பாடு குடுக்க வேணும்..அயல் அட்டத் துக்கும் சொல்லி கேக் கட் பண்ண வேணும்...அம்மாவ சந்தோசமா நிக்க வைக்கோணும் .." என்று ஒரே கதையை ஒவ்வொரு சகோதரத்துக்கும் சொன்னான்.

"எனக்கு பிறந்த நாளும் வேண்டாம் ஒண்டும் வேண்டாம்" அருந்ததி பெரிய குரலில் சொன்னாள். வதனி ஒன்றும் பேசவில்லை."அம்மா பிறந்த நாள் நீங்கள் கொண்டாடுறேல்ல.. ..நாங்கதான் உங்களைக் கொண்டாடுறது.."என்று ஏதேதோ சொல்லி அருந்ததியையும் சம்மதிக்க வைத்துவிட்டான்.

வீட்டில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வுக்கும் அவன் நண்பர்களைக் கூட்டிக்கொண்டு வந்து குடித்துக் கூத்துப் போடும் வழமையை இங்கும் விட்டு வைக்கவில்லை. அதனால் பாதிக்கப்படுவது ஒவ்வொரு முறையும் வதனி தான். இம்முறை பேசாமல் இருப்போம் எதையாவது செய்து தொலைக்கட்டும் எனத்தான் இருந்தாள். அருந்ததியின் பிறந்த நாளான இந்த 25ம் திகதியை வாழ்வில் மறக்க முடியாது. அன்று காலையிலேயே கணேசன் குடிக்கக் தொடங்கி இருந் தான். "என்ன மகாராணிக்கு முகம் நீழுது..இண்டைக்கு நான் மூக்கு முட்டக் குடிப்பன்..என்ன ஒருத்தரும் ஒண்டும் சொல்லக்கூடாது.." வதனியைப்பார்த்து சொல்லிக் கொண்டே போனான். அருந்திக்கு கணேசனின் செயல்பாடுகள் பிடிக்காமல் போகவே அவனை இரண்டு மூன்று தடவை அழைத்து சொல்லியும்பார்த்தாள். அருந்ததி ஏற்கனவே பாத்ரூமில் சறுக்கி வீழ்ந்ததில்பொல்லு ஊன்றித்தான் நடப்பாள். மெல்ல எழுந்து வதனியின் துணையோடு கேக்கை கட்பண்ணினாள். நிறை வெறியில் நின்ற கணேசனைக் கூப்பிட்டுவதனி ஒருபுறமும், கணேசன் ஒருபுறமுமாய் நின்று அருந்ததிக்கு கேக்ஊட்டினார்கள். வீடியோ அழைப்புகளில் மக்கள் பார்த்துக்கொண்டிருந்தார்கள். " வதனி.. கூட கேக் சாப்பிடாத.. பிறகு பிரஸர் கூடிட்டு எண்டு என்னை போட்டு பேசித்தான் குறைக்கோணும் " என்று கணேசன் சொன்னதற்கு சகோதரங்கள், அயலவர்கள், நண்பர்கள் எல்லோரும் சிரித்தார்கள். சிரிக்கும் மனநிலையில் வதனி இல்லை.

வாழ்த்த வந்தவர்கள் சென்றுவிட, நடு இரவு ஆன பின்பும் குடிக்க வந்த நண்பர்கள் குடித்துக்கொண்டி ருந்தார்கள். போதையின் உச்சத்தில் எல்லோரும் நின்றார்கள். கணேசன் போன் செய்து " தம்பி.. இன்னு மொரு நாலு போத்தல் எடு " என்று சொல்லும் சத்தம் வதனிக்கு கேட்டது. வெளிநாட்டில் இருந்து கஷ்டப் பட்டு அனுப்பும் காசை கணேசன் செலவு செய்யும் விதத்தை நினைத்து வதனி வேதனைப்பட்டாள். கணேசனும் நண்பர்களும் ஆடினார்கள் பாடினார்கள் . "எல்லாம் காணும் எல்லாரும் போங்கோ..மனுசர் நித்திரை கொள்ள வழியில்ல.."என்று அருந்ததி சினந்தாள். யாரும் அவள் சொல்லைக் கேட்பதாக இல்லை. திடீரென கணேசனின் போன் அடித்தது. கணேசன் கொஞ்சம் தடுமாறினான்." ஆ...அண்ணா.. அம்மாட்டக் குடுக்கிறன் கதையுங்கோ.."கணேசன் தன் போனைக் கொண்டுவந்து அருந்ததியிடம் கொடுத்தான். கணேசனுக்கு போதை தலைக்கேறி இருந்தது.

"எனக்கு ஒருத்தருக்கும் பயமில்லை.. நான் இல்லாட்டி அம்மாவை யார் பாக்கிறது.. ஆ..." சொல்லிக்கொண்டே வெளியிலே போனான்.

இரவு 1 மணிஇருக்கும் கணேசனின் இரண்டு நண்பர்கள் அவர்கள் வீடுகளுக்குப் போய்விட்டார்கள். ஒருவன் மாத்திரம் நின்றான். அவனும் முற்றத்தில் போட்ட விருந்தினருக்கான சிறு கொட்டகைக்குள் போய்ப் படுத்துக்கொண்டான். மீண்டும் இரண்டு மணி யளவில் கணேசனின். போன் அடித்தது. கணேசனின் தங்கைகள் இருவரும் வீடியோ கோலில் நின்றார்கள். அவர்களோடு கதைக்கும் நிலையில் கணேசன் இருக்க வில்லை. அவன் தடுமாறி தடுமாறிஅவர்களோடு கதைத் தான். அவர்கள் லைனில் நிற்க்கும்போதே அவன் சாராயப் போத்தலைக் கொண்டு வந்து கிளாசில் ஊற்றி னான். "இண்டைக்கு அம்மாட நாள்.. நான் குடிப்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருத்தரும் கேட்க ஏலாது.. அம்மாவே கேட்க ஏலாது" என்றான். போன் கட்டாகியது.

ஒரு காட்டுக்குருவி வீட்டுக்கு மேலால் கத்திக்கொண்டு போனது. தூரத்தில் இரண்டு நாய்கள் அடிபட்டு சண்டை போட்டுக்கொண்டன. அருந்ததி மெல்ல உறங்க ஆரம்பித்திருந்தாள். வதனிக்கு உறக்கம் வரவில்லை. அவள் சாப்பிடவும் இல்லை. அவளுக்கு கணேசன் மேல் எல்லையில்லாத வெறுப்பாக இருந்தது. அவன் அளவுக்கு அதிகமாக குடித்துக் கொண்டிருந் தான். யார் இதை நிறுத்துவது?யார் தட்டிக் கேட்பது? "என்னை விட்டு நீ போ"என்று அடிக்கடி அவன் போதையில் கத்துவான். அவளுக்கும் போக விருப்பம் தான். அம்மா அப்பாவோடு போய் வாழ்வதா?மாமியை விட்டு எப்படி? இந்தப் போராட்டத்தில் தான் வதனி வாழ்ந்துகொண்டிருக்கிறாள். அருந்ததி மெல்ல உறங்க தொடங்கி இருந்தாள். திடீரென வதனியின் போன் அடித்தது. அவளின் மாமியின் தூக்கம் கலைந்து விடக் கூடாது என நினைத்து போனை எடுத்துக்கொண்டு வெளியே போனாள் வதனி.

"ஆரடி போன்ல.."பாய்ந்து வந்தான் கணேசன்.

"பெரிய மச்சாள்.."

அவசரமாகக் கூறினாள்.

"என்ன ..என்னைப் பற்றி போட்டுக் குடுக்கிறியா..? அல்லது வேறு யாரும்... உன்ன.." என்று உளறிய படியே தடுமாறி ஓடி வந்தான்.

"என்ன சொன்னனி.." கணேசனை திருப்பிக் கேட்டாள் வதனி. அடக்கி வைத்திருந்த கோபம் அவள் வார்த்தையில் திமிறியது.

"யாரடி போன்ல"

"நான் யாரோட கதைச்சா உனக்கென்ன.." என்றாள். கணேசனுக்கு கோபம் பிய்த்துக்கொண்டு வந்தது. " எதிர்த்துக்கதைக்கிற அளவுக்கு உனக்கு திமிர் கூடிட்டு என.." என்றபடி கன்னத்தில் அடித்தான்.

"ஐயோ மாமி.."வதனியின் கதறலில் அருந்ததி திடுக்குற்று

விழித்து தட்டுத் தடுமாறி தன் ஊன்றுகோலை எடுத்துக்கொண்டு நிமிரும்போது தடுமாறி வாசல் படியில் மண்டை அடிபட வீழ்ந்தாள். "மாமி..." கணேசனின் பிடியில் இருந்து பறித்துக் கொண்டு ஓடி வந்து அருந்ததியைத் தூக்கினாள் வதனி. அருந்ததி சுய நினைவை இழந்திருந்தாள். அதற்குப்பின் அம்புலன்சுக்கு அறிவித்து எப்படி ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்தாள் என்பது அவளுக்கே தெரியவில்லை. மூன்று நாட்கள் கழிந்தும் அருந்ததி கண் திறக்கவில்லை.இனிமேல் ஒரு நிமிடமேனும் கணேசனுடன் வாழப்போவதில்லையென தீர்க்கமான முடிவுக்கு வந்திருந்தாள் வதனி. அருந்தி யின் வெளிநாட்டில் உள்ள பிள்ளைகள் எல்லோரும் வந்து விட்டார்கள். "அம்மா தற்செயலாய் சறுக்கி வீழ்ந்து விட்டா" என்ற கணேசனின் கூற்று அங்கு மெய்யாக பரவி நின்றது. வதனியின் வார்த்தைக்கு அங்கு உயிர்ப்பு இல்லை.

# அழகின் சிரிப்பு



பால்மணம் மாறாப்
பாலகன் வதனம்
பட்டுப் பசுமையென
பளிச்சிடும் கண்களும்
குளிர்ச்சிதரும் பார்வைகளும்
சின்ன விழி அசைவும்
சிந்திடும் அமுதாக
சிரித்திடும் அழகு
சிந்தைக்கும் அதுவே
இனித்திடும் சிரிப்பழகு.

கொஞ்சிக் குலாவிடும்
கொவ்வை இதழ் தனிலே
மெல்ல உதிர்ந்திடும்
சொட்டுச் சொட்டு மொழிகள்
மிஞ்சி உலாவரும்
மழலைச் சிரிப்பழகு.

முற்றத்தில் மல்லிகையும்
முல்லையும் ரோஜாக்களும்
தென்றலின் தாலாட்டில்
தலையசைக்கும் மௌன மொழி
காற்றுடன் கலந்து வந்தே
செவிகளை வருடுகின்ற
சுகந்தத்தில் காணுமொரு
சுகமான சிரிப்பழகு.

வாடாத மல்லிகையும்
வண்ண இதழ் செம்பருத்தி
மூடாத இதழ்களிலே- வண்டு
முத்தமிடும் ரீங்காரம்
மலர் ஆடி மகிழுமந்த
அழகினில் ஓர் சிரிப்பு.

தத்தித்தத்தி விளையாடும்
குட்டிச்சிறு பாப்பாக்கள்
எட்டி நடை போடும்
இன்பத்தில் திளைத்த மனம்
உள்ளுக்குள் சிரிப்பதிலே
உவகை கொள்ளும் பேரழகு.

காற்றினிலே கலந்ததொரு
கானம் செவி செல்லுகையில்
ஊற்றெடுக்கும் இன்பமது
உள்ளத்தில் இனிமையூட்ட
கண்களுக்கு இமைவந்து
மெல்லத் திரைபோடும்
நாடி நரம்புகளும்
சேர்ந்தே இசைப்பதிலே
முகத்தில் பரவுமந்த
மோகனச் சிரிப்பழகு.

நஸீரா எஸ் ஆப்தீன்
ஏறாவூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கே எமது பாரம்பரியம்... ??

அள்ள அள்ள குறையாத
அட்சய பாத்திரமாய்

நெல் வயல் தோட்டம்
நீர் நிலைகள் சூழ்ந்திருக்க

குதிருக்குள் குறையாது
நெல் மணிகள் குவிந்திருக்க

குரக்கன் பயறு உழுந்து என
நவதானியம் நிறைந்திருக்க

பட்டி நிறைய மாடுகளும்
சட்டி நிறைய பால் தயிரும்

நிறையுணவு புரதம் என
நாட்டுக்கோழி முட்டைகளும்

கொல்லைப்புற ஓரத்தில்
வளர்ந்திருக்கும் காய்கறியும்

அள்ளி அள்ளிச் சாப்பிட்ட
காலம்தான் இனிவருமோ

கிள்ளிச் சாப்பிட்டாலே
இரத்தத்தில் சர்க்கரை

ஒரு பிடி அதிகமானால்
செமிக்காது மூச்சு முட்டும்

எண்ணேய் கொஞ்சம் சேர்ந்து விட்டால்
கொழுப்பு வந்து நெஞ்சடைக்கும்

ருசிக்குச் சாப்பிட்டால் தான்
நோய்வந்து சேருதென்றால்

பசிக்குக் கூட உண்ண முடியா
வாய் கட்டி வாழும் நிலை

நாகரீகமென எண்ணி
வித விதமாய் உணவுண்டு

உடல் முழுவதும் வித விதமாய்
மாறாத நோய் கொண்டோம்

பாரம்பரியமான எம்
உணவுதனை மறந்ததனால்

சிவகௌரி (சுடரி )
வவுனியா



## பேனா முனைகள்

காகிதத்தைத் தொட்ட
பேனா முனைகள்
கண்ணீர் சிந்துகின்றன
சிறைக்கூடத்தினுள் இருக்கும்
சிறைக்கைதியின் ஏக்கங்களை
அவரவர் சுவர்களில்
வரைவது போலல்லவே
அவை காகிதங்களில்
தன் மனதைப் புதைக்கின்றன.
உயிரும் மெய்யும் இணைந்தால்
மனித உடல் மட்டுமல்ல
அது எழுத்துலகமும்தான்
தன்னிலே இன்பம் காணும்
ஒவ்வோர் படைப்பாளனுடைய
பேனா முனைகளும்
தனக்குள் தானே பேசிக்கொண்டு
தன்னைத் தானே தட்டிக்கொள்கின்றன
என் கண்ணீரே உன் ஆயுதமென!

எ.மிலானி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்காணல்

குரு அரவிந்தன் அவர்கள் கனடா நாட்டில் புலம்பெயர்ந்து வாழும் எமது எழுத்தாளர். ஆழ்ந்த இலக்கியப்புலமைமிக்க குரு அரவிந்தன் இலக்கியத்தின் பல்வகைமை களிலும் சிறப்பாக செயற்பட்டு வருபவர். அவருடைய இலக்கிய வாழ்வு பற்றிய அறிதலுக்காக இவ் நேர்காணலை ஜீவநதி வாசகர்களுக்கு தருவதையிட்டு மகிழ்கின்றோம்

**பரணீ:**

**வணக்கம் குரு அரவிந்தன் அவர்களே, உங்களுக்கு கனடாவில் தமிழ் இலக்கிய சேவைக்காக வாழ்நாள் சாதனையாளர் உயர் விருது கிடைத்திருப்பதையிட்டு ஜீவநதி இதழ் சார்பாக எங்கள் பாராட்டு களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். உங்களைப் பற்றிய ஓர் அறிமுகத்துடன் ஆரம்பிக்கலாமா?**

**குருஅரவிந்தன்:**

வணக்கம், வாழும்போதே ஒருவரின் சிறந்த சேவைக்காகக் கௌரவிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு கனடாவில் கடந்த 32 வருடங்களாக இலக்கியச் சேவையாற்றிவரும் எழுத்தாளர் இணையத்தினர் அவர்களின் உயர் விருதாக இந்த விருதை அறிவித் திருந்தார்கள். இது தனிப்பட்ட ஒருவரின் விருதல்ல, வாழும் போதே ஒருவரைக் கௌரவிக்கும் ஒரு அமைப்பினரின் விருது என்பதால் இதை மதிக்கின்றேன்.

எனது தந்தை அருணா சலம் குருநாதபிள்ளையின் ஊர் இலங்கையின் வடபகுதியில் உள்ள காங்கேசந்துறையில் உள்ள மாவிட்டபுரம். எனது தாயார் இலக்குமி சண்டிலிப்பாயைப் பிறப் பிடமாகக் கொண்டவர். தந்தை காங்கேசந்துறை நடேஸ்வரக் கல்லூரியில் கனிஸ்டபாடசாலை அதிபராகவும், காங்கேசந்துறை பட்டினசபை 2 ஆம் வட்டார பிரதிநிதியாக வும், பட்டினசபை முதல்வராகவும் பணியாற்றியவர்.

இலங்கையில் நடேஸ்வரக்கல்லூரி, மகாஜனக்கல்லூரி, பட்டயக் கணக்காளர் நிறுவனம் ஆகியவற்றில் கல்வி கற்று கொழும்பில் மகாராஜா நிறுவனத்தில் கணக்காளராகப் பணியாற்றினேன். போர்ச்சூழல் காரணமாக கனடா நாட்டிற்கு 1988 ஆம் ஆண்டு புலம்பெயர்ந்து இங்கும் கணக்காளராக வும், பகுதிநேர ஆசிரியராக ரொறன்ரோ கல்விச்சபையிலும் பணியாற்று கின்றேன்.

எழுத்தாளரான எனது மனைவி மாலினி அரவிந்தன் சுண்டுக்குளி பெண்கள் பாடசாலையில் படித்தவர். கணக்காளராகவும், ஆசிரியராகவும் இங்கு பணியாற்றினார். இலங்கை வங்கியின் அதியுயர் முகாமையாளராக (GM) பணியாற்றிய திரு.கு. சிவகணநாதன் எனது மூத்த சகோதரர், மகாஜனக் கல்லூரி முன்னாள் அதிபர் பொ. கனகசபாபதி எனது மூத்த சகோதரியின் கணவர், எழுத்தாளர் குறமகள் வள்ளிநாயகி எனது ஒன்றுவிட்ட சகோதரி.

**பரணீ:**

**எழுத்துலகில் ஆர்வம் ஏற்பட என்ன காரணம்?**

**குருஅரவிந்தன்:**

எனது தந்தையார் வீட்டிலே ஒரு சிறிய படிப்பகம் வைத்திருந்தார். அப்போது விகடன், கல்கி, கலைமகள், மஞ்சரி, இதயம் பேசுகிறது போன்ற







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இதழ்கள் வீட்டிற்கு வரும். எங்களுக்காக அம்புலிமாமா, கண்ணன், அரும்பு போன்ற சிறுவர் இதழ்களும் கிடைக்கும், அக்கா கௌரி திருச்சியில் உயர்படிப்பு படிக்கும்போது எனக்காகக் கதைப்புத்தகங்கள் வாங்கிக் கொண்டு வருவார். அதனால் மாணவப் பருவத்தில் அதிகம் வாசிக்க சந்தர்ப்பம் கிடைத்தது, அதுவே எழுதலாம் என்ற நம்பிக்கையை எனக்குத் தந்தது.

பரணீ:

**இலங்கையில் வெளிவரும் பத்திரிகைகளில் எழுதிய அனுபவம் உண்டா?**

குருஅரவிந்தன்:

மாணவனாக இருந்த போது, "அணையாத தீபம்" என்ற எனது முதற்கதை ஈழநாடு ஞாயிறு இதழில் முதலில் வெளிவந்தது. தொடர்ந்து வீரகேசரி, தினகரன், ஈழநாடு, அரும்பு, ஞானம், தினக்குரல், ஜீவநதி போன்ற இதழ்களில் எனது ஆக்கங்கள் வெளிவந்தன.

பரணீ:

**புலம் பெயர்ந்த பின் உங்கள் எழுத்துகளில் மாற்றங்கள் ஏற்பட்டதா?**

குருஅரவிந்தன்:

சிந்தனைகளிலும், செயற்பாடுகளிலும் நிறைய மாற்றங் கள் ஏற்பட்டன. தாயகத்தில் தவறு என்று சொல்லப் பட்டவை இங்கே சரியானதாகவும், அங்கே சரி என்று நினைத்தவை இங்கே தவறானதாகவும் இருப்பதை உணரமுடிந்தது. எழுத்துச் சுதந்திரம் இங்கே இருந்ததால் துணிந்து எழுத முடிந்தது. போர்ச் சூழலில் எம்மினம் பட்ட அவலங்களை முதன் முதலாகத் தமிழக பிரபல பத்திரிகைளில் வெளிக் கொண்டுவர வாய்ப்புக் கிடைத்தது. குறிப்பாக விகடன், குமுதம், கல்கி, கலைமகள், கணையாழி, யுகமாயினி, இனிய நந்தவனம் போன்ற பிரபல இதழ்களில் பல கதைகள் தொடர்ந்து வெளிவந்ததால் எனக்கான பெரியதொரு வாசகர் வட்டம் அங்கே உருவானது. விகடன், கலைமகள், யுகமாயினி போன்ற தமிழக இதழ்கள் நடத்திய குறுநாவல் போட்டிகளிலும் பரிசு கிடைத்தது. எனது வாசகர்வட்டம் நடத்திய திறனாய்வுப் போட்டியில் 14 நாடுகளில் இருந்து பலர் பங்குபற்றியிருந்தார்கள்.

பரணீ:

**இலங்கையில் "ஞானம் இலக்கியப் பண்ணை" கதாவித்தகர் என்ற பட்டத்தை 2019 ஆம் ஆண்டு உங்களுக்குக் கொடுத்திருக் கிறார்களே, அப்படியானால் இதுவரை எத்தனை சிறுகதைகள் எழுதியுள்ளீர்கள்.**

குருஅரவிந்தன்:

சுமார் 150 மேற்பட்ட கதைகளைப் புலம்பெயர்ந்த மண்ணில் எழுதியிருக்கின்றேன். சிறுகதை. கொம் என்ற இணைய இதழ் "தமிழினி" என்ற எனது 100 வது கதையை வெளியிட்டு பாராட்டியிருந்தார்கள். கல்கியில் வெளிவந்த "ஒரு அப்பா, ஒரு மகள், ஒரு கடிதம்" என்ற கதையை சுமார் 265,000 சர்வதேச வாசகர்கள் இதுவரை படித்திருக்கிறார்கள், கலைஞர் தொலைக்காட்சியினர் அந்தக்கதையைக் குறும்படமாக்கியிருக்கிறார்கள். அதில் உள்ள எனது சில கதைகளை ஒருலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் படித்திருக்கிறார்கள் என்பதையும் அவதானித்தேன். வாசர் ஒவ்வொருவரின் ரசனையும் வித்தியாசமானது, ஆனாலும் எனது கதைகளை விரும்பி வாசிக்கிறார்கள்.

பரணீ:

**இந்த எழுத்துலகில் தொடர்ந்து செயற்படுவதற்கு நீங்கள் எதிர் கொள்ளும் தடைகள் அல்லது சவால்களாக எதனைப் பார்க்கிறீர்கள்.**

குருஅரவிந்தன்:

பொதுவெளி என்பதால் சவால்களை நிறையச் சந்திக்க வேண்டும். தமிழக இதழ்களில் எனது கதைகள் வெளி வரத் தொடங்கியதும் விகடன் ஆசிரிருக்கு என்னை "ஒரு புலி" என்றும் எனது ஆக்கங்களை வெளியிட வேண்டாம் என்றும் செய்தி அனுப்பியிருந்தார்கள். அதேபோல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுகமாயினி ஆசிரியருக்கும் அனுப்பியிருந்தார்கள். இந்த ஆசிரியர்கள் எனது நல்ல நண்பர்கள் என்பதால் அதை எனக்கே திருப்பி அனுப்பியிருந்ததால் முதுகில் குத்துபவர்களைப் பார்த்து நான் விழித்துக் கொண்டேன்.

எனது சிறுகதைத் தொகுப்பிற்குச் "சதிவிரதன்" என்று பெயரிட்டேன். நான்தான் புதிதாகத் தமிழில் அந்தச் சொல்லை உருவாக்கினேன். தமிழில் ஒரு புதிய சொல்லை உருவாக்க கற்றறிந்த அறிஞர்கள்தான் உருவாக்க வேண்டுமே தவிர எழுத்தாளன் அல்ல என்று மெய்நிகர் வழியாகச் சிலர் வாதிட்டார்கள். பேராசிரியர் சுப்ரமணிய ஐயரும், பேராசிரியர் கரு முத்தையாவும் அதற்கு மறுப்புத் தெரிவித்து எழுத்தாளனுக்கு அதற்கான தகுதி இருக்கிறது, அகராதியில் உள்ள சொற்கள் எல்லாம் கவிஞர்களும், எழுத்தாளனும் உருவாக்கிய சொற்களே என்று சிறந்ததொரு விளக்கம் கொடுத்தார்கள். பதிவிரதை என்ற தமிழ் சொல்லுக்கு எதிர்ப்பாலாக "சதிவிரதன்" (மனைவிக்கு நேர்மையாக இருப்பவன்) என்ற இந்தச் சொல்லை நான் உருவாக்கினேன். இது போல ஆறாம்நிலத்திணையை நான் முதலாவது உலக தொல்காப்பிய மாநாட்டில் அறிமுகம் செய்தபோது சிலர் அதில் உடன்படவில்லை. தொல்காப்பியத்தை விட்டு விலகிப் போகமுடியாது என்றார்கள். அப்படியானால் பாலை நிலம் எப்படி ஐந்தாவது நிலத்திணையாக வந்தது என்ற எனது கேள்விக்கு இதுவரை அவர்களிடம் பதில் இல்லை. திறமை இருந்தால் யார்தான், என்னதான் அலட்சியப் படுத்தினாலும் அது தானாக வெளிவரத் தான் செய்யும், வாசகர்கள் தேடி வாசிக்கத் தொடங்கி னால் அவர்கள் உங்கள் எழுத்தை அங்கீகரிக்கிறார்கள் என்று அர்த்தம் கொள்ளலாம்.

பரணீ:

**இங்கே பலரும் எழுதுகின்றார்கள் ஆனால் பெரியதொரு சர்வதேச வாசகர் வட்டத்தை எப்படி உங்களால் உருவாக்க முடிந்தது?**

குருஅரவிந்தன்:

நான் கனடாவில் எழுதத் தொடங்கிய காலத்தில் கனடா உதயன் பத்திரிகை ஆசிரியர் ஆர். என் லோகேந்திலிங்கம் தனது முழு ஆதரவையும் தந்தது என்னைக் கனடிய வாசகர்களுக்கு அறிமுகமாக்கினார். தமிழகத்தில் முதலில் விகடன் இதழும் அதைத் தொடர்ந்து ஏனைய தமிழக பிரபல இதழ்களும் முழு ஆதரவையும் தந்ததால், தமிழக வாசகர்களுக்கு அறிமுகமானேன். இலங்கையில் வீரகேசரி, தினகரன், தினக்குரல், ஈழநாடு, ஞானம், ஜீவநதி இதழ்கள் எனது ஆக்கங்களை வெளியிட்டன. லண்டனில் புதினம், ஜேர்மனியில் வெற்றிமணி, பிரான்சில் உயிர்நிழல் போன்ற இதழ்கள் விருப்போடு எனது ஆக்கங்களை வாங்கி வெளியிட்டன. இப்பொழுது இணைய இதழ்கள் பலவற்றில் எனது ஆக்கங்கள் வெளிவருகின்றன. குறிப்பாக தாய்வீடு, பதிவுகள், விளம்பரம், தமிழர் தகவல், திண்ணை, செந்தாமரை, இலக்கியவெளி, வதனம், அருவி, குவிகம், தென்றல், இரவி போன்ற வற்றிலும் எனது ஆக்கங்கள் இடம் பெறுகின்றன. எழுத்துத்துறை மட்டுமல்ல சினிமா, நாடகம், சிறுவர் இலக்கியம் போன்ற துறைகளும் பல வாசகர்களைத் தேடித்தந்தன. இதுவே சர்வதேசப் புகழ் பெற்ற ஒரு எழுத்தாளனாக என்னை மாற்றியது.

பரணீ:

**இந்திய பல்வேறு சஞ்சிகைகளில் உங்கள் கதைகள் பிரசுரமாகியது அது எப்படிச் சாத்தியமாயிற்று. அந்த அனுபவம் பற்றி..**

குருஅரவிந்தன்:

தமிழ்நாட்டில் உள்ள பிரபல பத்திரிகைகள் எல்லாம் எனக்குத் தளம் அமைத்துக் கொடுத்தன. முதன் முதலாக 10 லட்சம் பிரதிகள் வெளிவரும் விகடனின் நிர்வாக ஆசிரியர் பாலசுப்ரமணியன் அவர்களும், முதன்மை ஆசிரியர் வியெஸ்வியும் எனது எழுத்துக்கு மதிப்பளித்தார்கள். விகடன் பவழவிழாவின்போது எனது குறுநாவல் பரிசு பெற்றதைத் தொடர்ந்து எனது ஆக்கங்களை விகடனின் முக்கிய விசேட மலர்களில் குறிப்பாக பவழவிழா மலர், தீபாவளி மலர், காதலர்தின மலர், மிலேனியம் மலர் போன்றவற்றில் வெளியிட்டு வி.ஐ.பி எழுத்தாளராக என்னைக் கௌரவித்தார்கள். அதைத் தொடர்ந்து கல்கி, குமுதம், கலைமகள், கணையாழி, யுகமாயினி, இனிய நந்தவனம் போன்ற தமிழக பிரபல இதழ்களில் எனது ஆக்கங்கள் வெளி வரத் தொடங்கின. இதனால் சுமார் 2 கோடிக்கு மேற்பட்ட என் இனிய வாசகர்களை எழுத்துலகின் மூலம் உருவாக்க முடிந்தது.

பரணீ:

**இந்தியாவில் முனைவர்பட்ட ஆய்விற்கு உங்கள் கதையை எடுத்து ஆய்வு செய்வதாக அறிந்தேன் அது உண்மையா? அது பற்றி உங்கள் கருத்து**

குருஅரவிந்தன்:

ஆமாம், ஆய்வு செய்வதற்காக என்னிடம் கேட்டிருந்தனர். சென்னையில் மட்டுமல்ல, திருச்சி, தேனி போன்ற மாவட்டங்களில் உள்ள பல்கலைக்கழகங்களிலும் ஆய்வு செய்ய எனது நூல்களைப் பற்றிய விபரங்களைக் கேட்டிருந்தனர். கனடாவில் டிப்ளோமா பட்டப் படிப்பிற்காக முதலில் திருமதி சித்திரா பிலீக்ஸ் என்பவர் ஆய்வு செய்தார். அதன் பின் சுபாசினி முத்துக்குமார் என்பவர் ஆய்வு செய்து தனது ஆய்வை நூல் வடிவமாக எனக்கு அனுப்பியிருந்தார். சிறுகதைத் திறனாய்வுப் போட்டியில் பங்கு பற்றிப் பரிசு பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த பலர் எனது கதைகளையும், புதினங்களையும் தங்கள் பட்டப்படிப்பிற்காக ஆய்வு செய்ததாகக் குறிப்பிட்டிருந்தனர். தமிழகக் கவிஞர் மு. முருகேஸ் அவர்கள் எனது நூல்கள் பற்றி இருபத்தியொரு பிரபல எழுத்தாளர்கள் ஆய்வு செய்த கட்டுரைகளை "மனதைத்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்ட எழுத்தின் பக்கங்கள்" என்ற தலைப்பில் இந்தியாவில் தொகுத்து வெளியிட்டிருந்தார். சமூகத்திற்கு நல்லதை எடுத்துச் சொல்ல எனது கதைகள் உதவியாக இருப்பதையிட்டு மகிழ்ச்சியாக இருக்கின்றது.

**பரணீ:**

**பொதுவாக தாயக எழுத்திற்கும் புலம் பெயர் எழுத்திற்கும் என்ன வேறுபாடு அல்லது எந்த மனநிலையில் கதைகள் அமைவதாக நீங்கள் பார்க்கிறீர்கள்.**

**குருஅரவிந்தன்:**

தாயகத்திலும் சரி, தமிழ்நாட்டிலும் சரி கருப்பொருட்கள் அனேகமாக ஒன்றாகத்தான் இருக்கும். சிலர் அரைத்த மாவை திரும்பத் திரும்ப அரைக்கிறார்கள் என்பது நல்ல வாசகனுக்கு புரியும். எழுத்து நடை மட்டும் வேறுபட்டிருக்கும். சில சமூகக் கட்டுப்பாடுகள் வரம்பை மீற முடியாமல் அவர்களைத் தடுத்துவிடும். அறிவியல் சார்ந்து எழுதினாலும் சில இதழ் ஆசிரியர்கள் அதை ஏற்றுக் கொள்ளத் தயங்குகிறார்கள். அதனால் சமூகத்திற்கு விழிப்புணர்வைத்தரும் நல்ல சில கதைகள் முடக்கப்பட்டு விடுகின்றன. புலம்பெயர்ந்த மண்ணில் விரும்பியபடி சுதந்திரமாக எழுதமுடியும், கட்டுப்பாடுகள் இல்லை. வாசகர்களுக்குப்பிடித்தால் தொடர்ந்தும் வாசிப்பார்கள். அறிவியல் சார்ந்து எழுதமுடியும், ஆனால் சில ஆசிரியர்களின் மனநிலையைப் பொறுத்துத்தான் அவை பிரசுரமாகும். காதல் கதைகள் இலக்கிமாகாது என்று சொல்பவர்களும் உண்டு, மக்கள் மனசைத் தொட்ட வெற்றி பெற்ற தமிழ் காவியங்கள், காப்பியங்கள் எல்லாம் காதல் கதைகள்தான் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை.

**பரணீ:**

**புலம் பெயர்ந்த நாட்டில் சிறுகதைகள் எழுதும் பட்டறை ஏதும் நடத்தினீர்களா? அது பற்றிய உங்கள் அனுபவம்.**

**குருஅரவிந்தன்:**

சிறுகதைப் பட்டறை நேரடியாகவும், மெய்நிகர் மூலமும் நிறையவே நடத்தி எனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டிருக்கின்றேன். அதில் பங்குபற்றிய 16 பெண்கள் எழுதிய கதைகளைத் தொகுத்து "நீங்காத நினைவுகள்" என்ற பெயரில் சொப்கா மன்றத்தின் சார்பில் வெளியிட்டேன். இதுவே கனடாவில் வெளிவந்த தமிழ் பெண்களின் முதலாவது சிறுகதைத் தொகுப்பாகும். தொடர்ந்து சிறுகதைப் பயிலரங்கில் பங்குபற்றிய 26 பெண்கள் எழுதிய சிறுகதைகளையும் "ஆறாம் நிலத்திணைச் சிறுகதைகள்" என்ற பெயரில் கிராமத்து வதனம் பெண்கள் அமைப்பின் சார்பில் தொகுத்து வெளியிட்டேன். இதன் மூலம் கனடாவில் சுமார் 40 புதிய எழுத்தாளர்களை இனம்கண்டு உருவாக்கியிருப்பது கனடிய தமிழ் இலக்கியத்தின் எதிர் காலத்திற்குச் சிறப்பாகும். மேலும் எனது பயிலரங்கில் பங்குபற்றிய சுமார் ஐம்பது பெண்களைக் கொண்ட மற்றொரு குழுவினர் இப்போது இலங்கையில் உள்ள தங்கள் மூதாதையர் கிராமங்களைப் பற்றிய கட்டுரைகளை விரைவில் வரவிருக்கும் தொகுதிக்காக எழுதிக் கொண்டிருக்கிறார்கள். படைப்பு இலக்கியத்தைப் போலவே கலாச்சார வரைபட உருவாக்கத்தையும், தங்கள் முன்னோரின் இடங்களைப் பற்றி அடுத்த தலைமுறையினர் அறிந்து கொள்ளவும் இது உதவியாக இருக்கும்.

**பரணீ:**

**சினிமா, நாடகம், கவிதை, கட்டுரை போன்ற பல இலக்கியத் துறைகளில் பல்துறை வித்தகராக இருக்கிறீர்கள், எப்படி சிறுவர் இலக்கியத்தில் ஈடுபாடு வந்தது?**

**குருஅரவிந்தன்:**

கனடா நாட்டிற்கு வந்தபோது, இங்குள்ள தமிழ் பிள்ளைகளுக்குத் தமிழ் கற்பிக்கப் போதிய வசதிகள் இருக்கவில்லை. எனவே அயலில் உள்ள தமிழ் பிள்ளைகளுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் இலவசமாக நானும் எனது மனைவியும் தமிழ் கற்பித்தோம். இதை விட ரொறன்ரோ கல்விச்சபையிலும், பீல் கல்விச் சபையிலும் ஆசிரியராக இணைந்து கல்வி கற்பித்தோம். அப்போது ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கத்தின் தலைவராகவும் பொறுப்பேற்றுக் கடமையாற்றினேன். பிள்ளைகளின் தேவைகருதி தமிழ் ஆரம் பயிற்சி நூல்களை தமிழ் பிள்ளைகளுக்காக உருவாக்கினோம். சிறுவர் பாடல்களையும் நானே எழுதி கனடிய சூழலுக்கு ஏற்றது போல இசையுடன் குறுந்தட்டு வெளியிட்டோம். அனேகமான தமிழ் குழந்தைகள் ஆங்கில தொலைக் காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதில் ஆர்வம் காட்டியதால், ஆடல், பாடல் நிறைந்த "தமிழ் ஆரம்" என்ற ஒளித்தட்டை உருவாக்கினோம். இது போன்ற செயற்பாடுகளே இன்று கடனாவில் இளைதலைமுறையினர் தமிழ் மொழி பேசுவதற்குப் பெரிதும் உதவியாக அமைந்தன. கடந்த 25 வருடங்களாக சிறுவர்களுக்காக வெளிவரும் "தமிழ் ஆரம்" என்ற சிறுவர் இதழின் முதன்மை ஆசிரியராகவும், இளையதலைமுறையினருக்காக வெளிவரும் "வதனம்" இதழின் முதன்மை ஆசிரியராகவும் இருக்கின்றேன்.

**பரணீ:**

**நீங்கள் வாங்கிய விருதுகள் பற்றிக் கூறமுடியுமா?**

**குருஅரவிந்தன்:**

பரிசுகள், விருதுகள் நிறையவே வாங்கியிருக்கின்றேன். இங்கே குறிப்பிட இடம் போதாது. சிலவற்றை மட்டும் குறிப்பிடுகின்றேன். தங்கப் பதக்க விருது: உதயன் சிறுகதைப்போட்டி கனடா, சிறந்த சிறுகதை விருது: வீரகேசரி மிலேனியம் மலர், ஆனந்தவிகடன் பவளவிழா போட்டி - "நீர்மூழ்கி" குறுநாவல் பரிசு, சிறுகதைப் போட்டி - முதற்பரிசு: "சுமை" கனேடிய தமிழ் வானொலி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கான ஜனகன் பிக்சேர்ஸ் விருது கிடைத்தது. "அன்னைக் கொரு வடிவம்" மேடை நாடக சிறந்த கதை, நெறியாள்கைக்காக விருது கொடுத்தார்கள். மகாஜனாவின் "இலக்கிய நவரத்தினங்களில்" ஒருவராக 100வது ஆண்டு நிறைவு மலரில் எனது படத்தைப் பிசுரித்து விருது கொடுத்து பாடசாலை யிலும் அந்தப் படத்தைப் பார்வைக்கு வைத்துக் கௌரவித்தார்கள்.

**பரணீ:**

**எழுத்துலகில் உங்கள் சாதனை என்று எதைக் குறிப்பிட விரும்புகிறீர்கள்?**

**குருஅரவிந்தன்:**

இதை நான் குறிப்பிடாவிட்டால், எனது சிறுகதைகள் திருடப்பட்டது போல, சாதனைகளும் திருடப் படலாம். புலம்பெயர்ந்த மண்ணில் தொடர்ந்து 25 வருடங்களாக (2000-2025) ஒவ்வொருவருடமும் பரிசும் விருதும் பெற்ற ஒரே எழுத்தாளராக வாகர் வட்டத்தினர் என்னைப் பாராட்டிக் கௌரவித்திருந்தனர். தொடர்ந்து கனடா உதயன் பத்திரிகையில் 16 வருடங்கள் பெப்ரவரி மாதம் காதலர்தினக் கதைகள் எழுதியிருந்தேன். இந்தியா, இலங்கை, இங்கிலாந்து, ஜெர்மனி, கனடா ஆகிய ஐந்து நாட்டு இதழ்களில் ஒரே வருடத்தில் பெப்ரவரி மாதம் காதலர் தினக் கதைகள் எழுதியிருந்தேன். வீரகேசரியில் வெளிவரும் மாருதப்புரவீகவல்லி என்ற எனது வரலாற்று புதினத்திற்கு தொழில்நுட்ப உதவியுடன் நானே படங்களும் வரைந்திருந்தது ஒரு சாதனை என நினைக்கின்றேன். இலங்கை வீரகேசரி, இந்தியா இனிய நந்தவனம், கனடா வதனம் ஆகிய மூன்று நாட்டு இதழ்களில் ஒரே காலத்தில் தொடர் எழுதுவதும் ஒரு சாதனையாக இருக்கலாம்.

சிறுகதை சிறப்புப் பரிசு: கந்தர்வன் நினைவுப் போட்டி, நகுலன் குறுநாவல் போட்டி: "அம்மாவின் பிள்ளைகள்" யுகமாயினி, குறுநாவல் போட்டி கலைமகள் விருது:" தாயுமானவர்" - ராமரத்தினம் நினைவுப் பரிசு, பாரிஸ் கல்விநிலைய வெள்ளிவிழா சிறுகதைப் போட்டி- "கனகலிங்கம் சுருட்டு" தமிழர் தகவல் கனடிய இலக்கிய விருது, ஞானம் சிறுகதைப் போட்டி சிறப்புப் பரிசு - பரியாரிமாமி, கனடா தமிழ் மிரர் இலக்கிய விருது, கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் - 25 வருட இலக்கிய சேவை விருது, சிறந்த ஊடகவியலாளருக்கான கவணர் விருது, ரொறன்ரோ கல்விச்சபை 25 வருடகால ஆசிரியர் சேவை விருது, உதயன் இலக்கிய மேன்மை விருது, ஞானம் கலை இலக்கியப் பண்ணை விருது, பழைய மாணவருக்கான மகாஜனக்கல்லூரியின் "சிறந்த சாதனையாளர் விருது, "என்ன சொல்லப் போகிறாய்?" சிறந்த நாவலுக்கான பரிசு உலகப் பல்கலைக்கழகம், அமெரிக்கா, "சொல்லடி உன் மனம் கல்லோடி?" சிறந்த நாவலுக்கான பரிசு கோவை தமிழ் மன்றம், "அம்மாவின் பிள்ளைகள்" சிறந்த நாவலுக் கான பரிசு ஞானம் இலக்கிய சஞ்சிகைப் போட்டி. இலங்கை. "தாயகக் கனவுடன்" குவிகம் இதழ் சிவ சங்கரி தேர்வுப் பரிசு, அமெரிக்க தமிழ் சங்கம் 2024 நடத்திய குறுங்கதைப் போட்டியில் "காலம் செய்த கோலம்" என்ற கதை முதற்பரிசு பெற்றது. கனடாவின் 150 வது பிறந்தநாள் ஞாபகமாக நான் எழுதிய ஆங்கிலச் சிறுகதையான "பிறீடம் இஸ் பிறி" என்ற கதை தெரிவாகி பிரெஞ்சு மொழியிலும் மொழிமாற்றம் செய்து வெளி யிடப் பெற்றது. சிறந்த திரைக்கதை வசனகர்த்தாவிற்

**பரணீ:**

**புதிய எழுத்தாளர்களுக்கு உங்கள் அறிவுரை என்று எதனை கூற விரும்புகீறீர்கள்?**

**குருஅரவிந்தன்:**

எல்லோரிடமும் ஏதாவது ஒரு திறமை இருக்கிறது. பொது ஊடகங்கள் நிறையவே இருப்பதால், அதன் மூலம் உங்கள் திறமையை வெளிக் கொண்டுவர முடியும். தொடக்கத்தில் கவனிக்கப்படாவிட்டாலும், திறமை இருந்தால், கடின உழைப்பின் மூலம் வாசகர களைத் திரும்பிப் பார்க்க வைக்கலாம். எழுத்துத்துறை ஒன்றுதான் எல்லோரையும் இலகுவில் சென்றடையக் கூடியது, முடியும் என்ற நம்பிக்கையோடு செயற் படுங்கள். எந்த இலக்கிய அமைப்பாவது முன்வந்து மெய்நிகர் வழியாகச் சிறுகதைப் பயிலரங்கை ஏற்பாடு செய்தால் நான் அதில் பங்குபற்றி உரையாற்றத் தயாராக இருக்கின்றேன். வாசகர்களுக்கு எனது இனிய வணக்கம், நன்றி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பலம்




கே.எஸ்.சுதாகர்

வயது முதிர்ந்தோர் இல்லத்தில் பிரபல எழுத்தாளர் நிரஞ்சன் இருந்தார். அவரைச் சந்திப்பதற்காக பத்திரிகை நிருபரான தணிகாசலம் சென்றிருந்தார்.

"எழுத்தாளர் நிரஞ்சனைப் பாக்க வேணும்..."

"செகண்ட் ஃப்ளோர் மூண்டாவது ரூமுக்குப் போங்க..."

தணிகாசலம் லிப்ற் இருக்கத்தக்கதாக படிகளின் வழியே ஏறி மேலே போனார். அறை திறந்து இருந்தது. உள்ளே உறக்கத்தில் இருந்தார் நிரஞ்சன். அவரை எழுப்புவதா விடுவதா என்ற தயக்கத்தில், அவரின் கட்டிலுக்கு எதிராக இருந்த கதிரையில் அமர்ந்து கொண்டார்.

நிரஞ்சனின் முகத்தில் சவரம் செய்யப்படாமல் வெள்ளி முடிகள் எங்கும் பரவிக் கிடந்தன. படுக்கையிலும் தனது மொட்டையை மறைப்பதற்காக தொப்பி அணிந்திருந்தார். அவரை முதன்முதலாகச் சந்தித்தது அப்படியே நெஞ்சில் நிழலாட்டமாக இருந்தது தணிகாசலத்திற்கு. தொப்பியைக் முழுகும்போதும் கழட்ட மாட்டாரோ?

இருவருக்கும் வயதில் பெரிதளவு வித்தியாசம் இல்லை. ஆனால் மூப்பும் பிணியும் வயது பார்த்து வருவதில்லை. அவர்களின் பரம்பரை அலகுகள், உணவுப் பழக்க வழக்கங்கள் போன்ற பல சங்கதிகள் அவற்றில் அடங்கியிருக்கின்றன. நிரஞ்சன் உடலாலும் மனதாலும் கொஞ்சம் தளர்ந்து போய் விட்டார். மனித வாழ்வின் நிலையான துன்பங்களில் ஒன்றான நோய் அவரை வாட்டி வதைக்கத் தொடங்கிவிட்டது. அவர் ஒரு தண்ணிச்சாமி. அதுவே அவரை நோயாளியாகவும் ஆக்கியிருக்கலாம். நீரிழிவும் கொலஸ்ரோலும் ஒவ்வொரு பக்கமாகப் பிடித்திழுக்க, ஒரு தடவை ஸ்ரோக்கும் வந்திருந்தது. மனைவி இறந்து பல வருடங்கள் ஆகிவிட்டன. பிள்ளைகள் வேலைக்குப் போவதால் இதுவே பாதுகாப்பான இடம் எனக் கருதி, இங்கே கொண்டு வந்து விட்டுவிட்டார்கள். இடையிடையே வந்து பார்த்து உணவும் குடுத்துவிட்டுச் செல்வார்கள்.

தமிழ் மக்களுக்கான அந்த முதியோர் காப்பகத்தில் நிரஞ்சனுடன் ஆணும் பெண்ணுமாக மேலும் பதினான்கு பேர்கள் இருக்கின்றார்கள்.

நிரஞ்சன் "வாசல்" என்ற சிறுகதைத் தொகுப்பையும், "ஊர்வலம்" என்ற புதுக்கவிதைத் தொகுப்பையும் முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் வெளியிட்டிருக்கின்றார். அதன் பின்னர் உதிரிகளாகச் சில கதைகளும், புதுக்கவிதைகளும் எழுதியிருக்கின்றார். ஆனால் தொகுப்பில் போடுமளவிற்குப் போதுமானதாக இருக்கவில்லை. அந்த உதிரிகளிலும் சில இலக்கியத் தரமில்லாமல் இருந்தன. ஆனால் "வாசல்" தொகுப்பு சிறுகதை இலக்கியத்திற்கே ஒரு வாசல் என்றும், "ஊர்வலம்" தொகுப்பு புதுக்கவிதையின் ஒரு திறவுகோல் எனவும் இன்றளவில் பலராலும் சிலாகிக்கப்பட்டு வருகின்றன. சில பல்கலைக் கழகங்களில், இவை இரண்டும் இன்னமும் பாட நூல்களாக இருக்கின்றன.

திடீரென விழித்துக் கொண்ட நிரஞ்சன், படுக்கையில் இருந்து எழுந்தார்.

"சொன்னபடி வந்துவிட்டீர்கள். நான் சற்றே அயர்ந்து போனேன்" சிரித்துக் கொண்டார் நிரஞ்சன்.

"பேட்டியைத் தொடங்கலாமா?" என்றார் தணிகாசலம்.

அவரை மேலும் கீழும் பார்த்துவிட்டு, "பேட்டி ஒண்டு இப்ப தேவைதானா எண்டு யோசிக்கிறன். ஏற்கனவே நான் எல்லாத்தையும் முன்னைய பேட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் சொல்லிவிட்டேனே...." என்றார் சற்றுச் சோர்வாக நிரஞ்சன்.

"நீங்கள் எழுதாமல் விட்டு இப்ப பல வருஷங்களாப் போச்சு... முதுமையில் உங்களின் இலக்கியம் பற்றிய தெளிவான அபிப்பிராயத்தை அறிந்து கொள்ளப் பலரும் துடிக்கின்றார்கள்."

"அதுக்கு? என்னுடைய வாசலும் ஊர்வலமும் போதுமே..." கொஞ்சம் காரமாகச் சொல்லிவிட்டு கட்டிலுக்குக் கீழே குனிந்து பார்த்தார். பின்னர் தணிகாசலத்தின் முகத்தைக் கூர்மையாக நாடி பிடித்தார்.

"எனக்கு நீங்கள் இப்ப வந்திருக்கும் நோக்கம் புரிகின்றது" நிரஞ்சன் தொடர்ந்தபோது, தணிகாசலம் திடுக்கிட்டுப் போனார்.

"நான் என்ன சொல்ல வருகின்றேன் எண்டா... இந்தப் பீஸ் இன்னும் இரண்டொரு கிழமையில போகப் போகுதெண்டு முன்னுக்கிருக்கிற ரிசப்ஷனிஸ்ட் சொல்லியிருப்பாவே... இப்ப நாங்கள் எல்லாம் அவங்களுக்கு ஒரு பீஸ் ஆகிவிட்டோம்" ஒரு வரட்டுச்சிரிப்பை உதிர்த்தார் நிரஞ்சன்.

தான் இப்ப எதைச் சொன்னாலும் நிரஞ்சனுக்கு கவலையைக் கூட்டும் என்பதை உணர்ந்த தணிகாசலம் மௌனமானார். தான் வந்ததன் உள்நோக்கம் எது வென்பதை நிரஞ்சன் கண்டுகொள்ளவில்லை என்பதே அவருக்கு ஆறுதலாக இருந்தது.

"ஐஞ்சாறு கேள்விகள் போதும். முந்தின பேட்டிகளில் இல்லாதமாதிரி புதுசா இருந்தா சிறப்பா இருக்கும்" நேர்காணலைத் தொடங்குமாறு சமிக்கை செய்தார் நிரஞ்சன்.

"என்னுடைய முதல் கேள்வியை ஏற்கனவே கேட்டுவிட்டேன். அதற்கு உங்கள் பதிலாக, "வாசலும் ஊர்வலமும் போதுமே" என்பதை வைத்துக் கொள்கின்றேன். எழுத்தை நிறுத்தியபின்னர் இற்றைவரை என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?" தணிகாசலம்.

"இலக்கியம் என்பது எழுதுவது மட்டுமல்ல. நான் ஒரு சினிமாப் பிரியன் என்பது எல்லாருக்கும் தெரியும். வானொலி மூலமாக நான் பல சினிமா உரையாடல்களைச் செய்திருக்கின்றேன். நிறைய சினிமா, குறும்படம், நாடகங்கள் பார்க்கின்றேன். இலக்கியப் படைப்புகளை வாசிக்கின்றேன்.." நிரஞ்சன்.

"ஒரு படைப்பாளி தன் வாழ்நாள் முழுவதும் தொடர்ச்சியாக இலக்கியம் செய்ய முடியாதா?"

"ஏன் முடியாது? ஒரு வருடத்தில் எத்தினை விழாக்கள் வந்து போகின்றன? தைப்பொங்கல், புது வருடப் பிறப்பு, தீபாவளி, சூரன்போர், திருவெம்பாவை, கிறிஸ்மஸ்... தவிர விபுலாநந்தர், விவேகானந்தர், திருவள்ளுவர், இல்லாது போனால் 63 நாயன்மார்கள்... எல்லா மதங்கள் சார்ந்தும் விழாக்கள் கொண்டாட்டங்கள் இலக்கியங்கள், மகாபாரதம், இராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள் மகளிர்தினம், சாரணர் தினம்... அப்பப்பா இலட்சக்கணக்கில் இப்படியே அடிக்கிக் கொண்டே போகலாம்.

இவற்றைப் பற்றி கவிதையோ கட்டுரையோ நாடகமோ எழுதி வைத்துக் கொண்டு, ஒவ்வொன்றாகப் பிரசுரிக்கலாம். பிறகு ஒவ்வொரு வருடமும் அதையே திருப்பித் திருப்பி போட்டுக் கொள்ளலாம். இவை என்ன தோசை மாவா திருப்பித் திருப்பிப் போட்டால் கருகுவதற்கு? விருப்பமெண்டா, தங்களால் இயலாத சந்தர்ப்பங்களில் பிள்ளைகளைக் கொண்டும் அவற்றைப் பதிவேற்றிக் கொண்டிருக்கலாம். உயிர்ப்பாக இருக்கும்."

"உங்களின் இந்தக் குதர்க்கமான பதிலைப் போட்டால் என்னை அடிக்கத்தான் வருவார்கள்."

"அப்படியென்றால் கேள்விகளைச் சரியாகக் கேளுங்கள்..."

"ஒரு சில எழுத்தாளர்கள் ஆரம்பத்தில் நிறையப் படைப்புகளை எழுதிவிட்டு, பின்னர் சடுதியாக ஒதுங்கி விடுகின்றார்கள். நான் உங்களைக் குறிப்பிடவில்லை. நீங்கள் நிரந்தரமாகவே ஒதுங்கி விட்டீர்கள். நான் குறிப்பிடுபவர்கள் - உழைத்து பணம் சேர்த்து, இல்வாழ்க்கையில் இணைந்து பிள்ளை குட்டிகளைப் பெற்றெடுத்து அவர்களையும் நல்லாக்கிவிட்டு, வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக் கொண்டு, மீண்டும் ஏதோ சமுதாயத்தைக் காக்கும் இரட்சகர்கள் போல எழுத வந்து விடுகின்றார்கள். அவர்களைப் பற்றி உங்கள் கருத்து என்ன?"

"அவர்களும் மனிதர்கள்தானே! அவர்களுக்கும் ஆசாபாசங்கள் இருக்கத்தானே செய்யும்... சுவர் இருந்தால் தானே சித்திரம் வரையலாம். அப்படிப் பார்த்தால், நீங்கள் குறிப்பிடும் அவர்களை விட நான் மோசமானவன் அல்லவா?"

இருவரும் சிரித்துக் கொண்டார்கள்.

அந்த நேரமாகப் பார்த்து கதவை ஒரு தட்டுத் தட்டிவிட்டு, அங்கே வேலை செய்யும் பெண்மணி ஒருவர், ஒரு றேயில் சிறு பிஸ்கற் ஒன்றும் தேநீருமாக வந்தார். அதை நிரஞ்சனிடம் குடுத்துவிட்டு, நிமிர்ந்து அவரைப் பார்த்தார்.

"இவருக்கும் குடுங்களேன்" என்று தணிகாசலத்தைச் சுற்றிக் காட்ட, "நோ... நோ.. எனக்கு வேண்டாம்" என்றார் தணிகாசலம்.

மேற்கொண்டு உரையாடல் தொடர்ந்தது.

"இந்த இடத்தில் உங்கள் தந்தையைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல முடியுமா?"

"ஆக மொத்தம் நீங்கள் என் தந்தையை நேர்காணல் செய்ய வந்திருக்கின்றீர்கள். அப்படித்தானே!

என் தந்தையார் ஒரு பண்டிதர், சைவப்புலவர். உரைநடையில் வந்த நவீன இலக்கியங்களை ஹிழிசனர் இலக்கியம்" என்று விமர்சனம் செய்தவர். புதிய வடிவங்களை, புதுக்கவிதையை ஏற்றுக் கொள்ளாதர். அதாலை கடும் கண்டனங்களுக்கும் ஆளானவர். இவ்வளவும் போதும் என்று நினைக்கின்றேன்."

"அந்தக் காலத்தில், படைப்புகளை உடனேயே பிரசுரிக்கும் இன்ரநெற் வசதிகள் இருக்கவில்லை. படைப்புகளை எழுதி, திரும்பத் திரும்ப செப்பனிட்டு, ஒரு படைப்பு வெளிவர பல மாதங்கள் எடுக்கும். உங்கள் தந்தையார் திடீர் என்று ஹார்ட் அட்டாக்கினால் இறந்து போனதாக அறிகின்றோம். அவருடைய பிரசுர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாத பல படைப்புகள் முழுமையாகவும் அரைகுறை யாகவும் இருந்திருக்கும். அவற்றை என்ன செய்தீர்கள்?"

தணிகாசலத்தின் இந்தக் கேள்வியால் திடுக்குற்ற நிரஞ்சனுக்கு, இருந்த் வருத்தங்களுடன் இரத்தக் கொதிப்பும் புதிதாகச் சேர்ந்து கொண்டது. அவர் தணிகாசலத்தைக் கிட்ட வருமாறு கண் ஜாடை செய்தார். "நீங்கள் சொல்லுங்கள். நான் இங்கிருந்தே கேட்கின்றேன்" என்றார் தணிகாசலம். நிரஞ்சன் தன் தொடைகள் இரண்டையும் அகல விரித்து, "அவை எல்லாம் இந்தக் கவட்டுக்கை கிடக்கு" என்று கத்தினார். தான் வந்த விடயம் சரியான பாதையில் போகின்றது என்பதை உணர்ந்த தணிகாசலம் உள்ளூர மகிழ்ச்சி கொள்ளத் தொடங்கினார்.

அந்தக் கேள்வியின் பின்னர், அதுவரை எழுத்து வழக்கில் உரையாடிய நிரஞ்சன், பேச்சு வழக்கிற்குத் தாவினார். கோபம் அவரின் பேசும் திறனைத் திசை திருப்பிவிட்டது.

"நீங்கள் ஒரு மார்க்கமாகத்தான் இண்டைக்கு வந்திருக்கிறியள். உங்கட மொபைல்போனை ஓஃப் பண்ணிட்டு என்ரை கையிலை தாருங்கோ. பிறகு உந்தக் கதவை சாத்தித் தாழ்ப்பாள் போடுங்கோ."

தணிகாசலம், நிரஞ்சன் சொன்னபடியே செய்தார். அவருக்கு வேண்டியது செய்திதானே!

"இந்தப் பிரச்சினை முப்பது வருஷத்துக்கும் மேலாக் கிடந்து என்ரை மனசை உழட்டுது. ஆருக்கா வது சொல்லிவிட்டுச் செத்துப் போகவேணுமெண்டு துடிக்குது. இதை நான் சொல்லிட்டேன் எண்டா என்னட்டைக் கேட்க உம்மட்டைக் கேள்வியள் இருக்காது.

அறுபதுகள் மட்டிலை எண்டு நினைக்கிறன். சரியா ஞாபகம் இல்லை. அப்ப நடந்த இலக்கியக் கூட்டமொண்டில, அப்பா புதுக்கவிதை சிறுகதை எழுதுறவையைச் சரமாரியாப் பேசிப் போட்டார். கூட்டத்திலை இருந்த ஜெகநாதன் எண்ட பிரபல இளம் எழுத்தாளர் எழும்பி, "ஏலுமெண்டா ஒரு புதுக் கவிதையோ சிறுகதையோ நீங்கள் எழுதிட்டியள் எண்டா, நான் எழுதுறதையே விட்டிடுவன்" எண்டு அப்பாவுக்குச் சவால் விட்டார். அவர் அப்படிக் கேட்டவுடன, அப்பா கோவத்தில கூட்டத்தை விட்டு வெளியே போயிட்டார்."

"அப்புறம்?"

"வீட்டுக்கு வந்த அப்பா, அதுக்குப் பிறகு எந்தவொரு இலக்கியக் கூட்டங்களிலையும் கலந்து கொள்ளேல்ல. அப்ப அவர் எழுதின ஏழு சிறுகதை களும், ஒன்பது புதுக்கவிதைகளும்தான் "வாசல்", "ஊர்வலம்" எண்ட தொகுப்புகள். அதுகளை அப்பா எழுதினாலும், தன்ரை பெயரிலை பிரசுரிக்க அவருக்கு மனசு இடம் குடுக்கேல்ல. என்ரை ஒப்புதலோடை என்ரை பெயரிலை அவை எல்லாம் வெளிவரத் தொடங்கிச்சு. சந்தர்ப்பம் சரியாக வரேக்கை தன்னை வெளிக்காட்டிக் கொள்வேன் எண்டு சொல்லியபடி இருந்தார். உங்களுக்குத் தெரியும்தானே... பிறகு அப்பா திடீரெண்டு இறந்து போனார்.

அதையே சாட்டா வைச்சுக் கொண்டு, என்னை நான் வெளிக்காட்டிக் கொண்டன். என்ரை அப்பாவுக் குச் சவால் விட்ட அந்த ஜெகநாதனைவிட, நான் புகழ் பெற வேண்டும் எண்ட ஓர்மம் என்ரை மனசுக்குள்ளை விதையா விழுந்துச்சு.

அப்பா எழுதி பிரசுரமாகாமல் இருந்த புதுக் கவிதைகளையும் சிறுகதைகளையும், ஒவ்வொண்டாக என்ரை பெயரிலை வெளியிட்டேன். அவை ஓகோ வெண்டு புகழ் பெறவே, அரைகுறையாக அவர் எழுதி வைச்சிருந்த படைப்புகளில என்ரை திறமையைக் காட்டி வெளியிட்டன். ஆனா அவை சரியாப் போகேல்ல. அதுக்குப் பிறகு, வாசலும் ஊர்வலமும் மாத்திரமே என் திறமையைச் சொல்லப் போதுமானவை எண்டு என்னை நானே புகழத் தொடங்கிட்டன்."

"நன்றி.... நன்றி... இதைத் தான் நான் உங்களிட மிருந்து எதிர்பார்த்தன். இந்த நேர்காணலுக்கு, "எனது பெயரில் உனது க(வி)தைகள்" என்று தலைப்பிட விரும்பு றேன். அதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறியள்?"

"நீங்கள் எப்படியெண்டாலும் வைச்சுத் துலை யுங்கோ. ஆனா மக்கள் எதையுமே நம்பப் போறதில்ல. முதுமையின் மாறாட்டத்தில நிரஞ்சன் கதைச்சிட்டார் எண்டே மக்கள் சொல்லுவினம். இத்தனை வருசங் களிலை நடக்காத மாற்றத்தை உங்களால் கொண்டு வந்துவிட முடியுமா என்ன?"

"நல்லது. போய் வருகின்றேன்" விடைபெற்றுக் கொண்டு, வரவேற்புப் பகுதியை நோக்கிச் சென்ற தணிகாசலத்தை ஒரு உரையாடல் தடுத்து நிறுத்தியது.

"மடம்... வயது முதிர்ந்த என்ரை அம்மாவை இஞ்சை கொண்டுவந்து சேர்க்கிறதுக்கு இடமிருக்கா..." ஓர் இளைஞர் வரவேற்புப் பெண்மணியிடம் கேட்கின்றார்.

"எப்ப மட்டிலை கூட்டிக் கொண்டு வருவியள்?"

"இப்ப இடம் கிடைச்சாலும் கொண்டு வந்து விட்டுவிடுவோம்."

அந்தப் பெண்மணி ஒரு கொப்பியைத் தட்டிப் பார்த்துவிட்டு, "இப்ப இடமில்லைத் தம்பி... இன்னும் இரண்டொரு கிழமையிலை ஒரு பீஸ் போயிடும். நீங்கள் ரெலிபோன் நம்பரைத் தந்திட்டுப் போங்கோ. நான் அறிவிக்கிறன்." என்றார்.

"பீஸ்" என்றதும் தணிகாசலம் நிரஞ்சனை நினைத்துக் கொண்டார். அந்தப் பெண்மணிக்கு நேர் மேலே தொங்கிக் கொண்டிருக்கும் பெயர்ப்பலகையைப் பார்த்தார். "மெர்சி நர்சிங் ஹோம்" என்று ஆங்கிலத்தி லும், அதற்குக் கீழே ஹஅன்பு முதியோர் இல்லம்" என்று சின்னதாக தமிழிலும் எழுதி இருந்தது. அதற்கும் கீழே இன்னும் சின்னதாக எழுதியிருந்ததை தணிகாசலத்தி னால் வாசிக்க முடியவில்லை. மூக்குக்கண்ணாடியை எடுத்துத் துடைத்து விட்டுப் பார்த்தார். "ஆண்டவன் உங்களை ஆசீர்வதிப்பார்" என்பது துலங்கியது. அப்போது அந்தப் பெயர்ப்பலகை காற்றுக்குக் கொஞ்சம் ஆடுவது போல் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-அருண்மொழிவர்மன்

# "குற்ற ஆலம்" சிறுகதைத் தொகுப்பை முன்வைத்து...




டாம் சிவதாசனை அவர்களைக் கிட்டத்தட்டப் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக அறிவேன் என்றாலும் இடையில் சில மாதங்கள் அவருடன் சற்றுக் கூடுதலாகப் பழகுகின்ற வாய்ப்பு கிடைத்தது. அவரது அலுவலகத்தில் நடைபெறும் சந்திப்புகளில் சிலகாலம் தொடர்ந்து சென்றும் வந்தேன். வெவ்வேறு விடயப் பரப்புகள் குறித்துத் தேடி ஆர்வமுடன் வாசிக்கின்ற தோர் வாசகராகவும், அவ்வாறு வாசித்தவற்றை நண்பர்களுடன் பகிர்ந்து உரையாடி மகிழ்பவராகவும் அவரைக் கணித்திருக்கிறேன். கதையாக அவரது ஒரே ஒரு கதையை மட்டுமே முன்னர் வாசித்திருந்தது நினைவில் இருக்கின்றது எவ்விதமோ ஏனைய கதை களைத் தவறவிட்டு விட்டேன். தற்போது 1993 முதல் 2025 வரையான 32 ஆண்டு காலப்பகுதியில் எழுதப்பட்ட 15 கதைகள் "குற்ற ஆலம்" என்கிற தொகுப்பாக வெளி வந்திருக்கின்றன. பெரும்பாலான கதைகள் கனடா விலும் சில கதைகள் ஈழத்தைக் களமாகவும் கொண்டு அமைந்திருக்கின்றன. ஆயினும், அனைத்துக் கதை களும் மனிதர்களுக்கிடையிலான உறவுச் சிக்கல்கள், அகச் சிக்கல்கள், இருத்தலியல் சிக்கல்கள், பாலியல் உறவுகள், பாலியல் தேவைகளால் எழுகின்ற நெருக்கடி கள், முரண்கள் போன்றவற்றைக் களமாகக் கொண்டு அமைந்துள்ளன.

"குப்பி" என்கிற கதை, ஈழப்போரின் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுச் சரணடைந்த போராளிகள் புனர்வாழ்வு பெற்று மீண்டும் இயல்புவாழ்க்கை நோக்கிச் சென்றபோது சமூகம் அவர்களை எதிர் கொண்ட விதம் பற்றிப் பேசுகின்றது. போர்க்காலத்தில், இயக்கத்தில் இருக்கின்றபோது ரகசியமாக வீட்டுக்குச் செல்லும்போது இருக்கின்ற வரவேற்பு இப்போது இல்லை என்று புனர்வாழ்வு பெற்று ஊர்திரும்பும்போது கயல்விழி உணர்கிறாள். புனர்வாழ்வு பெற்றுத் திரும்பிய மக்களை ஏற்றுக்கொள்வதற்கும் தம்முடன் இயல்பு வாழ்க்கையுடன் இணைத்துக்கொள்வதற்கும் இராணுவக் கெடுபிடி, இராணுவப் புலனாய்வுத் துறையின் நெருக்கடி போன்றவற்றால் சாதாரண மக்களுக்கு இருந்த அச்சவுணர்வு மாத்திரம் காரணம் அல்ல, அதைத்தவிரவும் மக்களுக்கு முன்னாள் போராளிகள் மீதிருந்த ஒரு விதமான இயல்பில்லாத உணர்வும் அதுபோலவே போராளிகளுக்குத் தம்மை இயல்பு வாழ்க்கையுடன் இணைத்துக்கொள்வதில் இருந்த இயலாமைகளும் காரணமாக இருக்கின்றன. இந்தச் சூழலில், சமூகத்துக்காகப் போராடப் போன தம்மைச் சமூகம் புறக்கணிக்கின்றதே என்கிற சலிப்பால் சமூகவிரோத நடவடிக்கைகளில் எந்தவிதமான தயக்கமும் இல்லாமல் ஈடுபடுகின்ற சில முன்னாள் போராளிகளை வைத்துப் பெரும் பணத்தையும் அரசியல் அதிகாரத்தையும் பெற்றுக்கொள்கின்றார் ஒரு தமிழ் அரசியல்வாதி. கதையின் இறுதியில் கயல்விழி கொலை செய்யப்பட்டு அவளது உடல் குப்பைத் தொட்டியில் அழுகிய நிலையில் கண்டெடுக்கப்படுகின்றது. அவளது கொலையை அரசியலாக்கி அவளது மரணத்துக்கு நீதி வாங்கித்தரும்வரை தான் ஓயப்போவதில்லை என்கிறார் குறித்த அரசியல்வாதி. அதைக் கயல்விழியின் கணவன் உட்பட அனைவருமே நம்புகின்றனர். ஆனால், கயல் விழி முன்னாள் ராணுவ அதிகாரி ஒருவருடன் கதைத்துக்கொண்டிருந்ததைப் பார்த்த ஒருவனூடாகக் கயல்விழியின் "ஒழுக்கம்" பற்றிக் கடத்தப்பட்ட செய்தியினால் அவள் குறித்த தமிழ் அரசியல்வாதியின் கீழ் இயங்குவோராலேயே கொலை செய்யப்பட்டிருக்க லாம் என்று கோடி காட்டுகின்றது இக்கதை.

கொலம்பியா, சூடான் போன்ற நாடுகளிலும் யுத்தத்துக்குப் பிந்திய காலங்களில் முன்னாள் ஆயுதக் குழு உறுப்பினர்கள் தம்மை இயல்பு வாழ்க்கையுடன் இணைத்துக்கொள்வது குறித்த ஆய்வுகள் இடம்பெற்றி ருக்கின்றன. இந்த ஆய்வுகள் முன்னாள் ஆயுதக் குழு உறுப்பினர்களின் ஒரு பகுதியினர் வன்முறை, சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுதல் போன்றவற்றுக்கு அவர்களுக்கு வன்முறைகளுடனான நேரடி பட்டறிவு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டத்தால் ஏற்பட்ட அஞர், வறுமை, தம்மை நிலைநாட்டிக்கொள்வதற்கான சமூக மூலதனத்தைப் பெருக்கிக்கொள்ள முடியாமை உள்ளிட்ட பல்வேறு விடயங்களை இவற்றுக்கான காரணிகளாக இனங் கண்டுள்ளனர். இக்கதையும் அவற்றை முன்வைப்ப துடன் முன்னாள் போராளிகளை வைத்துத் தமது பயனுக்காக அரசியல் செய்வோரையும் கோடி காட்டி விடுகின்றது சிறப்பம்சமாகும்.

தொகுப்பில் உள்ள "ஆனந்தனைப் புரிந்து கொள்ளல்", "சிலீப் ஓவர்", "கருப்பி" ஆகிய கதைகள் நடைபெறுகின்ற மல்வேர்ன் பகுதியில், கதைகள் நடைபெறுகின்ற அதே 90களில் நான் வாழ்ந்திருக் கின்றேன் என்பதாலும் இந்தக் கதைகளில் குறிப்பிடப்படு கின்ற வெஸ்ட் ஹில் பாடசாலையில் ஒரு கோடைகாலப் பாடசாலைக்குச் சென்றமையாலும் அந்தப் பிரதேசத் தில் இருக்கின்ற ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வேலைசெய்தமையாலும் எனக்கு இந்தக் கதைகள் பேசுகின்ற விடயங்கள் இன்னும் நெருக்கமாக இருக் கின்றன. மல்வேர்ன் என்கிற இந்தப் பிரதேசம் தொண்ணூறுகளில் பெருமளவு இளங்குடும்பங்களைக் கொண்டதாகவும், கருப்பினத்தவர்களும் தென்னாசியர் களும் அதிகம் வாழ்வதாகவும் இருந்தது. இப்பிரதேசத் தில் மக்கள் அதிகம் குடியேறத் தொடங்கிய காலப்பகுதி களில் இருந்து நிலவி வந்த கருப்பினத்தவர்களுக்கு இடையிலான குழு வன்முறை பின்னர், அடுத்த கட்டங் களில் அதிகளவில் குடியேறத்தொடங்கிய ஈழத்தமிழர் களுக்கு இடையிலான குழு வன்முறைகள் போன்றவை நிறைந்த காலப்பகுதி அது. அனேகம் புதிதாகக் கனடாவுக்குக் குடிபெயர்ந்தவர்களே இங்கிருந்தமை யால், குடும்பங்களிடையே கலாசார நெருக்கடிகள், நிதி நெருக்கடிகள், குடும்ப உறவுகளுக்கு இடையிலான முரண்கள் போன்றன பலமாகத் தாக்கம் செலுத்திக் கொண்டிருந்தன.

உயர்கல்லூரியில் கற்றுக்கொண்டிருந்தபோது ஆங்கிலப் பாடத்தில் எமக்கு Beatrice Culleton எழுதிய April Raintree என்கிற நாவல் பாடத்திட்டத்தில் இருந்தது. மெடிஸ் என்கிற பூர்வக் குடி அடையாளத்தை (Métis identity) சேர்ந்த ஏப்ரில், செரில் என்கிற இரண்டு சகோதரிகள் தமது வீட்டில் பெற்றோரிடையே இருந்த குடும்ப வன்முறை, அதிகரித்த போதைப் பொருள்/மது பாவனை காரணமாகக் குடும்பத்திடம் இருந்து பிரிக்கப்பட்டு வளர்ப்புக் குடும்பங்களில் (Foster Family) வளர விடப்படுகின்றனர். வன்முறை, மது / போதைக்கு அடிமையான பெற்றோர் ஆகிய நிலைமைகளில் உள்ள குடும்பங்களில் இருந்து குழந்தைகளை மீட்டு நல்ல சூழலில் வாழவைக்கவேண்டும் என்கிற நோக்கத்துடன் அவர்களை வேறொரு குடும்பத்திடம் ஒப்படைத்து வளர்க்க விடுவது வளர்ப்புக் குடும்ப (Foster Family) தீர்வு முறையாகும். ஆனால் அவ்வாறு வளர்ப்புக் குடும்பத் துக்கு அனுப்பப்பட்ட சிறுவர்கள், அங்கே பாலியல் துஷ்பிரயோகங்களுக்கும் மன அழுத்தங்களுக்கும் உள்ளானார்கள் என்றும், அவற்றின் விளைவாக அவர்களும் போதை பாவனைக்கு அடிமையானார்கள் என்றும் பின்னர் ஆய்வுகள் தெரிவித்தன. அந்தக் காலப்பகுதியில் வளர்ப்புக் குடும்பத்துக்குச் செல்லுதல் என்பதைக் கொடுமையான சிறையொன்றுக்கு செல் வதைப் போல அச்சவுணர்வுடன் பார்க்கின்ற நிலை மையே நிலவியது. "ஆனந்தனைப் புரிந்து கொள்ளல்" கதையில் ஆனந்தன் பின்வருமாறு கூறுகின்றான்

"வகுப்பில் ஆசிரியர் பல தடவைகள் முயன்றும் நான் எனது குடும்பப் பிரச்சனைகளைப் பற்றி அவரிடம் எதையும் கூறியது இல்லை. அப்படிச் சொல்லியிருப்பின் இப்போது எங்கோ ஒரு வெள்ளைக்கார வளர்ப்புப் பெற்றோர் வீட்டில் பதினான்காவது வளர்ப்புப் பிள்ளை யாக அன்ரி டிப்பிறசண்ட் குளிசைகளோடு மால் பெஞ்சு களில் தூங்கிக்கொண்டிருப்பேன். அல்லது ஒரு மீடியம் செக்கூரிட்டி சிறையில் ஏனைய கைதிகளோடு கஞ்சா குடித்துக் காலம் கழித்திருப்பேன்."

பாடசாலைகளில் இருக்கின்ற குழு வன்முறைக் கலாச்சாரம் (Gang culture), மோசமான குடும்ப உறவுகள், குடும்ப வன்முறை போன்றவற்றால் பாதிக்கப்படும் ஆனந்தனைப் போன்றவர்களின் நிலை பின்வருமாறு இருக்கிறது,

"எனது நிலைமை எப்படியாகும் என்று சொல்வதற்கில்லை. நான் வீடு போகும்போது வீட்டில் விளக்கு எரியாது. வெறுமையாக இருக்கும். சாப்பிட எதுவும் இருக்காது. கையில் காசும் இருக்காது. வீட்டிற்குப் போவதற்கே மனமிருக்காது. மற்ற நண்பர் களைப் போலச் சட்டவிரோதமான காரியங்களில் ஈடுபட்டுப் பணம் சம்பாதிக்க முடியும். ஆனால் மனம் ஒத்துழைக்குதில்லை. இதுவரை வெற்றிகரமாகச் சமாளித்துவிட்டேன். எனக்கிருக்கும் அடுத்த தேர்வு தற்கொலை செய்துகொள்வது. இந்த வாழ்க்கையில் அர்த்தமில்லை எனவே தெரிகிறது"

புலம்பெயர்ந்து முதற்தலைமுறையாகப் பாட சாலைக்குச் சென்றவர்களின் நிலைமை இவ்விதமாகத் தான் இருந்தது. பாடசாலைக்குள் கும்பல் கும்பலாகவும் பாடசாலைக்கு வெளியில் தேவையேயில்லாம இஞ்ஜினை உறும விட்டுக்கொண்டு திரிகின்ற கார்களில், கண்ணாடியைத் திறந்துவிட்டு ஒலியைப் (Bass) பலமாக அலறவிட்டுக் கொத்தாகத் திரிகின்ற மாணவர் களுடனோ ஒட்டவே முடியவில்லை.

இந்தக் கதையில் ஆனந்தன் சொல்கின்ற இன்னொரு விடயம் மிகவும் நுட்பமானது தகப்பன் பிரிந்துசென்றுவிட, தாய் இரண்டு வேலைகள் செய்து குடும்பத்தைக் கவனித்துக்கொள்கிறாள். இதை "பேசாமல் அரச உதவிப்பணத்தைப் பெற்றுக்கொண்டு அம்மா குடும்பத்தைச் சமாளித்திருக்கலாம். தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை செய்து தனது பிள்ளைகளைப் படிப்பிக்கிறேன் என்று ஊர், உலகம் எல்லாம் சொல்லவேண்டும் என்ற அம்மாவின் இறுமாப்பால் அவள் அரச உதவிப் பணத்தைப் பெறாமல் இப்படிச் செய்கிறாள்” என்று ஆனந்தன் சொல்கிறான். அரச உதவிப்பணம் போன்ற சமூக உதவித்திட்டங்கள் உண்மையில் இப்படியான குடும்பங்களுக்குத் தேவையான அடிப்படைத் தேவை களை நிவர்த்தி செய்யக்கூடிய அளவு வினைத் திறனுடன் இருந்த காலம் அது. அதன் நோக்கமும் பாதிப்புகளுக்கு உள்ளான குடும்பங்கள் தமது அடிப் படைத் தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்குப் பொருளாதார ரீதியாக இருக்கின்ற தடைகளை நீக்குவ தாகவே இருந்தது. புலம்பெயர்ந்தோர் இந்நாட்டுக்கு முதலில் வரும்போது இத்திட்டங்களே பலருக்கும் தடைக்கற்களை நீக்க உதவின. ஆனால், துரதிஸ்ரவச மாக எம்மில் பலரே கூடத் தற்போது “இப்படியான சமூக நலத்திட்டங்களால் அரசு பணத்தை வீணாக்குகின்றது, எமது வரிப்பணத்தை விரயம் செய்கின்றது” என்று புலம்பத் தொடங்கியிருக்கின்றார்கள் என்பதையும் நினைவூட்டிக்கொள்வோம்.

வளர்ப்புக் குடும்பம் குறித்த அச்சவுணர்வை “ஆனந்தனைப் புரிந்துகொள்ளல்” கதையில் சொன்னவர், “சிலீப் ஓவரில்” போதைப் பொருளுக்கும் மதுவுக்கும் அடிமையாகிவிட்ட தந்தை - தாயிடம் இருந்து மீட்கப்பட்டு வளர்ப்புப் பெற்றோரிடம் கொடுக்கப்படும் சமாந்தா அங்கே சில சவால்களை எதிர்கொண்டாலும் தன் கல்வியை நிறைவுசெய்து தாயையும் மீட்டுச் சிகிச்சையளிக்கின்றாள். ஆனால் ஆரோக்கியமான குடும்பச் சூழலில் வளர்கின்ற மாதுரி யால் அப்படியாக வர முடியாமல் போய்விடுகின்றது. காதல், திருமணம், வீடு, சொத்து, நல்ல கல்வி, வேலை என எதிலுமே அவளுக்கு இச்சையில்லை. இப்படியான குடும்பத்தில் பிறந்ததைவிட வேறென்ன நற்பேறு எனக்குத் தேவை என்று கூறி அவள் நிறைவடைந்து கொள்கின்றாள். அதிர்ஷ்டம் குறைந்தவர்களுக்குத் தன் வாழ்க்கையை அர்ப்பணிக்க விரும்புவதாகவும் அதுவே தனக்கு மகிழ்ச்சியைத் தருவதாகவும் கூறுகிறாள். “திருப்தியின் அளவுகோல்கள் ஆளுக்கு ஆள் வேறு என மாது எங்களுக்குக் கற்பித்திருக்கிறாள். நாங்கள் அதிர்ஷ்டசாலிகள் என்று கதையை நிறைவு செய்கிறார். ஆனால் இக்கதை என்னை இன்னும் சிந்திக்கத் தூண்டுகிறது. Comfort crisis என்று சொல்லப் படுகின்ற சுகவாழ்வினால் எழுகின்ற நெருக்கடி என்று இதனைச் சொல்லலாமோ தெரியவில்லை. குழந்தை கள் வளர்வதும் குழந்தை வளர்ப்பும் எப்போதும் புதிரானது தான்.

தொகுப்பில் இருக்கின்ற “குற்ற ஆலம்” என்கிற கதை முக்கியமான, உரையாடல்களை எழுப்புகின்ற கதை. இக்கதையில் சரசுவுக்கும் கந்தப்பருக்கும் இடையில் உறவு இருக்கின்றது. அந்த உறவினால் பிறந்தவனே சரசுவின் மகன் ராசன். சரசுவின் கணவர் சங்கரப்பிள்ளையும் இதனை அறிவார் என்றாலும் அது குறித்து அவர் சரசுவிடம் எதுவும் கேட்காமலே இருக்கிறார். கந்தப்பரும் ஏற்கனவே திருமணமானவர் என்றாலும் அவருக்கும் அவர் மனைவிக்கும் பிள்ளை பிறக்கவில்லை. இந்நிலையில் கந்தப்பர் இறந்துவிட, சங்கரப்பிள்ளை தன் மனைவி சரசுவையும் மகன் ராசனையும் அந்தச் சாவீட்டுக்குப் போகும்படி சொல் கிறார். தயங்கும் மனைவியிடம், கந்தப்பருக்கும் சரசுவுக்குமான உறவு தனக்குத் தெரியும் என்றும் ராசன் அவர் மூலமாகப் பிறந்தவன் என்பதையும் அறிவேன் என்றும் தெரியப்படுத்துகிறார். சரசு சாவீட்டுக்கு மகனை யும் அழைத்துச் செல்கிறாள், அங்கே கந்தப்பரின் மனைவி சரசுவுக்கும் முன்னுரிமை கொடுப்பதுடன் ராசனுக்குப் பூணூல் அணிவித்துச் சடங்குகளையும் செய்விக்கின்றாள். சாவீடு முடிய வீடு திரும்பும் சரசுவின் தலையைத் துடைத்துவிட்ட படி சங்கரப்பிள்ளை இவ்வாறு கூறுகிறார்:

“சரசு இத்தனை வருசமா நீ இந்தக் குற்ற உணர்வைச் சுமந்துகொண்டெல்லா இருந்தனி. நீ முந்தின சரசு இல்லை எண்டிறதை நான் எப்பவோ அறிஞ்சுபோட்டன். இப்படியே சுமையைச் சுமந்து கொண்டிருந்தா அது உன்ர ஆயுளைக் குறைச்சுப் போடும். நீ பிழைவிட்டிட்ட எண்டு எனக்குத் தெரியும். உன்னையும் ராசனையும் விட்டுட்டு ஒரே நாளிலை நான் போயிருக்கலாம். ஆனா இங்க நீ மட்டும் குற்றம் செய் யேல்ல. நானும் தான். புதுக்கக் கல்யாணம் கட்டிப் போட்டுக் கொழும்பில போய்ப் படுத்துக்கிடந்த என்னிலும் பிழைதான். அதனால் உன்ர தவறை என்னால் புரிஞ்சுகொள்ள முடிந்தது. நான் எப்போவோ உன்னை மன்னிச்சுட்டன். சனத்தைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. சரி தலையைத் துடைச்சுப் போட்டு வா, நான் டீ வைக்கிறன்”

இந்தக் கதையில் குற்ற ஆலம் என்பது எதனைக் குறிக்கின்றது? குற்றம் ஒரு விடமாகத் தங்கிவிடுகின்றது. அதிலிருந்து சரசுவை விடுதலை செய்வதற்கான ஒரு ஆற்றுப்படுத்தலாக இதனைக் கொள்ளலாமா? கதை யில் சரசு அந்தக் குற்றவுணர்வில் இருந்து விடுபடுவது போலத்தான் அமைகின்றது, ஆனால் மனைவி சரசு வின் மனதில் இருந்த விஷத்தைத் தூக்கி மகன் ராசனின் மூளைக்குள் சங்கரப்பிள்ளை வைத்துவிட்டாரோ என்றும் சிந்திக்கத் தூண்டுகின்றது. அப்படிச் செய்தமைக்குக் காரணம், திருமண உறவில் துரோகம் செய்த மனைவியைப் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள் கின்ற பேராண்மை மிக்க கணவனைக் காட்டுவதாக இருக்கலாமோ என்று நினைக்கும்படி இருக்கின்றது.

“பாஸ்கரன் கதை”, “பின் புத்தி” என்கிற இரண்டு கதைகள் பகடியுடன் எழுதப்பட்டிருந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடிய/புலம்பெயர்/தமிழ் இலக்கியச் சூழலையும் எழுத்தாளர்களையும் புத்தக வெளியீட்டு நிகழ்வுகளிலும் இருக்கின்ற நிலைவரத்தையும் எள்ளல் செய்வதாக அமைகின்றன. விழாவுக்கு வர ஒத்துக்கொண்ட முக்கிய பேச்சாளர்கள், தலைமை தாங்குவோர் திடீரென்று வராமல் விட்டுவிட நடக்கும் நிகழ்வுகள், புத்தகத்தைப் பற்றிப் பேசாமல் வேறுவிடயங்களைப் பற்றிப் பேசுதல், டாம் சிவதாசனின் மொழியிலேயே சொன்னால் “புத்தகம் தனது கையில் நேற்றுத்தான் கிடைத்ததாகக் கூறி, மாட்டை மரத்தில் கட்டிவிட்டு மரத்தைப் பற்றி முழங்கித்தள்ளல்”, எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாமல் சிறப்புப் பிரதி வாங்கப் பார்வையாளர்கள் அழைக்கப்படல், வெறும் கடித உறைகளைக் கொடுத்துப் புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளல் என்கிற எல்லா அபத்தங்களும் நிகழ்வதாகவே இந்தச் சூழல் இருக்கின்றது. இங்கே என்ன சிக்கலென்றால் புத்தகப் பதிப்பு, புத்தக விற்பனை, எழுத்து என்பவை எல்லாமே தமிழ்ச்சூழலில் ஒரு தொண்டாகத்தான் பார்க்கப்படுகின்றன. புத்தகப் பரம்பலையும் வாசிப்பையும் இதுவே வளர்க்கும் என்றே பலரும் கருதுகின்றனர். ஆனால் உண்மையில் இவைதான் இந்தத்துறைகளை பேண் தகுநிலையை (Sustainability) எட்டவிடாமல் வைத்திருக்கின்றன.

அதேநேரம் கலைஞர்களதும் செயற்பாட்டாளர்களும் உழைப்பினைப் பொருளாதார அளவீடுகளை வைத்து அளவிடும் போக்கே பொதுச் சமூகத்திடம் இருக்கின்றது. கலைஞர்களும், செயற்பாட்டாளர்களும் செய்யும் உழைப்புக்கான பணமதிப்புக் கிடைக்காதுவிட்டாலும் அதுவும் ஓர் உழைப்புத்தான் என்பதையும் மக்கள் உணர்வதில்லை. இன்னொரு விதத்தில் எழுத்தாளர்கள்/செயற்பாட்டாளர்கள் யதார்த்தத்தை / நிஜத்தின் வெம்மையை அறியாதவர்களாகவே இருக்கின்றார்கள். பொருளாதாரம் பற்றிய பிரக்ஞை இன்மையைக் காட்டி எழுத்தாளர்கள்/கலைஞர்கள் என்றாலே யதார்த்தத்தை மறந்து வெறும் கனவுகளில் வாழ்பவர்கள் என்பதாக முடித்துவிடுவது இருக்கின்றது. செய்க பொருளை! என்று வள்ளுவர் சொன்னது இன்றும் பொருள் பொதிந்ததாகவே இருக்கின்றது.

சிவதாசனின் எழுத்துகள் தனித்துவமான நடையையும் அவருக்கு உரிய பார்வையையும் கூர்மையான கவனங்களையும் நகைச்சுவை கலந்து வெளிப்படுத்துகின்றன. காமம், பாலியல் தேவைகள், பாலியல் திருப்தியின்மை, குடும்ப வன்முறை, போதை பாவனை என்று பேசாமல் கடந்த விடயங்களை அவர் கதைகள் பேசுகின்றன.

கர்ம சூத்திரம் என்றொரு கதை. திருமணத்தின் பின்னர் மனைவியைத் திருப்திப்படுத்த முடியவில்லை என்கிற தாழ்வுமனப்பான்மை கொண்ட கணவனும் அதனை வெளிப்படையாகவே காட்டிக்கொள்கிற மனைவியும் வருகின்றார்கள். பெண் தன் தாயிடம் இதைப் பகிர்ந்துகொள்ளும்போது

“உங்கட அப்பாவுக்கும் இதே பிரச்சினை இருந்தது. நான் பொறுமையாக இருந்து எல்லாமே எதிர் பார்த்தபடி நடந்தது என்பதுபோல நடித்துச் சமாளித்தேன். அவரும் நெஞ்சை நிமித்திக்கொண்டு தன்ர ஆம்பிளைத்தனத்தைத் தானே மெச்சிக்கொண்டு போயிருக்கலாம். அம்மாவின் கண்களில் நீர் பனித்தது, உனக்குப் பிற நாலு பிள்ளைகளைப் பெற்றவர் அவர்”

என்கிறார் தாய். தனது சிக்கலை விதவையான விஜயலட்சுமி அக்காவிடம் கணவன் சொல்ல, அவள் மனைவியிடம் கதைக்கிறாள். அதன்பிறகு சிக்கல் தீர்கிறது. இது பற்றி விஜயலட்சுமி அக்கா,

“நீங்கள் சின்னப்பிள்ளைகள், படிச்சனீங்கள். வேலியடிக்கதைகளை நீங்கள் நக்கலடிக்கிறனீங்கள். உங்களுக்கு அதில் நம்பிக்கையில்லை.”

என்கிறாள். கேணியடி, வேலியடி, குளத்தடி, கடையடி, கோயிலடி, மதவடி என்று கதைக்கின்ற பேச்சுகள் வெறும் வெட்டிப்பேச்சுகள் அல்ல் அவை ஒருவிதத்தில் ஆற்றுப்படுத்தலும் கூட. இப்படியான நுண் அவதானங்களைக் கொண்ட கதைகளால் நிறைந்தது இந்தத் தொகுதி.



பொ.ஐங்கரநேசன் அவர்கள் கலை, இலக்கியப் பேராளுமைகளுடன் நிகழ்த்திய நேர்காணல்களின் தொகுப்பான “வேர் முகங்கள்“ நூல் வெளியீட்டு விழா 14.09.2025 அன்று கலாநிதி தி.செல்வமனோகரன் தலைமையில் கைலாசபதி கலை அரங்கில் நடைபெற்றது. வரவேற்புரையை கை.சரவணனன் வழங்கினார். வெளியீட்டுரையை கு.வசீகரன் அவர்களும் கருத்துரைகளை சர்மிலா வினோதினி, தெ.மதுசூதனன் ஆகியோர் நிகழ்தினார்கள். ஏற்புரையும் நன்றியுரையும் நூலாசிரியரால் நிகழ்த்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந. இரவீந்திரன்

# நேற்றில் கரைந்தோடும் இன்றிலிருந்து



## 8

மடத்துக் காணியைப் பையப்பைய மன்ற விளையாட்டுத் திடலாக மாற்றுகிறோம் என்பதில் அவ்வப்போது கந்தையா வாத்தியாருடன் மனக்கிலேசங்கள் ஏற்படுவதும் கோயில் வழிபாட்டுக்கு எங்களால் பங்கமேதும் நேராது என வெளிப்படுத்தும் எமது முன்னெடுப்புகள் உருவாக்கி வந்த சமாதானச் சூழல்களை அவரும் அங்கீகரித்து, அனுசரித்து வந்தார் என்பது பற்றிப் பேசியுள்ளோம். அதன் பேரிலான நம்பிக்கையால் மட்டும் "என்னை மன்றம் தூக்கிச் செல்லும்" என்ற திடமான மனம் கந்தையா வாத்தியாரிடம் ஏற்பட்டிருந்தது என்றில்லை இவற்றை விடவும் எமக்கிடையே பிளவுக்கான பாரிய தடையொன்று ஏற்பட்ட போது அதனை எவ்வாறு நிவர்த்தி செய்து கடந்து சென்றோம் எனக் கண்ட பின்னரே கந்தையா வாத்தியாருக்கு எங்கள் மீதான அசைக்கவியலாத நம்பிக்கை ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது!

முன்னதாக முழு அளவில் கடவுள் நம்பிக்கை எங்களிடம் குடிகொண்டிருந்த காலத்திலேயே பூசைக்குப் பூப்பறித்து வந்த அரளிச் செடிகளைப் படிப்படியாக வெட்டி வேரடி மண்ணோடு அப்புறப்படுத்தியவர்கள் நாங்கள். கடவுளை மனதின் ஒரு மூலையில் இருத்தியபடி மன்ற மைதானத்தை விரிவாக்கி உறுதிப்படுத்துவது இன்னொரு அவசியப் பணி என இருந்திருக்கிறோம். ஒரு நிலையிலே வலுவுடன் இருக்க நினைத்தாலும் ஆற்றோட்டத்தில் கலந்த கம்பொன்று அதனோடு இழுபட்டு ஓடுவது இயல்பென்பதைப் போல எங்களது செயல் வேகம் சமூகம் பற்றிய புதிய தேடல்களின் பால் ஈர்க்கப்பட்டு கடவுள் இருப்பையே கேள்வி கேட்கிற இடத்துக்கு வந்திருந்தோம்.

கொழும்பில் பட்டப்படிப்புக்குச் சென்ற தேவர், சந்திரன் வாயிலாக மார்க்சியத்தை அறிந்து கொண்டவர்கள் "சோசலிச இளைஞர் அமைப்பு" ஒன்றைப் பிரகடனம் செய்திருந்த போதிலும் அங்குரார்ப்பணக் கூட்டம் ஒன்றுடன் அது அமைதி கண்டிருந்தது. அப்போது கட்சிகள் எதனையும் ஏற்காமல் தனி வழி செல்வது என்ற எண்ணம் இருந்தது. பின்னர் இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சி (புரட்சிகர அணி) இல் இணைந்து வாலிபர் சங்கக் கிளை ஒன்றை ஊரிலே உருவாக்கிச் செயற்படத் தொடங்கியபோது கிராமம் அல்லோலகல்லோலப் படலாயிற்று.

எப்படி அந்த அமைப்பு ஊருக்குள் நுழைந்தது என்பது பற்றி அடுத்த அமர்வில் பேசிக்கொள்ளலாம் கொம்யூனிஸ்ட் இளைஞர்கள் என இயங்கத் தொடங்கிய காரணத்தால் மன்றத்தில் ஏற்பட்ட பிரச்சினை பற்றி இப்போது பேசுவது பொருத்தமாக இருக்கும்.

கட்சியில் இணைந்த கையுடன் கடவுள் மறுப்பு என்னிடம் ஏற்பட்டிருக்கவில்லை. முன்னரிருந்தே கடவுள் நம்பிக்கை அற்றவராக இருந்த கிருஷ்ணதாசன் அப்போது எமது வாலிபர் சங்கச் செயற்பாட்டில் என்னுடன் தீவிரமாக இயங்கியவர். நிலவுகின்ற இன்றைய சமூக அமைப்பில் ஏற்பட்ட அதிருப்தி காரணமாகக் கட்சியின் கடவுள் மறுப்புக் கொள்கை உள்ளிட்ட அனைத்தையும் ஏற்பவராக அவர் இருந்தார். முன்னரைப் போலவே கொம்யூனிஸ்ட்டாக இயங்கத் தொடங்கிய பின்னரும் கடவுள் குறித்த கோட்பாட்டு விவகாரங்களில் அக்கறை காட்டவில்லை.

எனக்கும் சமூக நியதிகள் மீது அதிருப்திகள் இருந்ததன் பேரில், இன்றைய அமைப்பை மாற்றுவதற்கான சிறந்த வழி காட்டும் நெறி மார்க்சியம் என்ற புரிதலிலேயே கொம்யூனிஸ்ட் கட்சியில் இணையும் ஆர்வம் ஏற்பட்டது. இந்தப் பாதை சரியானது தான் என்ற தெளிவு பெறப்படாமல் சந்தேகங்களுடனும் போக்கடி போக்காகவும் செயற்பட இயலாது என்ற மனப்பாங்கும் என்னிடம் இருந்து வந்தது.

கடவுள் விவகாரத்திலும் அப்படித் தான். "சமூக மாற்றத்துக்கான வழிமுறை என்று கொம்யூனிஸ்ட் கட்சி சொல்லுகின்ற எல்லாம் சரிதான். அதற்காகக் கடவுள் இல்லை என்பதை என்னால் ஏற்க இயலாது" என்று விவாதித்து வந்திருக்கிறேன். தொடர்ந்தும் மார்க்சியக் கற்றலில் முழு ஈடுபாட்டுடன் இறங்கிய பின்னர் என்னிடம் இருந்த கடவுள் நம்பிக்கை தானாக விலகிப் போனது. ஆயினும் எங்களுடன் இயங்கிய பலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தும் கடவுள் நம்பிக்கையைக் கைவிடாமல் இருப்பது பற்றி நாங்கள் பொருட்படுத்தியதில்லை.

மன்றத்தில் அப்போது முன்னணியில் இயங்கியவர்களான தயாளன், வேல்முருகன், பாலன், மகேசன், சுப்பிரமணியம், யோகன், குலேந்தி போன்றவர்களும் வாலிபர் சங்க உறுப்பினர்களாக இருந்த காரணத்தால் மன்றம் முழுவதுமாக கொம்யூனிஸ்ட் செயற்களமாக ஆகிவிட்டது என்ற பிரசாரத்தை மன்ற எதிர்பபாளர்கள் முன்னெடுத்தனர். இத்தனைக்கும் மன்ற வளவினுள் வாலிபர் சங்கக் கிளைக் கூட்டங்களில் ஒன்றைக் கூட நாங்கள் நடாத்தியதில்லை. மன்ற உறுப்பினர்களில் எங்களது சம வயதினரில் சிலரும் சிறுவர்கள் அனைவரும் கட்சி பற்றிய அக்கறை பெறாதவர்கள் என்ற வகையிலும் மன்றத்தை அரசியலரங்காக்கக் கூடாது என்பதனாலும் மன்றக் கூட்டங்கள் தவிர்ந்த வேறெதனையும் அங்கே நடாத்தியதில்லை.

இருப்பினும், மேதின ஊர்வலத்துக்குக் கட்சி சாராத மன்ற உறுப்பினர்கள் பலரும் வருவர் கட்சிக் கூட்டங்களிலும் கணிசமானோர் கலந்துகொள்வர். சும்மா மெல்லுகிற வாய், இவற்றைக் கண்ட பின்னர் பெரும் எக்காளத்துடன் முழங்கியது, "இவங்கள் எல்லாம் கொம்யூனிஸ்ட்டுகள் கோயில் மடத்தை இடித்துத் தரைமட்டமாக்கி விளையாட்டு மைதான மாக்கப் போறாங்கள்" என்று. கந்தையா வாத்தியாரிட மும் பத்த வைக்கத் தொடங்கினர்.

வாலிபர் சங்கக் கிளையில் இவை பற்றிக் கூடி விவாதித்தோம். மடத்தினுள் ஒவ்வொரு வெள்ளிக் கிழமை மாலை வேளைகளில் தவறாது தேவார, திருவாசகப் பஜனை நடாத்துவது என்று முடிவு எடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. தீவிர கடவுள் மறுப்பாளராக இருந்த கிருஷ்ணதாசன் இசை யுடன் பாடவல்லவர் என்பதனால் அவரே பஜனைச் செயற்பாட்டை முன்னெடுப்பவரானார். சுண்டல் வழங்குவதனையும் வழக்கமாக்கி இருந்ததனால் சிறுவர்கள் எல்லோரும் தவறாது கலந்துகொள்வதுடன் சேர்ந்து பாடுகிறவர்களாக வளர்ந்தனர். சும்மா இருந்த மடம் பக்திப் பரவசத்துடன் களைகட்டத் தொடங்கி விட்டதில் கந்தையா வாத்தியாரிடம் ஏற்பட்டிருக்கத் தக்க சந்தேகங்கள் அனைத்தும் பூரணமாக விலகிப் போயின!

இன்றைய சூழலில் இதனைப் புரிந்து கொள்ளச் சிரமம் இருக்கலாம் நாற்பது வருடங்களுக்கு மேலாக நுகர்வுப் பண்பாட்டினுள் வாழப் பழகிவிட்ட காரணத் தால் அன்றைய இந்த உணர்வு நிலை விந்தைநாகத் தோன்றலாம். எழுபதாம் ஆண்டுகள் வரை நிலவிவந்த சுய பண்பாட்டு விருத்தியை அடித்தளமாகக் கொண்டு இயங்கிய ஆரோக்கியமான வாழ்வியலைச் சிதைக்கும் வகையில் ஊடுருவிய உலகமயமாதல் ஏற்படுத்திய நுகர்வு மோகம் சொந்தப் படைப்பூக்கத்தை நலிவுறச் செய்துள்ளது தனியாள் விருத்தி முனைப்பாக்கப் பட்டதும் அதைச் சார்ந்த சிறு குழு மனப்பாங்குகளை வளர்த்த கையுடன் ஒவ்வொரு குழுக்களிடையேயான தீர்க்கத் தக்க முரண்களையும் பூதாகாரமாக்கி ஒன்றுடன் ஒன்றை மோதவிடும் ஊடகப் பரப்புரை வாய்ப்புகளைப் பெருக்கியும் "போராட்டங்களின் விளை நிலமாக வாழ்க்கை" ஆக்கப்பட்டு உள்ளது. இந்தச் சிந்தனைச் சுழலுக்குள் அன்று நாங்கள் இருந்திருந்தால் கந்தையா வாத்தியாருக்கு எதிராக நாங்கள் போராடக் கிளம்பி இருப்போமே அல்லாமல் பஜனை பாடிச் சாந்தப்படுத்த விளைந்திருக்க மாட்டோம்.

அதற்கு இருபது வருடங்களுக்கு முன்னர் (ஐம்பதாம் ஆண்டுகளில்) "பண்ணாகம் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும்" உருவாக்கப்படுவதில் கந்தையா வாத்தியாரிக்கு இருந்த பங்குப் பாத்திரம் பற்றிப் பின்னர் தான் நாங்கள் அறிந்துகொண்டோம். பாதிச் சுதந்திரம் கிடைத்த ஓரிரு ஆண்டுகளில் இடதுசாரிகளின் முன்னெடுப்புடன் வீறுபெற்று எழுந்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கிளர்ச்சி யூட்டல் செயலொழுங்குகள் கிராமிய விழிப்புணர்வை நாடு பரந்து வியாபிக்க வழிகோலியது. அன்று இளைஞர்களாக விளங்கிய எங்களது தந்தையர்களுடன் இணைந்து கந்தையா வாத்தியார் செயற்பட்டதோடு அதன் ஆரம்ப காலத் தலைவராகவும் இயங்கியுள்ளார்!

அந்தச் சனசமூக நிலையம் ஊட்டி வளர்த்த பண்பாட்டு அடித்தளம் தான் எங்களைக் கிராமத்தில் நிலவிய பண்பாட்டுணர்வை மாற்றிப் புனைந்து புதிய விருத்தி நோக்கி வளர்த்தெடுக்கும் வகையிலே செயற்படத் தூண்டியது. ஐம்பதாம் ஆண்டுகள் ஏகாதி பத்திய எதிர்ப்பின் முதல் எழுச்சிக் காலம் என்றால், இலங்கையின் இரண்டாம் தேசிய விழிப்புணர்வு எழுச்சி எழுபதாம் ஆண்டுகளில் புதிய பரிணமிப்பை எட்டி இருந்தது. சமூகப் புத்தெழுச்சியை ஏற்படுத்தும் வண்ணம் இளமைத் துடிப்புடன் நாங்கள் இயங்கும்படி தூண்டிய அந்த வீச்சுத் தொடர்வதற்கு இடமளிக்கும் பட்சத்தில் நாடு சமவுடமைப் பொருளாதாரக் கட்டமைப் புக்கு மாறிவிடும் என்பதனாலேயே எண்பதாம் ஆண்டு களில் இருந்து திட்டமிட்ட வகையில் அனைத்துத் தரப்பு மேலாதிக்க சக்திகளாலும் இனவாதம் வளர்க்கப்பட்டு இன - மத - பிரதேசவாதப் பிளவுகள் தூண்டப்பட்டன.

இந்த அவலம் இலங்கைக்கு மட்டுமே உரியதுமல்ல; முன்னாள் காலனித்துவ நாடுகள் பலவும் இத்தகைய மாற்றத்தின் உத்வேகத்துடன் இருந்தன. அதற்கான பொதுவுடமைக் கருத்து மிக அதிக வீச்சுடன் இலங்கையில் காலூன்றிச் செயற்பட்டவாறு இருந்த காரணத்தாலேயே இங்கு முப்பது வருடங்களாக நீடித்த உள் நாட்டு யுத்தத்துக்குரிய இனக் குரோதங்கள் வளர்க்கப்பட்டன. இந்தக் காலனித்துவச் சதிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்படாமல் பரந்துபட்ட பார்வை வீச்சுடன் மக்கள் விடுதலை பற்றிய அக்கறை எங்களிடம் வேஷரூன்றும் படி மன்றச் செயற்பாடுகள் எம்மை வடிவமைத்து இருந்தன. அந்த அரசியல் நோக்குத் தான் கந்தையா வாத்தியாருடன் மோதல் போக்கை நாடாமல் கோயில் மண்டபத்தில் எங்களை நிதானம் காக்க வைத்தது.

இன முரண் கூர்மைப்படுவதில் 1972 ஆம் ஆண்டைத் தொடர்ந்து நடைமுறைப்பட்ட "பல்கலைக் கழகப் பிரவேசத்துக்கான தரப்படுத்தல்" பிரதான பங்கு வகித்தது. எனது குடும்பமும் ஊரும் என்னை வைத்தியப் படிப்பில் முன்னேறவுள்ள ஒருவன் என எண்ணியிருந்த போது அதனைக் குழப்பித் தமிழிலக்கிய நாட்டம் கொள்ள வைத்ததில் ஏதோவொரு வகையில் அந்தத் தரப்படுத்தலுக்குப் பங்கிருந்தது. அதன் பேரில் என் வயதொத்தவர்கள் நாடியதைப் போலத் தமிழீழப் போராட்டத் திசை மார்க்கத்தை நாடாமல் பொது வுடமைச் சித்தாந்தம் நோக்கி நான் வளரக் காரணமாக இருந்த அம்சங்கள் பற்றி அடுத்த அமர்வில்தான் பேச வேண்டும். முதலிலேயே சொன்னதைப் போல மன்ற உணர்வில் கலந்த கந்தையா வாத்தியார் தொடர்பிலான பிரதான விடயம் ஒன்றை இங்கு பேசுவது அவசியம்!

இனி வளர்கிற இந்தக் கதையாடலில் கிராமத்தைக் கடந்து அரணியல் களத்தில் நான் பெற்ற அனுபவங்கள் அதிக இடத்தைப் பிடிக்கும். அதனுடன் இணைந்ததாகத் தொழில் உலகுக்குள் பிரவேசித்து மலையக மண்ணில் எனக்கான இரண்டாம் பிறப்பு வந்தமைந்தவாறினைச் சொல்ல வேண்டும். மன்றத்தில் எனது உச்சபட்ச இருப்புச் சாத்தியப்பட்ட காலப் பரப்பினை இங்கு சொல்லி முடிக்க எத்தனிப்பதால் பின்னர் இந்தப் பேசுபொருள் இல்லாமலாகும் என்றில்லை. முழுத் தீவிரத்துடன் மனப் பணியே முதன்மை என்றிருந்த என்னிடம் ஏனைய தளங்கள் பிரவேசித்த போதிலும் மன்றம் தொடர்ந்தும் வீச்சுடன் இயங்கி வரவே செய்தது. அதன்பால் எனது ஊடாட்டம் தொடர்ந்தவாறே இருந்தன. அவ்வாறு எனது பங்கேற்பு விவகாரங்கள் வந்தமைந்த சந்தர்ப்பங்களில் தொடர்ந்து மன்ற இயங்காற்றலின் ஏனைய விடயங் களையும் பேசுவேன்.

ஊரில் இயங்குவதை விடவும் யாழ்ப்பாண நகருக்கும் அங்கிருந்து வேறு பல இடங்களுக்கும் என எனது அரசியல் செயற்பாடுகள் பரவலடைந்ததும் ஆசிரியராகப் பொறுப்பேற்று நுவரெலியா மாவட்டத் துக்குச் சென்றதும் என்ற எனது இரண்டாம் தளப் பின்னணிக் காலத்தில் கந்தையா வாத்தியாரின் இணையரான அன்ரிநை வழி தெருவில் அவ்வப்போது சந்திப்பேன். வாத்தியாரது மறைவுக்குப் பின்னர் அன்ரி தான் தினந்தோறும் பின்னேரங்களில் மடத்துக் கோயிலுக்குச் சென்று குத்து விளக்கு ஏற்றுவதைச் செயற்படுத்தி வந்தார். எங்களுக்கு வாத்தியாருடன் இருந்த இரத்தமும் சதையும் போன்றதான பந்தம் போல அடுத்த தலைமுறையினரின் உணர்வுடன் கலந்தவராக அன்ரி விளங்கினார். மன்றத்தில் வைத்து அவரைச் சந்திக்கும் சந்தர்ப்பங்கள் அருகிவிட்டமையால் எங்கு கண்டாலும் என்னை வழிமறித்து பலதும் பத்தும் பேசுவார். நானும் அவரைக் கண்டதும் சைக்கிளை விட்டிறங்கி எப்போதும் அவருடன் உரையாடுவதனை வளக்கமாக்கி இருந்தேன்.

கந்தையா வாத்தியார் வாழ்ந்து இறுதி மூச்சைச் சுவாசித்த செட்டி குறிச்சியில் பின்னர் அன்ரி இருக்க வில்லை. பறாளாய் முருகன் கோயிலுக்கு அருகிலுள்ள சாத்தாவோலையில் புதிய வீடு கட்டிக் குடியேறி வாழ்ந்தார். அங்கிருந்து அவர் மன்றத்துக்கு அவர் நடைபவனி வருகிற போது மன்ற அயலிலான எனது வீட்டில் இருந்து சுழிபுரம் நோக்கிச் சைக்கிளில் நான் பயணித்துக் கொண்டிருந்தேன். அவரைக் கண்டதும் சைக்கிளை விட்டிறங்கியவனாக அவரருகில் சென்றேன். எடுத்த எடுப்பில் அவர் சொன்ன வார்த்தைகள் அதிர்ச்சி தருவதாக இருந்தது.

"அவற்றை செத்த வீட்டை நீங்கள் நடத்தின மாதிரி என்ரை செத்த வீட்டை நடத்த மாட்டீங்கள்"

என்று அவர் சொன்ன போது தனது மரணம் நெருங்குவதாக ஏதோவொரு உள்ளுணர்வு உந்தி யிருக்கும் என்ற ஏதும் ஏற்படவில்லை அப்படி நினைக்க இடம் தரும் வகையிலான தளர்ச்சி எதுவும் அவரிடம் வெளிப்பட்டு இருக்கவில்லை. நாங்கள் ஒன்றும் வாத்தி யாரின் இறுதி நிகழ்வை முழுமையாக செய்தவர்களு மல்ல. கந்தையா வாத்தியாரின் இறுதிப் பயணத்தை நிறைவாக்கும் வகையில் வீடு முதல் சுடலை வரை தோள்களில் சுமந்து சென்றோம். அதற்கு முன்னதாக "மறுமலர்ச்சித் தந்தைக்கு இறுதி வணக்கம்" என்ற பிரசுரத்தை அச்சிட்டு அனைவருக்கும் பகிர்ந்ததன் வாயிலாக அவர் மீதான எங்களது உயர் மதிப்பை வெளிப்படுத்தி இருந்தோம்.

அன்று அவ்வாறு செயற்பட்டதை விடவும் மேலும் கனதியாகத் தனது இறுதி நிகழ்வில் மன்றத்தின் பங்கேற்பு அமைந்தாக வேண்டும் என்பதையே அன்ரி வலியுறுத்துகிறார் என்பது புரிந்து கொள்ளத் தக்க வகையில் அவரது பேச்சு இருந்தது. வழக்கம் போலச் சத்தமாகச் சிரித்தபடி தான் அதனைச் சொன்னார்.

நானும் அதே சிரிப்புடன் சொன்னேன்: "ஏனப்பிடி நினைக்கிறீங்கள், மன்றம் முழு அளவில உங்களுக்கான கடைசிப் பயணத்தை ஒப்பேற்றும்"

"இல்லையில்லை, உங்களாலை முடியாது"

"ஏன் முடியாது?"

"இப்ப நீங்களெல்லாம் ஆளுக்கொரு திக்காலை வெவ்வேறை ஊருகளுக்குப் பிரிஞ்சு போவிட்டீங்கள். எனக்கு ஒண்டு நடந்ததும் எல்லாரும் ஒத்தபடி வந்துசேர வாய்ப்பில்லை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை, நாங்கள் எங்கை இருந்தாலும் கட்டாயம் எல்லாரும் வந்து சேருவோம். முழு அளவில மன்றம் உங்களுக்குரிய கடமையைச் செய்யும்"

வாழ்க்கைப் பயணத்தின் வேலை உலகு எங்களைப் பிரித்திருந்தாலும் மன்றத்தவர் ஒவ்வொரு வரும் முன்னர் இருந்த பலமிக்கதான ஒன்றுபட்ட உறவை மனதில் சுமந்தபடியே தான் இருந்தோம். அந்த ஒற்றுமை அன்ரிக்காக எல்லோரையும் கொண்டு வந்து சேர்த்துவிடும் என்ற திடமான நம்பிக்கை என்னிடம் இருந்தது. அதற்கேற்றவாறு மன்றத்தின் அடுத்த தலை முறையை அன்ரி வழிப்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பதனை அனைவரும் அறிவோம்.

மன்றத்தின் "சிறுவர் இலக்கிய அவையை" முன்னதாக உருவாக்கி, இன்று வளர்ந்தவர்களாக மன்றத்தைக் கொண்டு நடாத்துபவர்களை வழிப்படுத்த ஏற்றவகையில் அன்ரியிடம் பழந்தமிழிலக்கியப் பரிச்சயம் இருந்தது. கந்தையா வாத்தியாருக்கும் தமிழ்ப் பற்றும் இலக்கிய நாட்டமும் மிகுதியாக இருந்த போதிலும் அவரொரு கணித ஆசிரியர். ஆசிரியத்துவ அனுபவ வீச்சுடன் எங்களை வளர்த்தெடுத்தார். அன்ரியோ ஒவ்வொரு விடயத்துக்கும் ஔவையார் பாடல் முதல் பொருத்தமான பழந்தமிழ்ப் பாடல் அடிகளைச் சொல்லி விடயங்களைச் சுவாரசியமாக விளங்க வைப்பார்.

அந்த ஞான முதிர்ச்சியுடன் அன்ரி முன் வைத்த தீர்க்க தரிசனமே நிதர்சனமாயிற்று. எங்களுக்குத் தெரியாதிருந்த போதிலும் வாத்தியார் தீர்க்கமுடன் சொன்ன வார்த்தைப் பிரகாரம் அவரது விருப்பத்தை நிறைவேற்றி வைத்தோம். அன்ரி முன்கூட்டியே எச்சரித்த போதிலும் அவரது ஆழ்மன விருப்பமாக இருந்திருக்கக் கூடிய "எனது இறுதி நிகழ்வை மறுமலர்ச்சி மன்றம் நிறைவேற்ற வேண்டும்" என்பதனை எங்களால் சாதித்துக் காட்ட இயலவில்லை. பேரினவாத யுத்த மூர்க்கம் முழுவதுமாக யாழ்ப் பாணத்தைச் சுற்றி வளைத்து வெளியே இருந்து எவரும் நுழைய இயலாத முடக்கத்தை ஏற்படுத்தி இருந்த காலப் பின்னணியில் அவர் இவ்வுலக வாழ்வை நிறைவாக்கி விடைபெற்றிருந்தார். எங்களால் மட்டுமன்றி அவரது மூன்று பிள்ளைகளாலும் கூட ஊருக்க அந்தச் சந்தர்ப்பத்தில் வர முடியவில்லை வெளிநாட்டில் இருந்து கொழும்புக்கு வந்தும் ஊரைச் சென்றடைய இயலாத நெருக்கடியைச் சந்தித்தனர் என அறிந்து வருந்த மட்டுமே "அனுமதிக்கப்பட்டோம்".

கடைசி நாட்களில் தனித்திருந்தவர் எங்களூரை விடுத்துத் தனது பிறந்து வளர்ந்த புலோலிக்குச் சென்று அன்ரி வாழ்ந்துள்ளார். மறுமலர்ச்சி இணையர்கள் இருவரும் இவ்வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து விடைபெற்றேகிய பின்னரும் அவர்களைத் தொடரும் எச்சங்களாக ஒவ்வொரு மன்றமும் நீடிக்கிறோம் என்ற வகையில் இன்னமும் உயிர்ப்புடன் உள்ளனர்!

# அவதி

பெறுகின்ற பிள்ளை
தறுதலை ஆயின்
பெற்றவளுக்கு அவதி

வருகின்ற வருமானம்
குறுகிப் போயின்
வயிற்றுக்கு அவதி

கருவுதிர்ந்து மகவு
உருவெடுக்காது போயின்
தாய்மைக்கு அவதி

தெருவில் அலையும்
தேடுவாரற்ற நாயால்
வருவோர் போவோருக்கவதி

குருவியின் கூடறுந்தால்
கும்மாளமிடும்
குருவிக்கு அவதி

அருவி அகங்காரம்
கொள்ளின்
ஊருக்கே அவதி

அரையுடை மங்கையின்
குறையுடை கோலத்தால்
ஆணுக்கு அவதி

இரையென எண்ணி
கறைபடுத்தும் ஆணால்
பெண்ணுக்கு அவதி

சிலைசெய்யும் சிற்பி
நிலையறுந்து நிற்பின்
கலையும்காணும் அவதி

அலையெறிந்து மீனும்
நிலைமாறிக் கரைகாணின்
அதுவும்காணும் அவதி

மனோகரி ஜெகதீஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பா.சிவானந்தி

# ஒத்தமுனை



யன்னலினூடாகப் பட்டுத்தெறித்த நிலவின் ஒளியைப் பார்த்துக் கொண்டிருந்த கௌரி எனப்படும் கௌரி சங்கருக்கு நெடுநேரமாகியும் நித்திரை வந்த பாடில்லை. புரண்டு புரண்டு படுத்ததுதான் மிச்சம். பொல்லாத எண்ணங்கள் வந்து அவனை அலைக்கழித்துக் கொண்டிருந்தன. எந்த நாளை அவன் மறக்க வேண்டும் என நினைத்தானோ அந்நாள் அடிக்கடி அவன்நினைவில் வந்து தன்கோரப் பற்களைக்காட்டிச் சிரித்துக் குட்டிக்கரணம் அடித்தது. பாரதப்போரிலே கண்ணனின் வெள்ளைக் குதிரைகள் பூட்டப்பட்ட இரதத்தைப் போல ஆறாண்டுகள் வேகமாக உருண்டோடி விட்டன. அந் நாட்கள் அவன் கண்முன் நீண்டு விரிகின்றன. அவனப்பா ரகு கராஜ் ஒன்றின் முதலாளி. அதில் வரும் வருமானம் ஐந்து பேர் சீவிக்கப் போதுமானதாக இருந்தது. அப்பா, அம்மா அக்கா, தம்பி என மகிழ்ச்சிக்குக் குறையேதும் இருக்கவில்லை. அப்பா மட்டும் தனது பெற்றோர் வீட்டுக்குச் சென்று வருவார். சில நேரங்களில் அவருடன் கௌரியும் தொற்றிக் கொள்வான். அம்மாவுடன் பட்டும் பாடாமலும் அவர்களின் உறவு இருந்ததைக் கௌரி அறிவான். மன்னிக்கவும் அங்கு சென்று வரும் நாட்களில் அம்மா வனிதாவுடன் ஆவேசத்துடனும் ஆத்திரப்பட்டுக் கத்தியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவார். அன்றைய இரவு சிவராத்திரி தான்அவர்களுக்கு.இது அடிக்கடி அவன் வீட்டில் நடக்கும் சங்கதிதான். அப்போதெல்லாம் ஒரு விதமான பயத்தை அடிவயிற்றில் உணர்ந்து கொள்வான் கௌரி. கௌரி. "உன்னைத்தான் நம்பியிருக்கிறன்" என்று அடிக்கடி பிள்ளையாரைத் துணைக்கிழுப்பான். "பொல்லாத காலம் சொல்லா மல் தான் வரும்" எங்கேயோ எப்போதோ வாசித்த நினைவு. அந்தச் சிறுசலசலப்புகள் ஒரு நாள் அவன் குடும்பத்தை எங்கோ கொண்டு போய் நிறுத்திவிடும் என்பது.... "தம்பி" நீ ஆரோட இருக்கப் போறாய்?" என்ற அந்தப் பெரியவரின் கனிவான குரல் கேட்கும் வரை பத்துவயதுச் சிறுவனாகிய அவனுக்கேதும் தெரியவில்லை. நீர்வற்றி வரண்டு போன கண்களுடன் அம்மா, பரிதாபத்துடன் ஏக்கப்பார்வை பார்க்கும் அக்கா முழுமைக்கும் இன்றே அழுது தீர்த்துவிடும் முடிவில் கத்தி ஆர்ப்பாட்டம் செய்யும் குட்டித்தம்பி. இவையெல்லாம் ஏதோ செய்தது அழுகையும் வந்தது. மறுபக்கம் பார்த்தால்

கம்பீரப் புன்னகையுடன் அவன் அப்பா. அவனைக் கையிலேந்தக காத்திருக்கும்மூன்று அத்தைகள். கடவுள் உங்களிடம் நேரில் வந்து உங்களுக்கு இடதுகண்ணா வலது கண்ணா வேண்டும்? எனக் கேட்டால் நீங்கள் எந்தக் கண்ணைத் தெரிவு செய்வீர்கள்? இப்படியான ஒரு சூழலில் சிக்கிக் கொண்டான் கௌரி. அவன் அக்காவோ அம்மாவுடன் செல்லச் சம்மதம் தெரிவித்து விட்டாள்.அடுத்து இவன் சம்மதத்தை எதிர் பார்த்து அனைவரும் காத்திருந்தனர். தன்பார்வையை அங்குமிங்கும் சுழலவிட்டவன் தன் கண்களினால் தாய்க்கு விடை கொடுத்தான். அக்காவை ஏனோ அவனால் பார்க்க முடியவில்லை.

ஆம் அவன் தோற்றுவிட்டான். அவன் உணர்ச்சிகள் வென்றுவிட்டன. அவனது விருப்பத்தின் படியும் துலா பாரத்தீர்ப்பின் படியும் அக்கணமே அவன் அப்பாவைப் பின் தொடர்ந்தான். அப்பாவும் நல்லவர் தான் கடை வருமானம் முழுவதையும் குடும்பத்திற்காகச் செலவு செய்து விடுவார். அவன் சந்தோசமாக கொண்டவர். இங்கு மாமாக்கள், இருக்க வேண்டும் என்பதில் அக்கறை அத்தைகள், மைத்துனர்கள் ஒரு கூட்டுக் குடும்பமாகவே இருந்தது. அது ஆறுதலாகவே இருந்தது. எப்படியோ ஐந்து வருடங்களைச் சமாளதித்து விட்டார்கள். ஆயினும் சிலரின் சில செயற்பாடுகளின் போது அவன் மனம் கவலை கொள்ளும். வீட்டுவேலைகளை அவன் செய்யும் போது அத்தைகளின் பிள்ளைகள் கற்றலில் ஈடுபடுவார்கள் அல்லது விளையாடுவார்கள். சிலநேரங்களில் அவனை அப்பாவிடம் அடிவாங்கவும் வைத்து விடுவார்கள். அடித்த பின்னர் அவர் கவலைப் படுவதும் அவனுக்குத் தெரியும். "பள்ளிக்குடமாவது போக விடுகினமே" என நினைத்துச் சமாதானமடைவான். அவன் ஏதோ பெயருக்குத் தான் பள்ளிக்குடம் போகிறான். அங்கு எதுவும் அவனுக்கு விளங்குவதில்லை. நினைவெல்லாம் நீண்டதூரம் பயணிக்கத் தொடங்கி விடும். ஒரே எண்ணம் அடிக்கடி வந்து அலைக்கழிக்கும். அந்த எண்ணச்சுழலில் ஒவ்வொரு நொடியும் சிக்கித்திணறுவான். "அகத்தி ஆயிரம்காய் காய்த்தாலும்..." என்று அம்மம்மா அடிக்கடி தனக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே புலம்புவது அவன் கண்முன் நிழலாடியது. அது சில நேரங்களில் அவனுக்குப் பொருத்தமானதாய் இருக்கிறதோ..? என எண்ணிக் கொள்வான். அப்போ தெல்லாம் அன்னையின் முகம் வந்து வந்து போகும். சிலவற்றை அப்பாவிடமும் கூறமுடியாத சங்கடம். அவனறிந்த வரையில் இங்கு யாரும் அம்மாவைப் போற்றிப் புகழ்மாலை சூட்டிப் பாடுவதில்லை. அப்பா வும் அம்மாவைப் பற்றி உச்சரிப்பதை என்றைக்கும் விரும்பியதேயில்லை. என்னவோ அப்பா தியாகம் செய்து விட்டார் என்ற சொல்லை அவன் அந்த வீட்டில் அடிக்கடி கேட்டிருக்கின்றான். இவற்றையெல்லாம் கேட்கும் போது என்னவோ அவன் மனதின் ஓரத்தில் அம்மாவின் மேல் சிறு வெறுப்பு இருந்தது உண்மை தான். "மெய்ப்பொருள்" காணத்தவறி எவ்வளவு முட்டாள்தனமான காரியம் செய்து விட்டான். இப்போதோ அவன் வயது

2X8 பெற்றோரின் முன்னை நாள் வாழ்வு பற்றி ஏதுமறிந்தவனல்லன். சிறுவனாகிய அவனுக்கு அது பற்றி ஏதுமறியத் தேவையுமிருக்கவில்லைத்தான். ஆனாலும் அவனால்... பாயை விட்டெழுந்து தண்ணீர்ப் போத்தலை எடுத்து மடமட வெனக்குடித்து முடித்த வனின் கண்ணில் மாசற்ற வெண்மதி சிரித்தபடி காட்சி தந்தது. ஏனோ அன்னையின் முகம் மனக்கண்ணில் வந்து போனது. கூட்டுக் குடும்பத்தில் வாழ்வதற்குக் கொடுத்து வைக்க வேண்டும் என்பது உண்மைதான். பெற்றவள் இன்றி அக்குடும்பம் கூட்டுக் குடும்பமாகாது. இங்கும் பல ஒவ்வாமைகள் இருக்கவே செய்தன. அதை அவன் அப்பாவும் விளங்கிக் கொண்டாரோ என்னவோ!. ஒரு நாள் அவனருகில் வந்தமர்ந்தவர் "நாங்கள் தனிய வீடெடுத்து இருக்க உனக்கு விருப்பமோ?" என்று கேட்டார். அவன் பதிலுக்காய் காத்திருந்தார். சொல்லப் போனால் அவனுக்கிது ஒருவகையில் சந்தோசமாகவே இருந்தது. அம்மா புராணம் கேட்பதில் இருந்து தப்பி விட்ட நிம்மதி. அவனும் இரட்டிப்பு சம்மதத்தைத் தெரிவித்தான். வழமை போன்று அவன் பாடசாலை சென்று வருவான். அப்போதெல்லாம் அவனுக்கு அது அனுபவமாகவும் மகிழ்ச்சியாகவும் புதியதாகவும் இருக்கும். அப்பாவும் சமையலைச் செய்துவிட்டுக் "கராச்" போவார். அப்பாவின் சமையல் சுமாராக இருந்தாலும் அன்போடு பரிமாறுவார். அவர் நீண்டகாலமாக வெளிநாடு செல்லும் கனவு இருந்ததைக் கௌரியும் நன்கறிவான். அந்த அலுவலாக அடிக்கடி கொழும்பு செல்ல வேண்டி இருக்கும். இரண்டு மூன்றுநாளில் திரும்பியும் வந்து விடுவார்.அதுவரை அயல்வீட்டாரின் பாதுகாப்பில் இருந்து கொள்வான். அன்றும் கொழும்பு சென்ற அப்பா ஐந்து நாளாகியும் திரும்பி வரவில்லை, "போனும்" எடுக்கவில்லை. அது அவனுக்குப் புதிதாய் இருந்த துடன் பயமாயும் இருந்தது. என்ன செய்வதென்றும் தெரியவில்லை. இவ்வாறு பலயோசனையில் ஆழ்ந் திருந்தவனை "கௌரி அப்பா உன்னோட கதைக்கோணு மாம்" பக்கத்துக் கடைக்கார அங்கிள் தலையை நீட்டிய படி குரல் கொடுத்தார். "வாறன்வாறன்" துள்ளிக் குதித்தோடும் கன்றுக் குட்டியைப் போல் குதித்தோடிச் சென்று "போனைக்" காதில் வைத்துக் கொண்டு "வரேக்கை சப்பாத்து வாங்கிக் கொண்டு வாங்கோ எப்ப வருவீங்கள்?" என்று மூச்சுவிடாமல் கேட்ட கௌரிக்கு எதிர் முனை நிசப்தத்தை உமிழ்ந்தது. மனம் பதை பதைத்தது. "அப்பா" என்று மறுபடியும் குரல் கொடுத் தான். "நான் வரக் கொஞ்ச நாளாகும் நீ போய் அம்மாவோட இரு" என்று அந்தக் கர்ஜனைக் குரல் கட்டளையிட்டது. அது அவன் காதுகளைச் செவி டாக்கிச் சுயநினைவை இழக்கச் செய்தது. அத்துடன் அந்த தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டது. ஆம் அவனுக்கும் அப்பாவிற்குமான தொடர்பும் கூடத்தான். தளர் நடை நடந்து தன் அறைக்கு எப்படி வந்தானோ தெரியவில்லை. அவன் உள்ளுணர்வு அவனைக் கேலி செய்தது. "அன்றைக்கு உனக்கு அழுகை வந்ததல்லவா? நீ கவனித்தாயா? இன்றைக்காவது கவனித்தாயா?" எனக்கேட்டுக் கைதட்டிச்சிரித்தது.

அம்மாவை எங்கேதேடுவாய்? எந்த முகத்துடன் போவாய்? இவ்வாறாகப் பல வினாக்களுக்கு விடை தேடி அலைந்தது மனது. ஏதோ நினைவு வந்து தெளிந்தவனாய் பக்கத்து வீட்டவரின் உதவியைப் பெற எண்ணினான். அவர்களின் நல்லெண்ணத்தினால் அம்மா இருக்கும் இடத்தைக் கண்டு கொண்டான். மெதுவாய் படலைக்கு மேலாக எட்டிப் பார்த்தான். வீட்டு முன் வாயிலில் ஏதோ யோசனையில் இருந்த அம்மா படலைச் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். அவனை அடையாளங் கண்டு கொண்டாள் போலும். எதற்கும் அவன் தன்னைத் தயாராக்கிக் கொண்டான்."இஞ்சை ஏன் வந்த நீ ? அப்பாவோட சேந்து போறது தானே?" இது அவன் எதிர்பார்த்த ஒன்று தான். வேறென்ன வெற்றிலை பாக்கு வைத்து அழைப்பாவா? "இஞ்சை நான் படும் பாட்டுக்கை இப்ப வந்திட்டார்." இதுவும் அவன் எதிர் பார்த்த ஒன்று தான். ஆனால்... "ஏன் புது அம்மா உன்னை வச்சிருக்க மாட்டாவாமே?" எனும் சொல்லம்பு அவன் மனதைச் சுருக்கென்றுதைக்கக் குருதி கசிந்தது. அடக் கடவுளே என் காதே இரண்டாகி விட்டதே. "இவ் விடத்தில் அவன் எண்ணங்கள் தடைப்பட்டுக் கிணற்றில் போட்ட கல்லாய் உமிழ்நீர் கூடக் கனத்தது. மூச்சுவிடக் கஸ்ரப்பட்டவன் இரு கைகளினாலும் தலையைப் பிடித்துக் கொண்டு எழுந்துவிட்டான். இடியப்பச் சிக்கலாக இருக்கின்றதே? இப்போது எல்லாமே கொஞ்சம் புரிந்தது போல் இருந்தது அவனுக்கு. அப்பாவின் மேல் அம்மாவிற்கு இருந்த கோபமெல்லாம் இடம் மாறித்தன் மீது காட்டப்படுவதைக் கௌரியால் உணர முடிந்தது. அம்மா பராமரித்து வந்த பாட்டி யம்மாவும். சென்றவாரம் இறந்து விட்டா. அம்மாவின் வேலையும் போய் விட்டது. புது வேலை தேடவேண்டும் என்ற கவலை வேறு. அது வரைக்கும் செலவுக் கென்ன செய்வது எனப் பல கவலை அவளுக்கு. அவன் கவலையோ திருமணத்தில் ஒத்தமுடிவெடுக்கும் பெற்றோர் பிள்ளையைப் பொறுப்பேற்பதில் "காந்தத் தின் ஒத்த முனையைப்" போன்று செயற்படுகின்றனரே என்பது "என்னைப் போன்ற எத்தனையோ சிறுவர்கள் "அன்பெனும் நீருற்றி வளர்ப்பாரின்றிக் கருகிக் கொண்டி ருக்கின்றனர்." எது எப்படியாயினும் அம்மாவின் மனதின் ஒரு மூலையில் ஈரம் ஒளிந்திருப்பதை அவன் கண்டு கொண்டான்.

அவள் அவனைப் பெற்றவளல்லவா? அவளின் மௌனத்தை தனக்குச் சாதகமாய் எடுத்துக் கொண்டான். நிம்மதிப் பெருமூச்சுடன் கண்ணயர்ந்தான் கௌரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகிலா மகேந்திரன்

5

# ஆளுமையின் ஆட்சி, அகற்சியும் ஆழமும்



"மூளையின் தகவமைப்பில் பிரமிப்பு மிக்க அழகு என்னவென்றால், நீங்கள் எதை ஞாபகத்தில் வைத்திருக்கிறீர்கள், எப்படி ஞாபகத்தில் வைத்திருக் கிறீர்கள், என்ன செய்கிறீர்கள், எப்படிச் செய்கிறீர்கள் போன்ற விடயங்களில் மாற்றங்களைச் செய்யும்போது, உங்கள் மூளை பழைய நரம்பிணைப்புப் பின்னல்களை மாற்றிப் புதியவற்றை உருவாக்கும் சிறப்பை வாழ்நாள் முழுவதும் பெறுவது" என்று ஜெனிபர் பிரேசர்(Jennifer Fraser )கூறுகிறார் .

இத்தகு தகவமைப்புத் திறன் எமது நரம்புத் தொகுதிக்கு இருப்பதால்தான் நாம் புதிய விடயங் களைக் கற்றுக்கொள்கிறோம். உடல் காயங்களில் இருந்தும், உளக் காயங்களில் இருந்தும் மீண்டு கொள் கிறோம். எமது செயற்றிறனை மேம்படுத்திக் கொள் கிறோம். உன்னத ஆளுமை கொண்டவர்கள் இந்த வலுவான மந்திரத்தை மூளையின் தகவமைப்பு மந்திரத்தைக் கற்றுக்கொள்கிறார்கள். மந்திரத்தை வலுப்படுத்திக் கொள்ள ஏராளமான வழிமுறைகளைப் பின் பற்றுகிறார்கள். அவற்றில் சிலவற்றை நாமும் பார்க்கலாமா !

கேள்விகள் கேட்பது ஒரு வழி !

ஏதாவது ஒரு விடயத்தைக் கற்பது அல்லது கண்டுபிடிப்பதற்கான ஆசைத் தீக்கு நெய் விடுவது போன்றது வினா எழுப்புவது. மூளையின் கற்றல் நட வடிக்கையை வேகமாகத் தூண்டிவிடுகிற உள்ளார்ந்த உந்தல் இது. பிரதிபலிப்பு, செயற்பாடு ஆகியவற்றுக்குப் பொறுப்பான மூளையின் பகுதிகள் உள்ளிட்ட பல மூளைய மேற்பட்டைப் புள்ளிகளில் அல்லது பரப்புகளில் எதிர்வினையைத் தொடக்கி விடுகிறது இச்செயன்முறை. மூளையின் பல பகுதி களிலுமிருந்து நுண்மதியைத் திரட்டிக்கொள்வதில் இது உதவுகிறது .இதனால் புதிய நரம்பிணைப்புப் பாதைகள் தோற்றம் பெறுவதை இந்தச் செயல் அனுசரித்துப் போகிறது .

புத்தர் பெருமான் தனக்குத்தானே கேட்டுக் கொண்ட ஒரு கேள்வி, "வேதனைக்கு நாம் எவ்வாறு முடிவு கட்டப்போகிறோம்? விஷவட்டமாக முடிவின்றி-முடிவின்றித் தொடரும் துன்பத்திற்கு முடிவு இல்லையா?" உலகில் இதுவரை கேட்கப்பட்ட கேள்வி களில் மிக முக்கியமான ஒன்று இதுஎனப்பார்க்கலாம்.

எமக்குப் பழக்கமில்லாத கையைக் காலைப் பாவித்துப் பழகுவது மூளையின் தகவமைப்பை உயர் வாக்கும் இன்னோர் வழி. எமது மூளையின் பிரதான பகுதியாகிய மூளையம், இடது வலது மூளையவரைக் கோளங்களைக் கொண்டது. ஒவ்வொருவருக்கும் இவற்றில் ஒன்று மற்றதைவிட ஆதிக்கம் கூடியதா யிருக்கும். வலதுகைப் பழக்கம் உள்ளவர்கள் ஆதிக்கம் கூடிய இடது மூளையவரைக் கோளத்தால் ஆட்சி செய்யப்படுவார்கள். ஆகவே நாங்கள் எங்களுக்கு இலகுவில் பழக்கம் வருகிற கையைவிட மற்றதையும் பாவித்துப் பழகும்போது மூளையின் மற்றைய அரைக் கோளமும் புதிய நரம்பிணைப்புகளை உருவாக்கி வலிமைப்படுத்தும் அவசியத்தை உணர்ந்துகொள்கிறது .இதனால் வளரும் நுண் தசைத் திறன்கள் ஆக்கத்திறன் விருத்தியிலும், பிரச்சினைத்தீர்விலும் பங்குபெறுவது மட்டுமல்லாமல் ஞாபகத்தை அதிகரிக்கவும் அறிகைத் தொழிற்பாட்டை உயர்த்தவும் உதவும்.

கிரிக்கற் வீரர் சச்சின் டெண்டுல்கரின் இருகை வலு எல்லாருக்கும் தெரிந்த ஒன்று. உலகத்தர ஓவியர் லியனா டோ டாவின்சி எழுதுவது ஒரு கையால்! கீறுவது மறுகையால்! ஐன்ஸ்டீன், பெஞ்சமின் பிராங்கிளின் போன்ற பலர் இருகைப் பாவனை வாய்க்கப்பெற்று வாழ்ந்திருக்கிறார்கள். இல்லை. இல்லை. மறுகைக்கும் பயிற்சி கொடுத்து வலுப்படுத்தியிருக்கிறார்கள் .நாமும் இன்றே தொடங்கலாமே!

மற்றோர் விடயம் உடற்பயிற்சி. உடல் அங்கங் களுக்கு நாம் பயிற்சி கொடுக்கும்போது ,ஆட்டி அசைக்கும்போது, புதிய நரம்புக்கலங்கள் உருவாவ துடன் மூளைக்கான குருதி விநியோகமும் அதிகரிக் கிறது. நரம்புக்கலங்களுக்கு இடையில் உள்ள நரம்பு இணைப்புகளின் தகவமைப்பும் செம்மைப்படுகிறது. உடற்பயிற்சிகளை ஒழுங்காகச் செய்யும்போது BDNF என்ற பதார்த்தச் சுரப்பும் அதிகரிக்கிறது. மூளைக் கலங்களுக்குத் தேவையான ஒரு முக்கிய பதார்த்தம் இந்த BDNF(Brain derived Neurotrophic Factor). கலங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்வாழ்வதற்கு அது அவசியமாய் இருக்கின்ற அதேநேரம் கோர்ட்டிசோல் போன்ற நெருக்கீட்டு ஓமோன்களையும் -நெருக்கீட்டு நேரங்களில் சுரக்கப் படும் - கட்டுப்படுத்துகிறது. இந்தக் கோர்ட்டிசோல் மூளையில் அதிக சேதத்தை ஏற்படுத்தும் ஒரு பொருள் .ஆகவே மொத்தத்தில் உடற்பயிற்சி என்பது ஞாபக விருத்தி, அறிகைத்திறன், ஒருவரின் மனநிலை, உணர்ச்சிகள் போன்ற பல விடயங்களில் முன்னேற் றத்தை ஏற்படுத்தும்.

ஒழுங்கான ஆழமான போதிய அளவு நேர நித்திரையின் தேவை பற்றியும் இங்கு பேசவேண்டி யுள்ளது. நரம்பிணைப்புகளில் தேவையற்றவற்றையும் பலவீனமானவற்றையும் வெட்டிக் கழித்து, புதியவற்றை உருவாக்கி, இருப்பவற்றைப் பலப்படுத்தித் தேவையான ஞாபகங்களைத் திரட்டி ஒன்று சேர்ப்பதில் நித்திரையின் பங்கு அதிகம்.இப்படிச் செய்யும்போது அங்கு புதிதாகக் கற்றலுக்கான இடம் உருவாக்கப்படுகிறது. நெருக் கீட்டின்போது உருவாகும் ஓமோன்களையும், மூளை யின் அனுசேபத் தொழிற்பாடுகளின்போது ஏற்படுத்தப் படும் கழிவுப்பொருள்களையும் தொட்சின் களையும் அகற்றுவதற்கும் நித்திரைக்காலம் முக்கியம். மூளை யின் தகவமைப்புத் தொழிற்பாட்டின் முக்கிய அம்சங் களான இசைவாக்கமடைதல், திருத்தவேலை செய்தல், புதிதாகக்கற்றல் ஆகியவற்றிற்குத் தேவை யான உன்னத சூழலும் நித்திரையிலேயே கிடைக்கிறது. நித்திரையின் போது குறுங்கால ஞாபகத்தில் இருக்கும் தகவல்கள் நீண்டகால ஞாபகத்திற்கு மாற்றப்படு கின்றன. நித்திரையின்போது மயலின் கவச உருவாக்கம் வேகப்படுத் தப்படுகின்றது. இதன்மூலமும் புதிதாக உரு வாகும் நரம்பிணைப்புப் பாதைகள் நிரந்தரமாக்கப் படுகின்றன. "கண்ணுறங்கு, கண்ணுறங்கு, பொன்னுலகம் கண்ணில் காணும்வரை கண்ணுறங்கு" என்று பிறந்த பிள்ளையைத் தாலாட்டுவது, பிள்ளை யைத் தாராளமாக உறங்கச் செய்வது இதற்காகவே!

"நித்திரைதான் மிகச்சிறந்த தியானம்" என்பது தலாய் லாமாவின் கருத்து. "களைத்துப்போன மனங்கள் சரியாகத் திட்டமிடுவதில்லை. முதலில் நன்கு நித்திரை செய்யுங்கள். பின்னர் திட்ட மிடுங்கள்" என்று கூறினார் வால்டர் ரெய்ச். (Walter Reisch)எட்கார் அலன் போவின், பிட் அண்ட் த பெண்டுலம் (pit and the pendulum) என்ற சிறுகதையையும் ஒருமுறை படித்துப் பார்ப்போம் அறிகைச் செயற்பாடுகளாகிய ஞாபகம், குவியப் படுத்தல், ஒத்துணர்வு ஆகியவற்றை முன்னோக்கிச் தள்ளுகிற இன்னோர் விடயம் புதிய நூல்களை வாசித்த லாகும். புதிய தகவல்கள், சொற்கள், எண்ணக்கருத்துக் கள் ஆகியவற்றுக்கு அர்த்தம் தேடுதல் இதன்போது மூளையில் நடைபெறும். சிக்கலான உரைகளை விளங்கிக்கொள்ளும்போது மூளையில் ஏற்படும் பௌதிக ரீதியான மாற்றங்கள் முன்னேற்றகரமான தொடர்பாடல்களுக்கும், பிரச்சினைதீர்க்கும் திறமையை வலுப்படுத்துவதற்கும், அறிகைத் திறன்களின் வீழ்ச்சிக்கு எதிரான போராட்டத்திற்கும் உதவும். சம்பவங்களை அகக்காட்சிப் படிமங்களாக மாற்றிக்கொள்வதில் முன்னேற்றம் ஏற்படும். அறிகைத் திறன் வீழ்ச்சி வேகத்தை மட்டுப்படுத்தி அல் சைமரின் நோய் (Alzheimer's)அறளை ஆகிய வியாதிகளின் வருகைக்கான நிகழ்தகவைக் குறைக்கும். வலுவான மூளை ஒன்றின் தோற்றத்திற்கும் புதிய நூல்களின் வாசிப்பிற்கும் நிறையவே தொடர்பு உண்டு. தோமஸ் ஜெபர்சன், பிராங்கிளின் ரூஸ்வெல்ட், வின்ஸ்டன் சேர்ச்சில் போன்ற அரசியல்வாதிகளும் எலன் மஸ்க், பில் கேட்ஸ் போன்ற கண்டுபிடிப்பாளர்களும் ஏறத்தாழ எல்லா எழுத்தாளர்களும் நிறையவே வாசிப்பவர்கள்.

"புதிய மொழி ஒன்றைக் கற்பது என்பது உலகைப் பார்ப்பதற்கென இன்னொரு யன்னலைத் திறப்பதாகும்" என்பது ஒரு சீனப்பழமொழி. "புதிய மொழி என்பது உண்மையில் புதிய வாழ்க்கை" என்பது பாரசீகப் பழமொழி. சரித்திரத்திலே முப்பத்தெட்டுக்கு மேற்பட்ட மொழிகளைப் பேசக்கூடிய மனிதர்கள் வாழ்ந்திருக் கிறார்கள். எகிப்திய அழகியும் அரசியுமான கிளியோ பாட்ரா ஒன்பது மொழிகள் தெரிந்தவளாய் இருந்தாள். அவள் முதலில் கற்றது கிரேக்க மொழி.அதன்பின்னர் தான் எகிப்திய மொழி கற்றாள். தவிரவும் தனது நாட்டைச் சுற்றியிருந்த வேறு ஏழு மொழிகளையும் அவள் அறிந்திருந்தாள். புதிய மொழி கற்றல் என்ற விடயம் ஹிப்போகாம்பஸ், முன் நுதல் சோணை ஆகிய மூளைப் பகுதிகளில் சாம்பல் நிறப்பொருளைப் புதிதாக உருவாக்குகிறது. வயதானவர்கள் ஒரு புதிய மொழியைக் கற்றுக்கொண்டால் கூட அவர்களின் மூளைப் பகுதி களுக்கிடையில் தொழிற்பாட்டு ரீதியான தொடர்பு அதிகரிக்கிறது என்று ஆய்வுகள் காட்டுகின்றன. ஆகவே இன்னொரு மொழியைக் கற்கத்தொடங்குவோமா?

"இசைக்கருவி ஒன்றில் மனத்தைச் செலுத்து வது என்பது காதலில் வீழ்வது போன்றது. திடீரென்று உலகம் முழுவதும் பிரகாசமாய் மாறிவிடும்" என்று பகன்றார் வில்லியம் ஹண்டி .(William Christopher Handy) ஆம். புதிதாக இசைக்கருவி ஒன்றைப் பயிலத் தொடங்கு வது நரம்புத்தொகுதியின் தகவமைப்பை அதிகரிக்க வேறோர் வழியாகும் .மொழி ஒன்றைப் பயிலும்போது புரோக்கரின் பரப்பு (Brochar 's area )வெர்னிகாப் பரப்பு (Vernica 's area )ஆகிய மூளையின் பகுதிகளே அந்தக் கற்றலோடு தொடர்புபடும். இசையைப் பயிலும்போது மூளி, அமிக்டலா, தசை இயக்கக் கட்டுப்பாட்டு மூளையம், கடை நுதல் சோணை, ஹிப்போ காம்பஸ் போன்ற பல்வேறு பகுதிகள் தூண்டப்படும் என்பதால் லாபம் அதிகம்தான்.

தன்னைச்சுற்றி ஆதரவு தரும் சூழல் ஒன்றை அமைத்தால் எப்படி இருக்கும் என்று பார்ப்போம். அப்படியான சூழலை அமைத்துக்கொள்வது ஒரு திறமைதான். அந்தச் சூழலில் ஆளுக்காள் நம்பிக்கையும் மரியாதையும் இருக்கவேண்டும். அப்போது அங்கே எல்லோரும் உற்சாகப்படுத்தப் படுவார்கள். ஆதரவளிக் கப்படுவார்கள். அதேநேரம் சவால்களும் எதிர்நோக்கப் படலாம். அத்தகு சூழலில் எவ்வகைக் கற்றல் நடை பெற்றாலும் அது நேர் மனப்பாங்கை உருவாக்குவதாக இருக்கும். குடும்பத்தில் அனைவரும் ஒன்றாக அமர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிடுவது, விசேட தினங்களில் உறவினர் அனை வரும் ஒன்றாக உண்ணுவது, எல்லோரும் சேர்ந்து பாடுவது, சமயச் சடங்கு ஒன்றை எல்லோரும் இணைந்து செய்வது போன்ற செயற்பாடுகள் இத்தகைய ஆதரவுச் சூழலை உருவாக்கும் சிறந்த உதாரணங்களாகும்.

த வே துறூ த வூட்ஸ் (The way through the woods )என்பது றுட் யாட் கிப்ளிங் கின் (Rudyard Kipling) கவிதை ஒன்று. ஒரு காட்டிலே எழுபது வருடங்களுக்கு முன் ஒரு பாதை ஊடறுத்துச் சென்றது. இப்போது அதைக் காண வில்லை. காட்டைப் பராமரிப்பவருக்கு மட்டுமே அப்படி ஒரு பாதை இருந்த விடயம் தெரியும். இயற்கை எப்போதும் தனக்குச் சாதகமாக விடயங்களை மாற்றி விடும். மனிதத் தலையீட்டைக் கூடப் பொருத்தமான நேரத்தில் மறைத்துவிடும் திறமை இயற்கைக்கு உண்டு. மனிதனும் இயற்கையைப்போல தனக்குச் சாதகமான சூழலைத் தன்னைச் சுற்றி உருவாக்கும்போது நரம்புத் தொகுதியின் தகவமைப்பை முன்னேற்றிக் கொள் கிறான்.

ஆதரவான சூழல் சமூக ஊடாட்டத்தை வலுப் படுத்தும். புலன் அங்கங்களின் தூண்டல்களை மகிழ் விக்கும். புதிய கண்டுபிடிப்புகளையும் கற்றலையும் தூண்டி நரம்புத்தொகுதிசார் இரசாயனங்களில் மாற்றங் களை ஏற்படுத்தும். மூளையின் அமைப்பு, தொழிலியல் ஆகியவற்றிலும் ஏற்படும் மாற்றங்கள் அறிகைத்தொழிற் பாட்டிலும் தசை இயக்கத்திலும் சிறப்பைப் புகுத்து கின்றன. ஆதரவுச்சூழலில் கொடுத்து வாங்கும் பண்புகள், பாதுகாக்கும் உறவுகள், பாதுகாப்பானதும் உணர்வு ரீதியாக நிலைபேறுடையதுமான புறவெளி வளர்ச்சியைத் தூண்டுகிற சவாலான அனுபவங்கள் ஆகியவை உட் காவு நரம்புகளின் வளர்ச்சிக்கு அனுசரணையாக அமைந்துவிடுகின்றன ..

தொடர் கற்றலைத் தூண்டக்கூடிய சூழலை ஒருவர் தன்னைச் சுற்றி ஏற்படுத்திக்கொள்வது இன்னோர் வழியா கலாம். வயதானவர்கள் சிலர் எப்போதும் தம்மைச்சூழவும் பல வேறு வகையான, பலவேறு மொழிகளில் எழுதப்பட்டு மொழி மாற்றம் செய்யப்பட்ட நூல்களை நிறைத்துக்கொள்கிறார்கள். ஓவியத்தில் கடுமையான நாட்டம் உள்ளவர்களைச் சுற்றி எப்போது அதற்கான மூலப்பொருள்கள் இறைக் கப்பட்டிருக்கும். காதினூடாகச் சென்று மூளையைத் திருகும் இசை - பாரம்பரிய இசை மனதிலே தெளிவை ஏற்படுத்துகிறது என்பதும் நீண்டகாலம் பழகி வந்த இசை நெருக்கீட் டைத் தணிப்பதில் உதவுகிறது என்பதும் ஆய்வுகளில் நிரூபிக்கப்பட்டுள்ளன.- கண் களூடாக மூளைக்கு வேலைதரும் பொருள்கள் -மிக வித்தியாசமான நிறத்தில் பூத்த ஒரு பூவாகவும் இருக்க லாம் - தொடுகை மூலமோ அல்லது மணத்தின் மூலமோ புத்தம் புது அனுபவத்தை அள்ளித்தரும் பொருள்கள் போன்றவை ஒரு கதகதப்பான இரைச்ச லற்ற அமைதியான சூழலில் நரம்புத் தொகுதியின் தகவமைப்பை விரிக்கும். இத்தகு சூழல் மூளையில் தனித்துவமான மூலக்கூற்று மாற்றங்களை ஏற்படுத்தும். நியூரோ ட்ரோபின் (neurotrophin) என்ற புரத உற்பத்தியைத் தூண்டும் பொருளின் வெளிப்பாட்டை அதிகரிக்கும். பிள்ளைப்பராயமாயின் நுண்மதி விருத்தியிலும் உதவும்.

மூளையின் தகவமைப்பில் உதவும் இன்னொரு விடயம் புதிய கலாசாரங்களுக்குச் சென்று வாழ்ந்து பார்த்தல். ஒரு புதிய இடத்திற்குப் பயணம் செய்து, அவர்களின் பாரம்பரிய உணவை உண்டு ,அவர்களின் மொழியில் சில வார்த்தைகளைக் கற்று அங்குள்ள கிராம மக்களோடு பேசி அவர்களின் தனித்துவமான நம்பிக்கைகளை அறிந்து மீளும் அனுபவம் என்பது நெருக்கீட்டைத் தணித்து மூளையைப் புதிதாகத் தூண்டிவிடுவதில் பெரும் செல்வாக்குச் செலுத்தும். புதிய அனுபவங்களும் சவால்களும் தனி நபர் விருத்தியிலும் உதவும். மனச்சோர்வு போன்ற உள நோய்களைத் தடுப்பதில் புதிய இடங்களுக்கான சுற்றுலாக்கள் உதவுவதை மருத்துவ ஆய்வுகள் நிறுவியுள்ளன. புதிய அனுபவங்கள் உளச் சக்தியை உயர்த்துகின்றன. புதிய ஞாபகங்கள் கிளர்ச்சியை ஏற்படுத்துகின்றன .

பெர்டினனண்ட் மகலன்(Ferdinand Magellan) உலகை முழுவதுமாகச் சுற்றிவரலாம் என்று கண்டு பிடித்தபோது அவரின் தகவமைப்பு எவ்வளவு உயர்ந் திருக்கும்? பசுபிக் சமுத்திரத்தினுள் தேடி நியூஸிலாந்தைக் கண்டறிந்த ஜேம்ஸ் குக்கின் அனுபவம் எப்படி இருந்திருக்கும்? 1831 முதல் 1836வரை இயற்கை விஞ்ஞானியாக உலகை வலம்வந்த சார்ள்ஸ் டாவினின் தாவர விலங்கு இராச்சிய அவதானங்கள் கூர்ப்புக் கொள்கையை முன்வைக்குமளவு பெரிய அதிர்வை உலகில் ஏற்படுத்தியது .

சமூக அங்கத்தவரோடு இணைந்து சமூக சேவைகளிலும் செயற்றிட்டங்களிலும் இயங்குதல் உள நலத்தையும் உடல் நலத்தையும் ஒரு சேர உயர்த்தி மூளையின் தகவமைப்புக்கு ஒத்தடம் கொடுக்கும். அதன்மூலம் எப்போதும் ஒரு நல்ல மனநிலையில் இருக்க முடிவதுடன் நோயெதிர்ப்புச் சக்தியும் அதிகரிக் கிறது. வாழ்க்கையின் அர்த்தம் இன்னும் விசாலிக்கத் தொடங்குகிறது. தனிமை என்ற எதிரிக்கு இந்த நடவடிக்கை எதிரியாக அமைந்து மனச்சோர்வைத் தூரத் தள்ளிவிடும். ஓட்ஸிடோசின், செரடோனின் ஆகிய பதா ர்த்தங்களின் அளவு அதிகரித்து சந்தோஷத்தின் செறிவை உயர்த்திவிட்டுவிடும். சுய கணிப்பு உயர்வத னால் நெருக்கீட்டுக்கு எதிரான தாங்குதிறனும் அதிகரிக் கிறது. தொற்றா நோய்களின் தோற்றுவாய்க்கான சந்தர்ப்பம் குறைந்துபோகின்றது. சமூகச் செயற்பாடு களில் தொடர்ந்து ஈடுபடுபவர்களுக்கு "மறதிநோய்" வருவதற்கான சந்தர்ப்பம் குறைகின்றது. எங்களுக்கு அக்கறை உள்ள விடயங்களில் தொண்டராக இணைய லாம். மற்றவர்களோடு உணவைப் பகிர்ந்துண்ணலாம். விளையாடலாம். நெருக்கீடுகளைக் கையாளும் முறை களையும் தெரிந்து கொள்ளவேண்டும். செயற்படுத்தவும் வேண்டும். நெருக்கீட்டை வெல்வதற்கு மிகச் சிறந்தவழி மற்றவர்களின் நெருக்கீட்டில் உதவுதல் என்ற "அரிவரி"ப் பாடத்தையும் கற்றுக்கொள்வோம். நிறையவே நீர் அருந்துவோம். பிறகென்ன? எப்போதும் எமது மூளை இளமையாகவே இருக்கப்போகிறது.

(தொடருவோம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடுலாவு காதை பாகம் 2
நாவல் தொடர்

தமிழ்க்கவி

# காடுலாவுகாதை 2



37

ஆற்றங்கரைகளே உலகின் நாகரீகம் பரவிய இடங்களாக கணிக்கப்படுகிறது சிந்துநதி மொஹஞ்சதா ரோ, ஹரப்பா, நைல் என்பன போன்று மக்களை தங்கிவாழ வழி செய்தன நதிகள். காரணம் மனித வாழ்வுக்கு நீர் இன்றியமையாததாக இருக்கிறது.

வன்னியில் எங்காவது காட்டோரங்களில் ஒரு பொதுக்கிணற்றைக்கண்டால் அதில் சில குடும்பங்கள் கொட்டகை அமைத்தன. அதேபோல குளங்களையும் பெரு வாய்க்கால்களையும் அண்டியதாக பெரிய குடியிருப்புகள் அமைந்தன. சந்தை வாய்ப்புகள் பாடசாலை வைத்தியசாலை என்பனவும் மக்களை குவித்தன. மக்களை சுகாதார பழக்கவழக்கங்களுக்கு கொண்டு செல்லவும் தொண்டு நிறுவனங்கள் செயற்பட்டன. கழிப்பறைகளே இல்லாத இடங்களில், காடுகள் பற்றைகள் தேடிப்போவோர் கண்டிப்பாக ஒரு மண் வெட்டியை கொண்டு சென்றார்கள். குழிவெட்டி அதில் மலங்கழித்தபின் மூடிவிடக்கற்றுக் கொண்டார்கள் காடுகளைக்குடைந்து அதற்குள் நிழலமைத்து தங்கிய மக்கள் அதிகம். புனைமரங்கள் எதிலும் ஓலைகள் இல்லை தென்னைமரங்களுக்கு உரிமையாளர்கள் இருந்ததால் அவை தப்பித்துக் கொண்டன. அவற்றை விட பல குடியிருப்பாளர்களுக்கு உதவிவழங்கும் நிறுவனங்கள் தரப்பால் கூரைகளை கொடுத்து உதவியது. வன்னியில் ஏராளமான நிலப்பரப்பைக் கொண்ட விவசாயிகள், தமது நிலங்களில் இந்தமக்கள் வாழ இடம் கொடுத்தனர். வாகன தரிப்பிடங்கள், காவற் கொட்டகைகள், தரிசாக கிடந்த நிலங்கள் எல்லா வற்றிலும் அகதிகள் நிறைந்தனர்.

விடுதலைப்புலிகளின் முகாம்கள் ஒரு குறுகிய நிலப்பரப்புள் இருந்தது போலன்றி. மிகப்பரந்த பிரதேசத்தில் வேர் விட்டது. பிரதான முகாமான திலீபன் முகாம் புதுக்குடியிருப்பிலும் அதே வேலைகளின் பெண்கள் அரசியற்றுறை மாங்குளத்திலும் நிலை கொண்டது கல்விக்குழு மந்துவில்லிலும் நீதித்துறை, புலிகளின்குரல், என்பன கிழவன்குளம், கிளிநொச்சி என நிலை கொண்டதுடன் தமது சேவைகளையும் ஆரம்பித்தன. புதுக்குடியிருப்பில் காவற்றுறையும் தர்மபுரத்தில் வெளியீட்டுத்துறையும் அமைந்தன. ஒலிபரப்பில் மாங்குளம் பயன்பட்டாலும் ஒலிபரப்புக்கு கொக்காவில் பிரதேசமே உகந்ததாக இருந்தது. இன்னும் மறுவாழ்வில்லங்களான செஞ்சோலை, காந்தரூபன் அறிவுச் சோலை, நவம் அறிவுக்கூடம், முதியோர் காப்பகம் மனநலம் குன்றியோர் பாராமரிப்பு நிலையங்களும் பொருத்தமான இடங்களில் அமைந்தன. முத்தையன்கட்டுக்கும் கூழாமுறிப்பு தண்டணீரூற்று குளவிசுட்டான் வரையான பெருவனம் ஆங்காங்கோ வீதிகளால் துண்டாடப்பட்டாலும், யானைகளும் மான் மரை பன்றிகள் போன்ற விலங்குகள் அவற்றை தமது நிலமாகவே கொண்டு திரிவதால் சில வேளை பகலிலும் அவை ஆபத்தான பாதைகளாக தெரிந்தன. இங்கே இந்த பெருவனப்பகுதியில் சிறு சிறு துண்டுக்காடுகள் அழிக்கப்பட்டு அவற்றில் தேக்குமரங்கள் பயிரிடப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தன.

அது ஒரு மாசிமாதம். கிளிநொச்சியில் முக்கியமான முகாம் இருந்தாலும் நிர்வாகம் ஓமந்தைவரை இருப்பதால் மாங்குளத்தில் ஒரு முகாம் அமைக்கும் வேலையை லெச்சிமியை செய்து தரும்படி கேட்டாள் தணிகைச்செல்வி. அதற்கான நிலம் மாங்குளம் முல்லைத் தீவு வீதியில் அமைந்துள்ள பிள்ளையார் கோவிலின் பின்பக்கமாக தெரிவு செய்யப்பட்டது. சீமெந்து இல்லை ஆனாலும் அந்த முகாமை கல்வீடாக கட்ட முனைந்தனர். எனவே பண்டைய நடைமுறைகளை கையாண்டு கட்டடம் கட்ட முடிவாயிற்று. முதலில் லெச்சிமியின் மிதிவண்டி ஒட்டிசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலைக்கு சென்றது. அங்கே கட்டடத்தின் அளவைக்குறித்து உரையாடியபடி ஓட்டைச்செங்கற்கள் ஆயிரமும், கூரை ஓடுகள் ஆயிரமும் பேசி தீர்மானிர்த்தனர். ஓடு வேக இன்னும் இரண்டு மூன்று நாட்களாகும். பாரிய யந்திரத்தில் வேலை செய்த அந்த தொழிற்சாலை இப்போது கரியிலும் விறகிலும் இயங்கிக் கொண்டிருந்தது. பாரிய போறணைகளிலிருந்து அனல் விசிக் கொண்டிருந்தாலும் அதனுள் வேலை செய்யும் தொழிலாளர்கள் சளைக்காது போராடிக் கொண்டிருந்தனர். பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அந்த வேலையை செய்து கொண்டிருந்தது.

அங்கிருந்து திரும்பி வரும் வழியில், எட்டாங் கட்டையில் அமைந்துள்ள மரக்காலைக்கு சென்றாள். கொஞ்சம் உள்ளே காட்டினுள் பாதுகாப்பாக இருந்த அந்த முகாமினுள் அவள் சீருடையில் இருந்தாலும் பரிசோதிக்கப்பட்டும் அவளுடைய முகாமிற்கு தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திய பின்னர்தான் அவளுக்கு பொறுப்பாளரை சந்திக்க முடிந்தது. என்றாலும், அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவளைக்கண்டதும், முகமலர்ந்து வாயெல்லாம் பல்லாக எழுந்து வந்து வரவேற்றான். "அன்ரீ நீங்களா?.. வாங்க வாங்க இவங்கள் சும்மா விட்டிருக்க மாட்டாங் களே மன்னிச்சுக் கொள்ளுங்கோ அன்ரி நடைமுறை..." என்று அவன் இழுக்கவே, "இல்ல இல்ல பரவாயில்ல இதெல்லாம் தெரிஞ்சகதைதானே" என்றாள்.

"டேய் மாறன் சடடெண்டு கிச்சினுக்குப் போய் ஒரு ரீ எடுத்துக் கொண்டா... கெதியா" என்றான்.

"அன்ரி சொல்லி வேலையில்ல போனகிழமை ரொப் நிகழ்ச்சியன்ரி... எங்க திரட்டுறியள் உவள விசயத்தை" என்றான் ஆச்சரியத்துடன். அவனது சொந்த இடம் இப்படியான நாட்டார்கலைகளுடன் சம்பந்தப் பட்டிருக்க வேண்டும். அப்போது லெச்சிமி புலிகளின் குரலில் "குயிலோசை" என்ற நாட்டார்கலை நிகழ்ச்சியை செய்து கொண்டிருந்தாள். வாராந்தம் வியாழக் கிழமைகளில் ஒலிபரப்பானது. ஏராளமான ரசிகர்களை கொண்டிருந்த நிகழ்ச்சி அது. ஒரு போராளி தேநீர் கொண்டு வந்தான். லெச்சிமிக்கு அது மிகவும் தேவை யானதாக இருந்தது. மகழ்ச்சியுடன் வாங்கிய வாறே "உங்களுக்கு" என்றாள்.

"இப்பதான் குடிச்சநான்" என்ற வாறே காலியாக இருந்த குவளையை காட்டினான். அவள் தேநீரை அருந்தியபின் தான் வந்த காரணத்தை சொன்னாள். அவன் மகிழ்ச்சியுடன், மரங்களின் அளவையும் விலை களையும் குறித்து தந்தான். லெச்சிமி விடை பெற்றாள்.

அவள் மாங்குளம் வந்து சேர்ந்த போது ஆறு மணியாகிக் கொண்டிருந்தது. அதுவரை அவள் எண்பது கிலோமீட்டருக்கும் அதிகமாக மிதிவண்டி ஓடி விட்டாள். தொடர்ந்து கிளிநொச்சிக்கு போய் மீண்டும் காலையில் திரும்ப வேண்டும் வேலையாட்கள் ஒழுங்கு செய்ய வேண்டும். முதலில் ஒட்டிசுட்டான் தொழிற் சாலையிலிருந்து கல் ஏற்றுவதற்கான வாகனம் வேண்டும். அதற்கான ஒழுங்குகளை செய்ய அவள் ஓமந்தைக்கு போக வேண்டும். அவர்களிடம் தொலைத் தொடர்பு வசதிகள் எதுவுமில்லை. நேரில் சென்றுதான் எல்லாவற்றையும் பார்க்க வேண்டும். எனவே, அவள் மிதி வண்டியை கிளிநொச்சி நோக்கி செலுத்தினாள். இரவு எட்டுமணிக்கெல்லாம் அவள் கிளி நொச்சியி லிருந்தாள். கைகால்கள் அவளுடைய உடலை கீழே போடுமாறு நிர்ப்பந்தித்தன. அவள் பொறுப்பாளரின் அறையில் நுழைந்து பாயை விரித்தாள். உறங்கியும் போனாள். முறிகண்டியில் கச்சான்கடை அப்பா கொடுத்த தோசைகள் அவளை உறங்க அனுமதித்தன. காலையில் நேரங்கழித்தே எழுந்தவளை தணிகைச் செல்வி கோபித்துக் கொண்டாள். "ஏன் கிழவி சாப்பிடாம படுத்தனீ எழுப்பிப்பாத்தா எழும்பிறா யில்லை பின்ன விட்டிட்டன்" என்றாள்.

"நான் முறிகண்டியில சாப்பிட்ட நான்" என்று அவளை சமாதானப்படுத்தினாள். தொடர்ந்து இண் டைக்கு வாகனம் பிடிக்க ஓமந்தைக்கு போகோணும் கல்லுக்கு காசு குடுத்தாச்சு இனி ஓட்டுக்கு காசு குடுக்க வேணும். வேலையாட்களும் பிடிக்க வேணும்."

"இண்டைக்கு ரெஸ்ற் எடுத்திட்டு நாளைக்குப் போகலாம்" என்றாள் அவள்.

"தங்கள் சித்தம் அடியேன் பாக்கியம்" என்றாள் லெச்சிமி.

காலையில் ஓமந்தை தடுப்பு முகாம் பொறுப் பாளரை சந்தித்தாக வேண்டும். அதுவும் நேரத்தோடு போகாவிட்டால், வாகன பட்டியல் முடிந்து போகும் அடுத்த தவணைக்கு காத்திருக்க வேண்டும். என அவள் மனதுக்குள் திட்டம் போட்டாள். அதென்ன வெள் ளெண போறது என்று சந்தேகம் கேட்டால், நடைமுறை தெரிய வேண்டும். வன்னிப்பகுதிக்குள்ளிருந்து நாளாந்தம் பொருட்கள் ஏற்ற, நாற்பது ஐம்பது லொறி களே உள்ளே அனுமதிக்கப்படும். அதேயளவு லொறிகள் தான் பொருட்களோடு உள்ளே வரும். இந்த அனுமதியை இயக்கம் வழங்குமுன் அந்த லொறி இயக்கத்தின் தேவைகளுக்காக இரண்டு தினங்களாவது வேலை செய்ய வேண்டும். இந்த வேலைசெய்வதை ரேணுக்கு ஓடுறது என்பார்கள் அப்படி "ரேண்" (தவணை) கிடைக்காத லொறிகள் உள்ளே போகமுடியாது. அப்படி ஒரு லொறியை கல் ஏற்றுவதற்கு பெற அந்த சோதனைச் சாவடிப் பொறுப்பாளரை கண்டு அனுமதி பெற்று அவர் தருகின்ற வாகனத்துடன் கல் ஏற்ற செல்ல வேண்டும்.

ஒரு லேடன். லொறியுடன் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு சாரதி அவளுடன் ஒட்டிசுட்டானுக்கு வந்தார். அவருடைய உணவு தேநீர் என்பவை மட்டுமே அவள் கவனித்தாள். வாகன எரிபொருளும் ஏனைய செலவும் வாகன உரிமையாளருக்கே. அன்றிரவு கல் ஏற்றிய வாகனம் மாங்குளம் வந்தடைந்த போது நள்ளிரவாகி விட்டது. கல் இறக்குவதற்கு ஆட்கள் இல்லை எனவே விடியும்வரை அவள் பிள்ளையார் கோவிலில் உறங்கவேண்டியதாயிற்று. (தொடரும்)

# ஏகாந்த வெறுமை

அண்டவெளியில்
யாத்திரை செல்லும்
மனக்குதிரைக்கு
இயற்பியல் விதிகள்
ஒரு போதும்
கடிவாளம் இடுவதில்லை.

அப்பப்போ
தோன்றி மறையும்
ஏகாந்த வெறுமையை
தோற்கடிக்க
முடிவில்லாத் தொலைவில்
தோன்றி மறையும்
நட்சத்திரப் பூக்கள்
மனத்திரையில்
கண்சிமிட்டின.

இதயராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
யாழ்ப்பாணம்

## குரு அரவிந்தன் வாசகர் வட்டம்



இனிய வாசகர்களுக்கு வணக்கம்.

கனடாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது பெறும் எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களை முதற்கண் வாசகர் வட்டத்தின் சார்பாக வாழ்த்துகின்றோம். தமிழ் எழுத்தாளர்களிலே அதிக வாசகர்களைக் கொண்ட எழுத்தாளர்களில் ஒருவரான, தமிழ் இலக்கிய உலகில் சர்வதேசப் புகழ் பெற்ற எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களை வாழும்போதே வாழ்நாள் சாதனை விருது கொடுத்துக் கௌரவிக்கும் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தைப் பாராட்டுகின்றோம்.

புலம்பெயர்ந்து வந்த கனடா நாட்டிலே கடந்த 37 வருடங்களாக எங்கள் தமிழ் மொழி நிலைத்து நிற்பதற்கு இரவு பகல் பாராது தன்னலமற்ற இவரது தன்னார்வத் தொண்டர் பணி பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். தமிழ்நாட்டுப் பிரபல இதழ்களிலும் கனடா, இலங்கை, இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், மலேசியா, அவுஸ்ரேலியா போன்ற சர்வதேச நாட்டு இதழ்களிலும் இவரது ஆக்கங்கள் தொடர்ந்தும் வெளிவருவதால் சுமார் இரண்டு கோடிக்கும் மேற்பட்ட வாசகர் களைத் தனக்காக உருவாக்கி இருப்பதையிட்டுப் பெருமைப் படுகின்றோம்.



இதோ இவரைப்பற்றி எழுத்தாளர் அ. முத்துலிங்கம் குறிப்பிட்ட சில வரிகளை இங்கே தருகின்றோம்.

'குரு அரவிந்தன் பலராலும் அறியப்பட்ட எழுத்தாளர். எட்டு சிறுகதை தொகுப்புகள், எட்டு நாவல்கள், நான்கு ஒலிப்புத்தகங்கள், நாடகங்கள், சினிமா கதை, வசனம், சிறுவர் இலக்கியம் என இதுவரை நிறையவே படைத்திருக்கிறார். இலங்கை, இந்தியா, கனடா, அமெரிக்கா, ஐரோப்பா நாடுகளில் இவருக்கு அறிமுகம் தேவையில்லை. அவருடைய வாசக வட்டம் உலகளாவியது. தமிழ்நாட்டின் புகழ்பெற்ற வருடாந்த மலர்களில் இவருடைய புனைவுகள் பலதடவை வெளிவந்திருக்கின்றன. புனை கதைகள் பல பிறமொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு பாராட்டைப் பெற்றிருக்கின்றன. விகடன், கலைமகள், ஜனகன் பிக்ஸேஸ், கனடா கவணர் விருது, முதல்வர் விருது உள்ளிட்ட பல பரிசுகளையும், விருதுகளையும் பெற்றிருக்கிறார்.



எனக்குக் கிடைத்த குரு அரவிந்தனின் புனைவுகளைப் படித்தபோது எனக்கு ஐஸ்கிறீம் சாப்பிட்ட அனுபவம் கிடைத்தது. முடிந்துவிடுமோ என்று அடிக்கடி மீதிப் பக்கங்களை எண்ணிப் பார்க்க என்னைத் தூண்டியது. படித்தால் முடிந்துவிடும், ஆனால் படிக்கவேண்டும் என்ற ஆவல் மனதை நிரப்பியிருக்கும். புனைவுகளில் சுவை முக்கியம். அதனிலும் முக்கியம் அவை வரலாற்றின் ஒரு கூறை பதிந்து அதை அழியவிடாமல் காப்பது. எங்கள் சரித்திரத்தை அவை நினைவூட்டிக்கொண்டே இருக்கும். இந்த இரண்டும் குரு அரவிந்தன் படைப்புகளில் நிறைந்து கிடக்கின்றன. கனடாவில் குரு அரவிந்தன் சோர்வடையும் நேரம் இதுவல்ல. இந்த வேகம் குறையாமல் இன்னும் பல வருடங்கள் அவர் தொடர்ந்து எழுத என் வாழ்த்துக்கள்.'

சுலோச்சனா அருண், செயலாளர்
குரு அரவிந்தன் வாசகர் வட்டம்.

இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாமணி பரணீதரன் அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org